
யார் இவர், தெரிகிறதா?
பார்க்க - பக். 57
KALKI 28.9.97
கல்கி
ரூ. 4.00
சின்னத்திரை இவரிடம்
சிக்கிக் கொண்டது!


SunLine
Super - Refined 100% Sunflower Oil
ஹா! ஹா! மெழுகுத்தன்மையிலிருந்து
எனக்கு முற்றிலும் விடுதலை!
Free from solvent extracts • Vitamin 'E' enriched • Anti-Cholesterol
SSD Oil Mills Co. Ltd., Chennai - 600 056.

கல்யாண வைபோகம்

பாராட்ட வேண்டிய விஷயங்களுக்குப் பஞ்சமில்லை. அங்கே இங்கே என்று அலை பாயாமல் கதையை நேர்க்கோடாக எடுத்துச் சென்றிருக்கிறார் இயக்குனர் ரத்தினம். இரு நாயகிகளின் பாத்திரங்களும் செதுக்கி விட்டது போல் அமைந்துள்ளன. (ஜாக்கி ஷெராஃப், அம்ருதாசிங், ஜூஹி நடித்த 'ஆயினா'வுக்கும் பாராட்டு)

தாயை இழந்த குஷ்பூ. அவரது தகப்பனார் மறுமணம் செய்து கொள்கிறார். 'சித்தித்தனம்' இல்லாத அந்த சித்திக்கு (முன்னாள் நாயகி கவிதா) சங்கீதா பிறக்கிறார். 'அக்கா எது கேட்டாலும் விட்டுக் கொடு' என்று கூறியே வளர்க்கப்படுகிறார் சங்கீதா. ஒரு கட்டத்தில் குஷ்பூ அவரிடம் கேட்பது அவரது கணவர் ராம்கியை!

வில்லத்தனம் கலந்த ஈகோ நிறைந்த பாத்திரத்தை ஏற்ற துணிச்சலுக்காக குஷ்பூவைப் பாராட்டலாம். ஆனால் நிறைய வாய்ப்பு இருந்தும் சில காட்சிகளில் மட்டுமே நடிப்பாற்றலை வெளிப்படுத்துகிறார்.

தாழ்வு மனப்பான்மையில் தவிக்கும் ரோலில் சங்கீதா அனாயாசமாகப் பொருந்துகிறார். பெற்றோர் உசுப்பேற்றிய பிறகு அக்காவிடம் பொங்கியெழும்போது கூட, கோபத்தைவிட வருத்தமே அதிகம் வெளிப்படுவது பாத்திரத்துக்குப் பொருந்துகிறது.


குஷ்பூவுக்குத் தன்னிடம் உள்ளதொன்றும் அமரக் காதல் அல்ல என்பதை ராம்கி உணர்த்தும் காட்சியும், 'உங்கள் வளர்ப்பு முறை தவறு' என்று மாமியாரிடம் சாடும் காட்சியும் கச்சிதம். ஆனால் இடைவேளைக்குப் பிறகு வரும் குஷ்பூ-சங்கீதா காட்சிகளின் வசனங்களில் நிறைய ஜவ்வு.

'கே. பாலசந்தருக்கு நன்றி' என்கிறது டைட்டில் கார்டு. 'அண்ணாமலை' படக்காட்சியைப் பயன்படுத்திக் கொண்டதற்கு அந்த நன்றி. ஆனால் நமக்கென்னவோ தாமரை நெஞ்சம் கிளைமாக்ஸை அப்படியே 'சுட்டுக்' கொண்டதற்குதான் அந்த நன்றி என்று தோன்றுகிறது.

வாங்கிய கடனைக் கொடுக்காமல் வித விதமாக டபாய்க்கும் வெ.ஆ.மூர்த்தி- சுந்தர் ராஜன்-வடிவேலு கூட்டில் அவ்வப்போது சிரிக்க முடிகிறது.

கொஞ்சம் நறுக்-சுருக்காகக் கையாண்டிருந்தால் தொய்வின்றி ரசித்திருக்கக் கூடிய படம்.

— ஜி.



◆ சமையலுக்கு உபயோகப்படுத்த முடியாத, வேக வைத்த உருளைக் கிழங்குத் துண்டுகளால் முகம் பார்க்கும் கண்ணாடியைத் துடைத்துப் பாருங்கள்... பளிச்! (மேலும் வீட்டுக் குறிப்புகள் அடுத்தடுத்து...)



நான் மட்டும்தான் சும்மா இருக்கிறேன்!



"இன்னும் சில சினிமா நட்சத்திரங்களையும், இந்த நிகழ்ச்சிக்கு அழைத்து வரும் பொறுப்பை எனக்குக் கொடுத்திருந்தார்கள். இப்போது, சினிமா ஷூட்டிங் மறுபடி ஆரம்பமாகி விட்டதால், எல்லா நட்சத்திரங்களும் பிஸியாகி விட்டார்கள். நான் ஒருவன்தான் சும்மா இருப்பவன். எனவே வந்து விட்டேன்!" என்று ஜோக் அடித்தாலும், சீரியஸாக பத்தாயிரம் ரூபாய்க்கான செக்கை, தன் பங்குக்கு நன்கொடையாக வழங்கினார், நரைத்த தாடியுடன் டைரக்டர் கே. பாலசந்தர். (தாடி ஏன் திடீரென்று?)

மியூஸிக் அகாடமியில், தேவாவின் இன்னிசை நிகழ்ச்சியின் இடையே இது நடந்தது.

"மியூஸிக் அகாடமியின் வரலாற்றிலேயே, எதற்கும், யாருக்கும் ஆடிடோரியத்தை இலவசமாய்க் கொடுத்தது கிடையாது. ஆனால் இன்று இந்த நிகழ்ச்சிக்காக வழங்கியிருக்கிறோம்" என்றார் மியூஸிக் அகாடமியின் தலைவர் டி. டி. வாசு.

தேவாவின் இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்கள் இன்டர்ஆக்ஷன் டிரஸ்ட் என்ற அமைப்பினர். அந்த டிரஸ்ட் பற்றிக் கூறுகிறார்கள் பிரபல மனநல மருத்துவர்களான மாத்ருபூதமும், பாஷ்யமும் :

200 ஆண்டுகள் பழைமையானது கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனை. அங்கே தினமும் நூற்றுக்கணக்கில் புதிய நோயாளிகள் வருகிறார்கள். இத்தகைய மனநோயாளிகளின் பிரச்னைகள் ரொம்ப விசித்திரமானவை. வருகிற நோயாளிகளை, நாங்கள் முதலில் புறநோயாளியாகப் பரிசோதித்து, அதன்பின்தான் மருத்துவமனையில் அக நோயாளிகளாய் சேர்த்துக் கொள்ளுவது வழக்கம்.

இவருக்கு 25+2 மனைவிகள்

ஃபெலா அனிகுலபோ குடி — இந்த ஆப்பிரிக்க இசைக் கலைஞர் சமீபத்தில் இறந்த போது அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்தைத் தாண்டிவிட்டதாம்.

உயிருடன் இருந்த காலத்திலும் பலவித காரணங்களுக்காக தொடர்ந்து செய்தியில் இடம்பெற்று வந்தார் இவர்.

'ஆஃப்ரோ பீட்' என்ற வித்தியாசமான தாள வகையைக் கொண்டு இவர் அமைத்த இசை மிகப் பிரபலம். இசை மட்டுமல்ல; அந்தப் பாடல்களையும் இவரேதான் இயற்றுவது வழக்கம். இந்தப் பாடல் வரிகளுக்காக அடிக்கடி சிறைசென்றிருக்கிறார் இவர். காரணம் விடுதலை வேட்கை நிரம்பிய வரிகள் அவை. அரசுக்கு எதிராக இவை அமைந்ததால் அந்த சிறை வாசம்!

காட்சிக்கு ஏதோ காட்டுவாசி போல அவ்வப்போது தோற்றமளித்தாலும் இவர் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் உள்ள ட்ரினிட்டி இசைக் கல்லூரியில் மூன்று வரு



✦ ஷேவ் செய்தபின் பிரஷ்ஷில் மீதமுள்ள சோப்பு நுரையை பிளாஸ்டிக், ரப்பர் செருப்புகளில் தேய்த்துக் கழுவுங்கள்... அவை புதுப் பொலிவு பெறும்!



வெளியூர்களிலிருந்து நோயாளிகளுடன் வருபவர்கள், விடுதிகளில் தங்குமளவுக்கு வசதி படைத்தவர்கள் அல்ல. மனநலம் குன்றியவர்களுடன் வருபவர்களை சென்னையில் உள்ள அவர்களது உறவினர்கள் தம் வீட்டில் தங்க வைக்கவும் யோசிக்கிறார்கள். இதனாலேயே பலரும், சென்னைக்கு அழைத்து வந்து மனநல மருத்துவம் பார்க்க சிரமப்படுகிறார்கள்; தயங்குகிறார்கள்.

இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணும் பொருட்டு அமைக்கப்பட்டதுதான் இன்டர்ஆக்ஷன் டிரஸ்ட். அரசாங்கம் இந்த டிரஸ்ட்டுக்கு மனநல மருத்துவமனையையொட்டியே இருபத்தைந்து ஏக்கர் நிலத்தை வழங்கியுள்ளது. அந்த இடத்தில் வெளியூர்களிலிருந்து நோயாளிகளை அழைத்து வரும் குடும்பத்தினர் தங்க இடவசதி செய்து தரப்போகிறோம். அது மட்டுமில்லை. அந்தக் குடும்பத்தினர் அங்கேயே சமைத்துச் சாப்பிடவும் வசதி இருக்கும். இந்த வசதியை இலவசமாய் அளிக்கப் போகிறோம் என்பது முக்கியம். இதற்கு மொத்தம் இரண்டு கோடி ரூபாய் ஆகும்."

தன் நிகழ்ச்சியை சலுகை ரேட்டில் நடத்திக் கொடுத்தது மட்டுமின்றி ஐம்பது ஆயிரம் நன்கொடையும் தந்தார் இசையமைப்பாளர் தேவா.

- கௌதம்



டங்கள் படித்தவர்!

திடீரென்று ஒருநாள் தன் குழுவில் கோரஸ் பாடும் இருபத்தி ஐந்து பெண்களையும் ஒரே நேரத்தில் திருமணம் செய்து கொண்டார்.

"இவரைக் கணவனாக அடைய நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்று கோரஸாகக் கருத்து தெரிவித்தார்களாம் அத்தனை பேரும். இவர்களைத் தவிர வேறு இரண்டு மனைவியரும் அவருக்கு உண்டு. உலகின் எந்த இடத்தில் தனது இசை நிகழ்ச்சி நடந்தாலும், கூடவே தனது 27 மனைவிகளையும் அழைத்துச் செல்வது இவரது வழக்கம்.

லாகோஸ் நகரில் இவர் மரணமடைந்தார். மரணத்திற்குக் காரணம் – எய்ட்ஸ்!

- ஜி.எஸ்.எஸ்.

• ஃபெலா

ஒரு பிரேமானந்தா ஊரைக் கலக்கியது போதாதென்று இன்னொரு ஜான் ஜோசப். அதுவும் போதாதென்று திருச்சியில் வேறொரு சாமியார், உள்ளேன் ஐயா என்கிறார். இந்தக் 'காதல் சாமியார்கள்' ஒரு பக்கம் புற்றீசல் போலப் பெருகிக் கொண்டிருக்க, மறுபுறம் 'முனிவர்'களும் 'பகவான்'களும் புதிய புதிய 'பாபா'க்களுமாகப் பிறிதொரு 'ஆன்மிக'ப்(!) புரட்சி கோஷ்டி.

சாமியார், துறவியாகத்தான் இருக்க வேண்டும் என்றெல்லாம் கருதாமல் வீடு, மனைவி, மக்களுடன் ரியல் எஸ்டேட், ஷேர் மார்க்கெட், உப்பு புளி வியாபாரங்களுடன் 'ஆன்மிக சேவை'யை பார்ட்டைமாக வைத்துக் கொண்டிருப்பவர்களும் இன்று அநேகம். பத்திரிகைகளும் தனியார் டி.வி.க்களும் இன்று இவர்களுக்கு நல்ல விளம்பர சாதனங்களாகி விட்டன.

இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பு கூட நிலைமை இத்தனை முற்றியிருக்கவில்லை! ஆங்காங்கே சாமியார்களும் அடியார் கூட்டமும் இருந்தாலும் இத்தனை சந்தி சிரிக்கிற விஷயங்கள் அபூர்வம்.

இன்று, இந்தப் போலிச் சாமியார்களின் முக்கிய இலக்கு தாய்க்குலமாக இருக்கிறது.

பெருகும்




இதில் படித்தவர், படிக்காதவர் என்ற வேறுபாடே இல்லை. எத்தனை போலிச் சாமியார்கள் பற்றி விவரம் வந்தாலும் அவரவர் தம் ஆதர்ச சாமியார்களைக் கைவிடுவதாக இல்லை.

தம் கவலைகளை இறக்கி வைக்க மக்களுக்கு முன்பு கடவுள் மட்டும் போதுமானவராக இருந்தார். இப்போது ஒரு மனுஷ ரூபம் வேண்டியிருக்கிறது. "தனக்காகக் கவலைப்பட, தனக்கு நல்லது செய்ய, தன் பொருட்டு சிந்தித்து, நல்வழி கூற ஒரு மகான் கிடைக்கிறாரென்றால் அது பெரிய வரம் என்று நினைக்கிறார்கள். தன்னம்பிக்கை மிக்கவர்களுக்கு இந்த சாய்மானம் தேவைப்படு கிறதில்லை" என்கிறார்கள் மனவியல் வல்லுநர்கள். இதை எதிரொலிப்பது போல் பேசு கிறார் அஞ்சல் துறை ஊழியர் கணேசன் :

ஒரு பரபரப்பான ஆசிரமப் பெயர் சொல்லி, "மனநிம்மதிக்காக நான் ஆசிரமம் போவதுண்டு. அவர் கடவுளா, கடவுளின் பிரதிநிதியா என்பது பற்றியெல்லாம் நான் ஆராய்வதில்லை. அங்கு போவதால் எனக்கு நிம்மதி கிடைக்கிறது. அந்த நிம்மதி, அவர் தருவதுதானா, அல்லது நானே எனக்கு வழங்கிக் கொள்வதா என்று தெரியவில்லை. எப்படியும் நிம்மதி கிடைத்து விடுகிறது. அது போதாதா?" என்று கேட்கிறார்.

விஷமக்காரக் குழந்தைகள் இருக்கும் வீட்டில், மடக்கு நாற்காலிகளை - உபயோகிக்காத நேரத்தில் - சுவர் ஜன்னலோடு சணலால் கட்டிவைத்தால் விபத்து தவிர்க்கப்படும்.



ஆறுதல் தேடித் தம்மிடம் வருபவர்களை அமைதிப் படுத்தி, நல்வழிகாட்டும் பணியில் நல்ல பல சாதுக்கள் ஈடுபட்டு வந்ததும், இப்போதும் ஆங்காங்கே மிகச் சிலர் அப்படியாக இருப்பதும் நடந்த, நடக்கிற விஷயங்கள்தாம். ஆனால் போலி களின் பெருக்கத்தில் அவர்களின் இடமே தெரியாமல் போய்விடு கிறதென்பது உணரப்பட வேண்டும்.

"குருமார்கள் பலவிதம். ஆனால் நாம் யாரை நம் வழிகாட்டியாகத் தேர்வு செய்கிறோம் என்பதில்தான் இருக்கிறது. அதற்கு நம் உள்ளுணர்வு சரியாக இயங்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை என் உள்ளுணர்வு இதுவரை என்னை ஏமாற்றிய தில்லை..." என்கிறார் தமது மதகுரு ஒருவரிடம் மிகுந்த நம்பிக்கையும் ஈடுபாடும் வைத்துள்ள இரேட்டா.

"வேலூரில் ஒரு சாமியாரிடம் போனேன்" என ஆரம்பிக்கிறார் திருமதி பாலசுந்தரம். "அவரது சிஷ்யர் என்னிடம், 'முப்பது ஞாயிற்றுக் கிழமைகள் தவறாமல் வந்தால் உங்களுக்கு நன்மை கிட்டும். வரத் தவறினால் கெடுதல்கள் நேரும்' என்று பயமுறுத்துவது போல எச்சரித்தார். பயந்து போய், ஏன் வம்பு என்று அடுத்த முப்பது ஞாயிறுகளும் அங்கே போய் வந்தேன்! ஆனால் பக்தி, மரியாதை எல்லாம் போய்விட்டது! வெறும் பயம் தான். பிறகு இந்தப் பழக்கத்தையே விட்டு

• பிரேமானந்தா



• ஜான் ஜோசப்



போலிச் சாமியார்கள்!

உள்ளுணர்வு என்பது எல்லோருக்கும் சரியாக அமைந்து விடுமா? அதை யார், எத்தனை தூரம் நம்புவது? போலிச் சாமியார்களை அடையாளம் காண்பது எப்படி?

இரண்டே விஷயங்கள். 1. மக்கள் சேவைக்கு, மகேசன் சேவைக்கு என்று சொல்லி நன்கொடை கேட்கிறார்களா?

2. நிறைய பெண்களைக் கவர்ந்து இழுக்கிறார்களா?

– கண்ணை மூடிக் கொண்டு சொல்லி விடலாம். போலிகளென்று!

விட்டேன்" என்கிறார்.

இந்தப் பக்குவம் வரும் வரையிலான காலகட்டமே போலிச் சாமியார்களுக்கு ஆதாயமாக இருக்கிறது. தவிர, எல்லோருக்கும் பக்குவம் ஏற்படுவதுமில்லை.

"இளவயதில் எனக்கு நாலைந்து சாமியார்கள் மேல் பக்தி உண்டு. ஆனால், 'வயதும் அனுபவமும் கூட, ஒரு பக்குவம் வரும்; வரவேண்டும். இறைவனை அடைய 'மீடியேட்டர்கள்' வேண்டாம் என்கிற பக்குவம் இப்போது எனக்கு வந்துவிட, யாரிடமும் போவதில்லை..." – இது வங்கி ஊழியர் சங்கரி.



“போலிச் சாமிகள் உருவாக நொண்டிச் சமாதானங்களே காரணம்!”

— மனநல மருத்துவர் ருத்ரன் கூறுகிறார்.

சாமியார், சமூக சேவகர் ஆகியோர் பற்றி மக்களிடையே இருக்கும் இயல்பான, நியாயமான மரியாதையை இந்த சுயநலவாதிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இவர்களுக்கு எளிதில் கிடைக்கும் மலிவான விளம்பரமும் சில பத்திரிகைகள் ஆதரித்துச் செய்திகள் போடுவதும் இவர்கள் விரைவில் பிரபலமாகக் காரணங்கள்.

மக்கள் தற்போது இறுக்கமான சூழலில் இருக்கிறார்கள். தொலைக்காட்சியில் வரும் விளம்பரங்கள் ஆடம்பர ஆசைகளை வளர்த்துவிடுகின்றன. பொருளாதார ரீதியில் பிரச்னை இல்லாதவர்கள் கூட மேலும் பொருள்கள் வாங்க முடியாத ஏக்கத்தில் இருக்கும்போது, வரம் தரும் சாமியார்கள் இன்னொரு பரிசுச் சீட்டாக சகாய விலையில் கிடைக்கிறார்கள். எல்லா துன்பங்களுக்கும் தீர்வு, அவர்களிடம் இருப்பதாகச் செய்யப்படும் விளம்பரங்கள் மக்களை அவர்களிடம் வசப்படுத்துகின்றன.

நம் குறைகளைப் போக்க முடியாவிட்டாலும் இவர்கள் போக்கலாம் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்புமே இவர்களிடம் மக்கள் செல்லக் காரணம். குறுக்கு வழிகளிலும் குருட்டு அதிர்ஷ்டத்திலும் விரைந்து வளம் காண விரும்பும் மனப்பான்மையே சாமியார்களை மக்கள் நாட முக்கியமான காரணமாகும். ஒரு சோப்பு விளம்பரத்தைப் பார்த்துவிட்டு, அது சரியில்லையென்றால் இன்னொரு சோப்பு விளம்பரத்தைப் பார்த்து அந்த சோப்பை வாங்குவது போல, ஒருவர் போலி என்று நிருபணமானாலும் இன்னொரு சாமியாரைத் தேடி ஓடுகிற நிலையில் மக்கள் இருக்கிறார்கள்.

இது போன்ற நொண்டிச் சமாதானங்கள்தாம் தொடர்ந்து போலிச் சாமியார்கள் உருவாகக் காரணம்.

மக்களிடம் விழிப்புணர்வு பெருக வேண்டும். பகுத்தறிவு தெளிவாகக் கற்பிக்கப்பட வேண்டும். பகுத்தறிவு, நாத்திகம்-ஆத்திகம் இரண்டுக்கும் இடையே உள்ள ஒரு நடுநிலை. சிந்திக்கும் திறன், சிந்தித்து முடிவெடுக்கும் தெளிவு இவற்றை மக்களிடையே பத்திரிகைகள்தாம் அதிகம் செய்ய முடியும். தொலைக்காட்சி நிகழ்ச்சி அன்றோடு முடிந்து போகும். ஆனால் அச்சான விஷயம் சில மாதங்களாவது பலர் பார்வையில் படும்.

சந்திப்பு : **சீனிவாசன்**

இக்கட்டுரைக்காக போலீஸ் தரப்பில் பேசிக் கொண்டிருந்தபோது ஒரு நூதனமான போலிக் கொள்ளைச் சாமியார் பற்றிச் சொன்னார்கள்.

மதுரை, தேனி பகுதியில் வருச நாட்டு உப்புத்துறை பாண்டி பூசாரி என்பவர் மிகப் பிரபலம். தன்னிடம் வரும் பெண்களைக் குடைந்து குடைந்து கேட்டு, அவர்களின் சொத்து விவரங்களை வாங்கி விடுவது. பிறகு சில திருடர்கள் – கொள்ளையர்களிடம் தகவல் தந்து, 'அடித்து' வரச் செய்து அதில் சமமாகப் பங்கு! விஷயம் தெரிந்து, போலீஸ் வளைக்குமுன் தற்சமயம் தலைமறைவாகி விட்டாராம்.

“ஜான் ஜோசப், திருச்சி அன்பரசன் பாதிரியைத் தொடர்ந்து, அடுத்தபடியாக இந்த சாமியார் பிடிபட்டதும் இன்னும் பரபரப்பாகும் பாருங்கள்” என்கிறது போலீஸ் தரப்பு.


போக்குவரத்து, போதை மருந்து, மதுவிலக்கு எனத் தனித்தனிப் போலீஸ் பிரிவு இருப்பது போல சாமியார்களுக்கென்றும் ஒரு பிரிவு கட்டாயம் அமைக்கப்பட்டாக வேண்டிய சூழ்நிலை உருவாகிவிடக்கூடும்!

ஆனால், மக்களை ஆள்கிற ஆட்சியாளர்களுமே கூட இப்படியான சாமியார்களின் பிடியில் சிக்கியிருப்பதுதான் வேதனை. அருள்வாக்கு சாமியார்கள், சித்துவேலை சாமியார்கள், ஆசிதரும் சாமியார்கள் போலவே அரசியல் சாமியார்களும் அதிகரித்து விட்டார்கள்.

(ஓர் இடைச் செருகல்: ப்ரொஃபஷனல் கோர்ஸஸ் என்று சொல்லப்படுகிற சி.ஏ., ஐ.சி.டபிள்யூ.ஏ., ஏ.சி.எஸ்., போன்ற படிப்புகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கென்றே பிரத்யேகமாக, சென்னையில் ஒரு ப்ரொஃபஷனல் சாமியார் இருக்கிறார்! பரீட்சையில் தோற்கிற மாணவர்களை உற்சாகமூட்டி, மேலும் தீவிரமாகப் படிக்க உத்வேகம் தரும் காரியத்தைச் செய்து வருகிறாராம்.)

எலக்டிரானிக், கம்ப்யூட்டர், இஞ்சினீயரிங், வழக்கறிஞர் தொழில்களைப் போலவே சாமியார் தொழிலும் வருமானத்துக்கு உகந்த ஒன்றாக மாறிவிட்டது கண்கூடு. விழிப்புடன் இருக்க வேண்டியது மக்களின் கடமை. அல்லாதபட்சத்தில் விழுங்கி ஏப்பம் விட்டு விடுவார்கள்.

— நமது நிருபர்கள்



"இணைந்து செயல்பட்டோம். இன்னலுக்கு தீர்வு கண்டோம்."

உங்கள் அனுபவத்தைச் சொல்லுங்கள் பரிசுகளை வெல்லுங்கள்!

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

யாருமே தனித்து வாழ முடியாது. மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் போதுதான் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வுகாண வழிகிடைக்கிறது. வர்க்கம், சாதி, மதம் என்கிறபேதங்கள் சமூகத்தைப் 'பிளவுபடுத்த முயலும் இன்றைய சூழ்நிலையில், அவற்றைக் கடந்து அடுத்தவர் வாழ்வில் அக்கறை செலுத்துவதும் அவர்களுக்கு உதவுவதும் அரிதாகிவிட்ட விஷயங்கள். எனினும், உறவுகள் மூலமாகத்தான் சமூக மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதை மறுக்க முடியாது.

உங்கள் வாழ்க்கையில் இத்தகைய அனுபவம் ஏற்பட்டிருக்கிறதா? கல்லூரி வாழ்க்கையில், அலுவலகத்தில், அல்லது நீங்கள் வாழும் வட்டாரத்தில்... எங்கேவேண்டுமானாலும் நிகழ்ந்திருக்கலாம். பலரும் ஒன்று சேர்ந்து உங்கள் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு உங்கள் வாழ்க்கையை மலரச் செய்திருக்கிறார்களா?


அத்தகைய மறக்க முடியாத அனுபவத்தை சுவையான கட்டுரையாக எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். சிறந்த கட்டுரைகளுக்குப் பரிசுகள் உண்டு. இக்கட்டுரைகள் பின்னர் சிறுபுத்தகமாகத் தொகுக்கப்படவுள்ளன. இன்றே எழுதி அனுப்புங்கள். பரிசுகளை வெல்லுங்கள். அனைவரும் இப்போட்டியில் பங்கேற்கலாம்.

1-ம் பரிசு (ஒரு நபருக்கு)
ரூ. 25,000 மதிப்புள்ள தங்க நகைகள்

2-ம் பரிசு (இரண்டு நபருக்கு)
ரூ. 5,000 மதிப்புள்ள தங்க நகைகள்

3-ம் பரிசு (மூன்று நபருக்கு)
ரூ. 2,500 மதிப்புள்ள தங்க நகைகள்

100 ஆறுதல் பரிசுகள்
4-கிராம் மதிப்புள்ள வெள்ளி நாணயங்கள்



கட்டுரைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் அக்டோபர் 15, 1997

கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி :

Ram Kaashyap Chits

ஈடில்லா சேமிப்பு; இணையற்ற தீர்வு

Member Ram Kaashyap Group

14/3 தண்டபாணி தெரு, தி.நகர், சென்னை 600 017.
போன் : 4341513, 4330034

நம்பிக்கை பொருளாதார சுதந்திரத்திற்கு அமைத்திடும் பாதை

காதில் விழுந்தவை



● மொரிஷியஸில் நடக்கும் காமன்வெல்த் சபாநாயகர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு, சபாநாயகர் பழனிவேல்ராஜனுக்கு அழைப்பு வந்தது. அரசு செலவில் மொரிஷியஸ் தவிர வேறு சில நாடுகளுக்கும் சென்று வரலாம். ஆனால் சபாநாயகர் பெருந்தன்மையுடன் தனக்கு வந்த வாய்ப்பை, துணை சபாநாயகரான பரிதி இளம்வழுதிக்குக் கொடுத்து விட்டார். இப்போது பரிதி வெளிநாடு கிளம்பி விட்டார்! முதல்வரும் ஓ.கே. சொல்லி விட்டாராம்!



• பழனிவேல் ராஜன்



• துரைமுருகன்


● ஆளும் அரசியல்வாதிகளுக்குப் பொதுப்பணித்துறை ஒரு காமதேனு! கலைஞர் ஆட்சி என்ன, அந்தக் கடவுளின் நேரடி ஆட்சியே நடந்தாலும் பத்து பர்ஸெண்ட் கமிஷன் கீழிருந்து மேல் வரை பாய்வதை யாராலும் தடுக்க முடியாது. "நாமினேட்டட் டெண்டரை ஒழித்து விட்டோம்" என்று சொல்கிறார்களே தவிர வேண்டியவர்களுக்கு வேலை கொடுத்துக் கறக்கும் படலம் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது! அதிலும் குறிப்பாக, பொதுப்பணித் துறையின் பிரிவுகளாகச் செயல்படும், கூட்டுறவு மற்றும் கல்வித் துறைக் கட்டடங்களைக் கட்டும் பிரிவில் எப்போதும் ப(ண)ருவ மழைதான்" என்று பெருமூச்சு விட்டார் பிரிவுத் துறையின் தொழிற்சங்கத் தலைவர் ஒருவர்! தடாலடியாகச் செயல்பட்ட அமைச்சர் துரைமுருகன் 'ஏஞ்சியோகிராபி' செய்து கொண்ட பிறகு பணிகளை முறைப்படுத்திக் கொண்டு, அதிக ஓய்வு எடுத்துக் கொள்கிறாராம்.

● சு.சுவாமி செய்வதை விட உருப்படியான வேலையை அவரது தாய் தந்தையர் செய்வதாக பெங்களூரிலிருந்து வரும் தகவல் ஒன்று சொல்கிறது. வயதான அவர்கள், காலையில் வாக் போகும்போது பெரிய பைகளைக் கையில் எடுத்துக் கொள்கிறார்களாம். போகும் வழியில் கிடைக்கும் பிளாஸ்டிக் டம்ளர், கேரி ஹோம் பை, பாலிதீன் பால் கவர், தண்ணீர் கவர், ஆகியவற்றை எடுத்து, பையில் போட்டுக் கொள்கிறார்கள். பிறகு அந்த பிளாஸ்டிக் பொருட்களையும் பாலிதீன் கவர்களையும் கடையில் போட்டு கிடைக்கும் பணத்தில் பேனா, ரப்பர், பென்சில் என்று வாங்கி அனாதைக் குழந்தைகளுக்குக் கொடுக்கிறார்களாம்! (ராஜாஜி நகரில் வசிக்கும் அன்பர்கள் போனஸ் தகவல்களைச் சொல்லலாம்)

● அமுலாக்கப் பிரிவுக்கு சசிகலா வந்து செல்லும் ஸ்டைலில் ஒரு மாற்றம். இதுவரை ஸ்டெச்சரில் படுத்து வந்தவர் இப்போது வீல் சேரில் ,உட்கார்ந்து லிப்டில் வருகிறார். வக்கீல் ஜீனசேனனின் உதவியாளர்களுக்கு சிரமம் குறைந்தது. வந்து கைநாட்டு வைத்துவிட்டு ஐந்து நிமிடத்தில் போய் விடும் அவரை சமீபத்தில் ஒன்றரை மணி நேரம் காக்க வைத்துவிட, "மீண்டும் வேறு ஏதாவது வழக்கில் கைதோ?" என்று ஜெ. உட்பட எல்லோரும் படபடத்துப்போய் விட்டனர்!

- தில்லப்பா

சமூக சேவையில் சு. சுவாமியின் பெற்றோர்!



✦ துடைப்பங்களை, கயிற்றால் கட்டுவதை விட, ரப்பர் பேண்டால் பிணைப்பது அதிக இறுக்கம் தரும். சுலபத்தில் அவிழாது.

அறிவிப்பு

21.9.97 கல்கி இதழில் (சென்ற வாரம்) 45ம் பக்கத்தில் எமது கிராண்ட் ஸ்வீட்ஸ் விளம்பரம் தவறாக வெளியாகி விட்டது.

அதாவது, மகாளயம் சம்பந்தப்பட்ட குறிப்புகளுக்குப் பதிலாக, வேறு விளம்பரத்தின் செய்தி மாறி வெளியாகி விட்டது.

இந்த இதழில் (28.9.97) 38,39ம் பக்கங்களில் வெளியாகியுள்ள சரியான விளம்பரத்தை வாசகர்கள் கருத்தில் கொள்ள வேண்டுகிறோம்.

நன்றி.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்,

24,2வது மெயின்ரோடு,
காந்தி நகர்,
அடையாறு,
சென்னை - 600 020.
போன் : 4915662, 4914213


ADVT

தெம்பூட்டிய வம்பு

தாம்பரம் அருகே சொந்தத்தில் ஜெராக்ஸ் கடை ஏழு வருடங்களுக்கு முன் துவங்கினேன். வியாபாரம் சற்று மந்த நிலை அப்போது ஸ்ரீராம் ஏஜெண்ட் ஒருவர் என்னை அணுகி சீட்டில் சேருமாறு ஊக்குவித்தார், நான் இருக்கும் சூழலில் மாதா மாதம் பணம் கட்ட இயலுமா என தயக்கம் இருந்தாலும், அவர் விடாப் பிடியாக என்னை சீட்டில் சேர்த்து விட்டார். ஒரு பெரிய வம்பில் வலியப் போய் மாட்டிக் கொண்டதாகவே எண்ணினேன்.

பத்து மாதங்களுக்குப் பிறகு முன்பைவிட கடுமையான சூழல் ஜெராக்ஸ் மிஷினுக்கு தவணை தங்கி விட்டது, பராமரிப்புக் கான்ட்க்ராட் வேறு புதுப் பிக்கப்பட வேண்டும், ஸ்டெபிலைசரை வேறு உடனடியாக மாற்ற வேண்டும். ஒரே மாதத்தில் மூன்று செலவுகளை சமாளிக்க வேண்டும் தேவை ரூபாய் 10,000/-

அம்மா, அக்கா, அண்ணன் யாராலும் உதவ இயலாத சூழ்நிலை. அந்த நிலையில் திரும்பவும் அந்த ஸ்ரீராம் ஏஜெண்ட் எதிரில் வந்தார். நிலைமையை நான் பதற்றத்தோடு விவரித்த போது அவர் சிரித்துக் கொண்டே, "அவ்வளவு தானே சீட்டைத் தள்ளி எடுத்தால் போயிற்று." என்று நிதானமாக கூறினார்.



அதைத்தான் செய்தேன். உடனடியாக கிடைத்த பணத்தால் என் பிரச்சனை தீர்ந்தது. அதுமட்டுமல்ல இன்று சொந்தக் கட்டிடத்திலேயே நான் கடை வைத்திருக்கிறேன் என்றால் அதற்கு உதவியது ஸ்ரீராம் சிட்ஸ் மட்டுமே. இன்று நானும் ஒரு ஸ்ரீராம் குடும்பத்தில் ஒருவராக உள்ளேன்.

அன்புடன்

S. ரவிக்குமார்
தாம்பரம், சென்னை.

என்றும் மாறா எங்கள் நேசம்

விஜிக்கு வந்த வியாதி என்ன?

தமக்கு 'போஸ்டீரியோ சென்ட்ரல் ஹெர்னியேஷன்' என்ற உபாதை ஏற்பட்டதாகவும், அதற்கு அப்போலோ மருத்துவமனையில் தாம் சிகிச்சை பெற்றதாகவும் நடிகை விஜி கூறி இருந்தார் அல்லவா? அப்போலோவில் குளறுபடி ஆனதாக அவர் கூறியதெல்லாம் இருக்கட்டும். அதென்ன போஸ்டீரியோ சென்ட்ரல் ஹெர்னியேஷன்?

தேவகி மருத்துவமனை நிர்வாக இயக்குநரும், தலைமை மருத்துவருமான டாக்டர் கே. சொக்கலிங்கத்திடம் விசாரித்தோம்.

போஸ்டீரியர் என்றால் பின்புறம். சென்ட்ரல் என்பது நடுப்பகுதி. ஹெர்னியேஷன் என்றால் உரிய இடத்திலிருந்து நழுவி, வீங்கிய நிலை. (இதற்கும் ஹெர்னியாவுக்கும் சம்பந்தமில்லை.)

"முதுகுத் தண்டில், முதுகெலும்புத் தொடரில் ஓர் எலும்புதான் 'வெர்ட்டிப்ரா' எனப்படுவது. ஒவ்வொரு வெர்ட்டிப்ராவுக்கும் இடையே இடைவெளி இருக்கிறது. இந்த இடைவெளியில், ஷாக் அப்சார்பர் மாதிரி, நடுவில், ஜவ்வுக்குள் உள்ள உறை போன்ற பகுதி கடினமாகவும், உறுதியாகவும் இருக்கும். இந்த வெளிப்புறப்பகுதி, பழுதாகிப் போகிறபோது, கூழ்ப்பகுதி ஜவ்வோடு தனது இடத்திலிருந்து வெளிப்பட்டு (ப்ரோலேப்ஸ் ஆகி) விடும். அப்போது அது வீக்கம் போலத் தெரியும். உடல் இயக்கத்தின் போது வலி மிக அதிகமாக இருக்கும். இது தான் உபாதை ஏற்படக் காரணமான பிரச்னையாக இருந்திருக்கக் கூடும்."

டாக்டர் சொக்கலிங்கம் தொடர்ந்தார்:


"இதற்கு மேல் நான் சொல்லுவது எனது சொந்தக் கருத்து. இதற்கும் அப்போலோவில் கொடுக்கப்பட்ட சிகிச்சைக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை.

"முதலாவது, ஸ்பைன் சர்ஜரி என்பதே மிகச் சிக்கலான விஷயம். இதில் திறமை மிகுந்த சர்ஜன்களுக்கே சில வேளைகளில் கால் சறுக்குவது உண்டு!

"இரண்டாவது, ஒருமுறை எதிர்க்கட்சித் தலைவராயிருந்த உ.சுப்பிரமணியத்துக்கு சர்விகல் ஸ்பாண்டிலைடிஸ் ஒரு சிக்கலான உபாதையாக வந்து அவர் அவஸ்தைப் பட்டபோது, எம்.ஜி.ஆர். அவரை அமெரிக்காவுக்குச் சிகிச்சை பெற்றுவர அனுப்பி வைத்தார். அதுபோல, மேற்கத்திய மருத்துவ நிபுணர்களிடம், பாதிக்கப்பட்டவரை அனுப்பி வைக்கலாம்."

— எஸ்.வி.என்.

★ மளிகை சாமான் லிஸ்டைத் துண்டு பேப்பரில் எழுதாமல் ஒரு நோட்டுப் புத்தகத்தில் தொடர்ந்து எழுதி வந்தால், விலைவாசி உயர்வை அவ்வப்போது அறிந்து கொண்டு செயல்படலாம்.





• விஜி

3 'நக்கீரன்' கோபால்

வீரப்பனும் நானும்

மிக மிக அபாயகரமான கால கட்டம் அது. நான் சிவசுப்பிரமணியனிடம், இரண்டாவது முறையாக வீரப்பனைச் சந்திக்கப் போகுமாறு கூறிய நேரத்தில் அங்கே ஒரு விபரீதம் நடந்திருந்தது. வீரப்பனின் மனைவி முத்துலட்சுமியை விசாரணைக்காகப் பிடித்துப் போன போலீஸ், மிகக் கொடூரமான முறையில் தன் 'விசாரணை'யை நடத்தியிருந்தது! விவரம் தெரிந்ததும் மிருகமாகிப்போன வீரப்பன், டி.எஸ்.பி. சிதம்பரநாதன், ஏட்டு ராஜகோபால், சேகர் வாத்தியார் என்ற மூவரைக் கடத்திப் போய் விட்டான். இது



நடந்தது சிறுமுகை காட்டுப் பகுதியில்.

மூன்று பேரை ஒருபுறம் கடத்தி வைத்துக் கொண்டு, இன்னொரு புறம் பேபி வீரப்பனைத் தன் தூதுவனாக அனுப்பி பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தான். பேச்சுவார்த்தை நடக்கும்போதே போலீஸ், ரகசியமாகக் காட்டுக்குள் புகுந்து விட்டது, வீரப்பனைத் தேடி.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் போலீஸுக்குத் தெரியாமல் ஆறு நிருபர்களை, தனித்தனியே நான் காட்டுக்கு அனுப்பினேன்.

ஆறு பேரில், இம்முறையும் சிவாவால்தான் அவனைச் சந்திக்க முடிந்தது!


"ஆயிரம்கோடி ரூபா பணம் வேணும். நான் தொழில் செஞ்சி பிழைக்க ஒரு கல்குவாரி வேணும்" என்று, பிணைக் கைதிகளை விடுவிக்க நிபந்தனை போட்டான் வீரப்பன்.

சிவாவால் பிணைக்கைதிகளை அப்போது பார்க்க முடியவில்லை. அவர்களை அவன் வேறு இடத்தில் வைத்திருந்தான். வீரப்பனையும் அவனது சில சகாக்களையும் மட்டும் படமெடுத்துக் கொண்டு திரும்பினார் சிவசுப்பிரமணியன்.

பேட்டி வெளியான அன்று மாலையே பேப்பரில் அதிரடியாக வந்தது அந்தச் செய்தி. 'மூன்று பேரும் உயிருடன் மீட்பு. வீரப்பனின் கூட்டாளிகள் இருவர் கைது.'

இது எப்படி சாத்தியம் என்று குழம்பி னேன். இரு மாநில டி.ஜி.பிக்களும் தாங்கள் தாம் காப்பாற்றியதாக ஒருவருக்கொருவர் முரணாக அறிக்கை விட்டுக் கொண்டிருந்தார் கள்.

நான் உடனே என் கோவை நிருபரைக் கூப்பிட்டு, சிதம்பரநாதன் வீட்டுக்குப் போகச் சொன்னேன். 'என்ன நடந்தது? எப்படி மீண்டார்கள்? போலீஸ் தரப்பில் சொல்லப் படுவது நிஜம்தானா?'- இதை விசாரித்து இரவுக்குள் போன் செய்யச் சொன்னேன்.



• சிவப்பு பைக்கில் மணியக்காரர்...

சிதம்பரநாதன் தந்த தகவல் என்னை அதிர்ச்சியின் எல்லைக்கே அழைத்துப் போனது! அவர் சொன்னதன் சுருக்கம் இது தான்:

பேபி வீரப்பனைத் தொடர்ந்து, வீரப் பனின் தம்பி அர்ஜுனனும் பேச்சு வார்த்தைக் காக ஊருக்குள் வந்திருக்க, போலீஸ் காட்டுக் குள் புகுந்து, இவர்கள் இருந்த இடத்தைச் சுற்றி வளைக்கத் தொடங்கி விட்டது. தற்செயலாக அங்கே வீரப்பன் இல்லை. அவனது சில ஆட் களின் பாதுகாப்பில் கடத்தப்பட்ட மூவர் மட்டும் இருந்தனர்.

சிதம்பரநாதன் அவர்களிடம், "இதோ பாருங்கள். போலீஸ் சூழ்ந்துவிட்டது. நான் ஒரு போலீஸ்காரன் என்பதால் இந்த நேரத்தில் போலீஸ் என்ன செய்யும் என்பது எனக்குத்



• இரண்டாவது சந்திப்பின் போது வீரப்பன்


தெரியும். என்னையும் கொன்று விட்டு, உங்களையும் சுட்டு விடுவார்கள். வெளியே போய், கிராஸ் ஃபயரில் நான் இறந்துவிட்டதாகச் சொல்லிவிடுவார் கள். இப்போது நான் சொல்வதைக் கேட்டாலொழிய தப்பிக்க வேறு வழி யில்லை..." என்றிருக்கிறார்.

அவர்கள் இருந்த பகுதி, ஒரு பள்ளத் தாக்கு. இருபுறமும் உயர்ந்த மலைகளின் மேலே இரு மாநில போலீஸும் ஏறி வந்து கொண்டிருந்தன. ஒருபுறம் கர்நாடக டி.ஜி.பி. சங்கர் பிதாரி. மறுபுறம் தேவாரம்.

சிதம்பரநாதன், அந்த இக்கட்டான சூழலில் வீரப்பனின் ஆட்களை 'ப்ரெயின் வாஷ்' செய்து, உயிருக்கு உத்திரவாதம் தந்து, சரண டையச் சம்மதிக்க வைத்து விட, இருமாநில போலீஸ் கண்ணிலும் படாமல் வேறுவழியில் அவர்கள் தப்பித்து ஓடத் தொடங்கியிருந்தனர்.

இதற்கிடையில் இருமாநில போலீஸும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு விட இரண்டு பேருமே, முதலில் தாம்தான் சுட வேண்டும் என்று அவசரப்பட, தேவாரம் முந்திக் கொள்ள, குறி தவறிப்போய்விட, சிதம் பரநாதனும் பிறரும் போலீஸுக்குத் தெரியாத குறுக்கு வழியில் தப்பித்து விட்டனர்!

இந்த இடத்தில் ஒரு விஷயம் சொல்ல



உபயோகித்த கொசு வத்தி அட்டைகளை கொட்டாங்கச்சியில் போட்டு, எரித்து, புகை கிளப்பி, கொசுவை விரட்டலாம். - கரன்ட் இல்லாதபோது....!

வேண்டும். வீரப்பனுக்கும் அவனது கூட்டாளிகளுக்கும் அந்த ஆறாயிரம் ச.கி.மீட்டர் காடும் அரைகிரவுண்ட் வீடு மாதிரிதான்! அந்தக் காட்டின் ஒவ்வொரு செ.மீட்டரும் அத்துப்படி என்பதால் எந்தச் சூழலிலும் போலீஸிடமிருந்து அவர்களால் சுலபமாகத் தப்பிவிட முடியும்!

தப்பி வந்து ஒரு வீட்டில் மறைந்து கொண்டு, டி.எஸ்.பி. சிதம்பரநாதனே கலெக்டருக்கு போன் செய்து விவரம் சொல்லியிருக்கிறார். கலெக்டர் வந்து அழைத்துப் போயிருக்கிறார்.

–இதுதான் நடந்தது என்று சிதம்பரநாதன் சொல்ல, அது, அவ்வண்ணமே மறுநாளே நக்கீரனில் வெளியாகிவிட்டது.

இன்றைக்கு நானாவது, அரசுத் தூதுவனாகப் போய் பணயக்கைதிகளை மீட்டு வந்தேன். அவரோ, தனி மனிதனாக, நைச்சியமாகப் பேசி, வீரப்பனின் ஆட்கள் இருவரையே சரணடையக் கூட்டி வந்தார். அதை ஒருத்தராவது அங்கீகரித்துப் பாராட்டவில்லை! பாராட்டு, வேறு யாருக்கோ சமர்ப்பணம் ஆகிக் கொண்டிருந்தது! சொல்லப் போனால், இன்றைய என் செயலுக்கு இன்ஸ்பிரேஷனே சிதம்பரநாதன்தான்!

இதற்கிடையில், பேச்சுவார்த்தைக்கு வந்த அர்ஜுனன் போலீஸ் கஸ்டடியில் வைக்கப்பட்டான் - மத்திய சிறையில், பலத்த பாதுகாப்பும் கெடுபிடியும் மிக்க சிறையில், நான் ரகசியமாக அர்ஜுனனைச் சந்தித்தேன். பேட்டியும் போட்டோவும் நக்கீரனில் வரவும் போலீஸின் கோபம் உச்ச நிலைக்குப் போனது. எப்படி? எப்படி? என்று சிண்டைப் பிய்த்துக் கொண்டார்கள். அர்ஜுனனை மைசூருக்குக் கொண்டு போவதாகப் பேச்சு நடந்து கொண்டிருந்தபோதுதான் 'அர்ஜுனனும் பிற மூன்று கைதிகளும் சயனைடு அருந்தி, தற்கொலை!' என்று செய்தி வந்தது.

எனக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. அது கொலையா, தற்கொலையா என்கிற பக்கமே போக வேண்டாம். வீரப்பன் கேஸைப் பொறுத்தவரை அர்ஜுனன் போலீஸ் பிடியில் இருப்பது மிகப்பெரிய பலம். பல விஷயங்கள் பெற வாய்ப்புள்ள முக்கிய சாட்சி. அவன் விஷயத்தில் எப்படி இத்தனை அஜாக்கிரதையாக இருந்தார்கள் ஏன்?

விஷயம் வீரப்பனுக்குத் தெரிந்ததும் அவன் வெறிகொண்டவனாக மாறிப்போனான். எத்தனை கொலைகள்! அராஜகங்கள்! அதெல்லாம் போதாதென்று, மறுபடியும் மூன்று பேரைக் கடத்தி வைத்துக் கொண்டு, ஈரோடு

கலெக்டர் பழனியப்பனுக்கு ஒரு கேஸட்டில் இரு நிபந்தனைகள் அனுப்பினான்!

1. மூன்று கோடி பணம்.

2. அர்ஜுனன் சாவுக்கு சி.பி.ஐ. விசாரணை.

அந்தியூர் காட்டுப் பகுதியின் எல்லையோரத்தில் அப்போது பார்க்க வேண்டுமே! சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்களும் புகைப்படக்காரர்களுமாக ஜேஜே என்றிருக்கும், எப்போதும்!

மற்ற பத்திரிகையாளர்களைப் பற்றிப் பெரிதாகக் கவலைப்படாத போலீஸ், 'நக்கீரன் காட்டுக்குள்ள போனா மட்டும் சுட்டுடுங்க' என்கிற மேலிட உத்திரவைப் பெற்றிருந்ததாக அப்போது சொன்னார்கள்! சக பத்திரிகையாளரான நிருபர் ஒருவர் மூலம் இச்செய்தி எனக்கு வர, பதைத்துப் போனேன். ஏனெனில் அங்கே கூடியிருந்த பத்திரிகையாளர்களுள் நக்கீரன் நிருபர்களும் உண்டு!

இதற்கிடையில் வீரப்பன் கேட்ட மூன்று கோடி பணத்தைத் தர அரசு சம்மதித்து விட்டது. சிவப்பு புல்லட்டில், சிவப்புச் சட்டையும் சிவப்பு மாலையும் அணிந்த ஆள் பணத்தை இன்ன வழியில், இப்படிக் கொண்டு வர வேண்டும் என்று முன்னதாக வீரப்பன் விளக்கம் தந்திருந்தான்.

அதன்படியே, ஒரு மணியக்காரரைப் பிடித்து, சிவப்பு புல்லட்டும் சிவப்பு டிரெஸ்ஸும் தந்து, பணத்தையும் ஒரு பெரிய பையில் போட்டு, ஊர் கூடி வழியனுப்பியது. கிளம்பிப் போன மணியக்காரர், பணத்தைச் சேர்ப்பிக்காமல் இரவே திரும்பிவிட்டார். காரணம்? வண்டி பங்சர்!

அவசர அவசரமாக செல்வராஜ் என்கிற வேறொரு நபரை அனுப்ப முடிவு செய்து ஏற்பாடு செய்ய ஆரம்பித்தார்கள்.

சரி, அவருக்குமுன் மறுபடி நாம் போய்ப் பார்த்து விடுவது என்று நான் முடிவு செய்து, என் நிருபர்களிடம், "இம்முறை மொத்தமாகப் போங்கள். போலீஸிடமிருந்து தப்பிக்க வசதியாயிருக்கும் என்று சொன்னேன்.

போனில் சொல்லிவிட்டாலும் மிகுந்த பதைப்புடனே காத்திருந்தேன். காரணம், போலீஸ் இடைவிடாமல் முயற்சி செய்து கொண்டே இருக்கிற- ஆனால் வெற்றிபெற முடியாமல் இருக்கிற ஒரு காரியத்தை அடுத்தடுத்து இருமுறை நாங்கள் செய்து முடித் தது அவர்களுக்கு எத்தனை எரிச்சல் தரும் என்பது எனக்குத் தெரியும். மேலிட அர்ச்சனை வேறு பலமாக இருக்கும். வீரப்பன் அல்ல; நக்கீரனே முதல் எதிரி என்கிற நிலை போலீஸ் வட்டாரங்களில்!

இப்படியிருக்க, மூன்றாவது முறையும் வீரப்பனைச் சந்திக்க நாங்கள் போவது தெரிந்தால், நிச்சயம் சும்மா விடமாட்டார்கள்.

தவிப்புடன் நான் இங்கே காத்திருந்த போது, இரவு ஏழு மணிக்கு போன் வந்தது. ஜீவா என்கிற என் நிருபர்தான் பேசினார்.

"அண்ணே... வீரப்பனைப் பார்த்துட்டோம். ஆனா திரும்பி வர வழியில சிவசுப்பிரமணியனை கட்டுட்டாங்க..."

அதிர்ந்தேன்!

(தொடரும்)

மரமேற ஒரு கல்லூரி!

கேரளாவில் ராமதாஸ் வைத்தியர் என்பவர் இப்படி ஒரு கல்லூரி ஆரம்பித்திருக்கிறார். மூன்று மாத 'டிப்ளமா' வகுப்பில் தென்னைமரம் ஏறவும் இறங்கவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்கு படிப்பவர்களுக்கு வேலை நிச்சயம் என்று உறுதி கூறப்படுகிறது. முதுகலை டிப்ளமாவில் (Post graduate Diploma) பனைமரம், ஏறவும், கள் இறக்கவும் கற்பிக்கப்படுமாம். ஆரம்ப விழாவிற்கு, மாவட்ட கலெக்டர் வி.[illegible] எஸ். சௌஹானை அழைத்து ரி[illegible] வெட்டச் சொன்னார்கள். அவரோ தென்னை மரத்திலேறி தேங்காய் குலையை வெட்டி கல்லூரியை ஆரம்பித்து வைத்தார். அவர் பெயரே தேங்காய் கலெக்டர் என்று ஆகிவிட்டது!

நன்றி : **பிசினஸ் இண்டியா.**


தகவல் : **கிருஷ்ணவேணி ரங்கனாதன்**




(முன்னாள் பிரதமர் நரசிம்மராவின் முதல் நாவலான 'இன்சைடர்' (Insider) அடுத்த மாதம் வெளிவர இருக்கிறது. பெங்குவின் நிறுவனம் வெளியிடப் போகும் இந்தப் புத்தகத்தை காங்கிரஸ் மற்றும் எதிர்க்கட்சிகள் ஆவலுடன் எதிர்நோக்குகின்றன. சுய சரிதை போல இருக்கும் இந்த நாவல் வெளிவந்தால், பல நபர்களின் சுயரூபம் வெளிப்படக் கூடும். இதனாலேயே இவரது முன்னாள் சகாவான கே.கே. திவாரி அந்தப் புத்தகம் வெளிவருவதைத் தடுக்கத் திட்டமிடுகிறாராம்!

நன்றி : 'த வீக்'

தகவல் : கிருஷ்ணவேணி ரங்கனாதன்





1997 செப்டெம்பர் 28
ஈசுவர புரட்டாசி 12
மலர் : 56
இதழ் : 9

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



நத்தையிலும் நொண்டி நத்தை!

"அதிகார மமதை என்பது இலேசுப்பட்டது அல்ல; தூய இதயங்களையும் வலுவான சித்தங்களையும் கூட மதுவைப் போல் மயக்கி வீழ்த்தக்கூடியது அது..." - இப்படி கவிநயத்துடன் பேசியிருக்கிறார் டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி ஜஸ்பால் சிங்.


ஜே.எம்.எம். வழக்கில் முன்னாள் பிரதமர் நரசிம்மராவை விசாரிக்க, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யலாம் என்று தீர்ப்பளிக்கையில்தான் இப்படிப் பேசினார் நீதிபதி சிங்.

'நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோல்வியுறச் செய்வது என்பது ஒரு பிரதமரின் அரசியல் சாசனத்துக்குட்பட்ட கடமையாகும்' என்று நரசிம்மராவைத் தப்புவிக்க வாதிட்டார் வழக்குரைஞர் ஆனந்த். அதற்கு, சட்டப்பிரிவு 75(2) வேறு மேற்கோளாக எடுத்தாளப்பட்டது!

இந்த வாதத்தையும் தவிடுபொடியாக்கினார் நீதிபதி சிங்.

"ஊழலை ஊன்றுகோலாக்கி ஒரு பிரதமர் தம் பதவியைக் காப்பாற்றிக் கொள்வது ஏற்க முடியாததாகும். இதை நியாயப்படுத்த அரசியல் சாசன 75 (2) பிரிவைத் துணைக்கு அழைப்பது மிகவும் அபத்தம்; அரசியல் சாசனத்தையே அவமானப்படுத்தும் செயல்..." என்று பேசினார்.

114 பக்கம் கொண்ட தீர்ப்பை, நிரம்பி வழிந்த நீதிமன்றத்தில் அவர் வழங்க, அதே தினத்தில் அந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மனு செய்யப் போவதாக அறிவித்து விட்டார் ராவ்! ஆக, வழக்கு மறுபடியும் சட்டச் சிக்கல்களுக்குள் சிக்கி தாமதப்பட்டுக்



கொண்டிருக்கிறது!


இந்தச் சம்பவம் செப்டெம்பர் 12 அன்று காலை நடந்திருக்க, அன்று மாலை சென்னையில், பாரதி விழாவில் பேசினார் நீதிபதி மோகன். தமது தென்கொரிய பயண அனுபவத்தை விவரித்தார் :

"எங்கள் நாட்டில் அடுத்தடுத்து இரு ஜனாதிபதிகள் ஊழல் குற்றச்சாட்டுக்காக விசாரிக்கப்பட்டு தண்டனை பெற்றிருக்கிறார்கள். முன்னாள் ஜனாதிபதிகள் என்பதால் மரண தண்டனை விதிக்காமல் ஆயுள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது... உங்கள் நாட்டில் நிலவரம் என்ன...?" என்று தென்கொரியர்கள் நீதிபதி மோகனிடம் கேட்க,

"நான் வெட்கத்தில் தலைகுனிந்து மௌனமாக இருக்க வேண்டியதாகிவிட்டது...." என்றார் நீதிபதி மோகன். அவர் உரையின் சாராம்சம் இதுதான் :

"அரசியல்வாதிகள் பேரில் தொடுக்கப்படும் ஊழல் வழக்குகள் கேலிக்கூத்தாகி, கடைசி வரை விசாரணைக்கு வராமலே போகிற அவலம் மாற வேண்டுமானால், ஒரு சிறப்புச் சட்டத்தின் கீழ் விசாரணை நடக்க வேண்டும். இதை ஜனநாயக மீறல் என்றோ, மனித உரிமை மீறல் என்றோ கூற முடியாது. மிகக் கடுமையான காபிபோஸா சிறப்புச் சட்டத்தை அனுமதிக்கும் நாம், அதிகார மமதையில் இழைக்கப்படும் லஞ்ச ஊழல் குற்றங்களை விசாரிக்க ஏன் ஒரு சிறப்புச் சட்டத்தை அமுல்படுத்தக்கூடாது? இதைச் செய்தாலொழிய எந்த அரசியல்வாதியின் பேரிலும் வழக்குத் தொடரவோ, விசாரணை நடத்தவோ தீர்ப்பு கூறவோ வழியின்றி தேர்தல்கள் வந்து போய்க் கொண்டிருக்கும்."

நீதிபதி மோகனின் உரை அக்ஷர லட்சம் பெறும் என்கிற அளவுக்குத்தான் இன்று நாட்டு நடப்புகள் இருக்கின்றன. டெல்லியில் ஜே.எம்.எம். வழக்கு எனில், சென்னையில் ஜெ. பேரிலான வழக்குகள்! சிறப்பு நீதிமன்றம் அமைத்தும், நத்தையிலும் நொண்டி நத்தை



வேகத்தில்தான் அவை முன்னேறுகின்றன. சிறப்பு நீதிமன்றத்தை எதிர்த்தே தடைகோரி வழக்குத் தொடரப்படுகிறது!

இதனாலெல்லாம் நேர்கிற கால விரயமும் பண விரயமும் ஒருபுறமிருக்க, ஒவ்வொரு ஒத்திவைப்பும், சட்டரீதியான தாமதமும் முன்னுதாரணங்களாகிவிடுகின்றன.

'முன்னாள் நீதிபதி வீராசாமி மீதான ஊழல் வழக்கை நடத்தலாம். அதற்குப் போதிய அளவு சாட்சியங்கள் உள்ளன' என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கிப் பல ஆண்டுகளாகியும் அந்த வழக்கு இன்னமும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலே கிடப்பில் போடப் பட்டிருக்கிறது.

ஜெயலலிதாவின் வழக்குரைஞர்கள் இதைச் சாதகமாக்கிக் கொண்டு, 'அவ்வளவு முக்கியமான வழக்கே இன்னும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாத பொழுது, எங்கள் கட்சிக்காரருக்கு மட்டும் சிறப்பு நீதிமன்றம்; அவசர விசாரணையா? இது அரசியல் பழிவாங்கல்தானே?' என்று வாதாடுகிறார்கள்!

இந்தக் கேலிக்கூத்தைத் தொடர விடாமல் சட்ட மாற்றங்கள் கொண்டு வந்தாக வேண்டும். சட்டத்தின் பிடியிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதில் குறியாய் இருக்கும் அரசியல்வாதிகளால் அது நிறைவேறப்போவதில்லை.

ஒரு நல்ல கருத்தை வெளியிட்ட நீதிபதி மோகன் போன்ற நீதித் துறையினர்தாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நீதிபதி வி. ஆர். கிருஷ்ண அய்யர் போன்ற மூத்த நிபுணர்களின் வழிகாட்டலில் இந்தச் சட்டத் திருத்தம் விரைவில் நிறைவேற வழிகாண வேண்டும்.

அரசியல் அரிப்பைச் சொறிந்து கொள்கிறார் தங்கபாலு!

காங்கிரஸிலிருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கும் வாழப்பாடி ராமமூர்த்தியைச் சந்தித்துப் பேசினோம்.

கல்கி : நான் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவராக இருப்பதால் உங்களை வெளியேற்ற அதிகாரம் இருப்பதாக தங்கபாலு சொல்கிறாரே?

வாழப்பாடி : மோசடியான ஒரு தேர்தல் நடத்தி, தன்னைத்தானே தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர்தான் தங்கபாலு. இவருக்கு நாங்கள் அங்கீகாரம் கொடுக்க முடியாது. அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிப்பு வந்தவுடனேயே, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் எந்தவிதமான பொறுப்பும் ஏற்றுப் பணி புரிய விரும்பவில்லை என்று அறிக்கை விட்டேன். ஆக இவர் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டதையே நாங்கள் ஏற்றுக் கொள்ளாதபோது என்னை இடைநீக்கம் (suspension) செய்ய இவர் யார்? முன்னாள் மாநிலத் தலைவர்கள், எம்.பிக்கள் ஆகிய இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள் ஆகியோரை நீக்க நடவடிக்கை எடுக்கும் முன் மேலிடத்தில் ஒப்புதல் பெறவேண்டும் என்ற விதி இருப்பது இவருக்குத் தெரியுமா? நான் தில்லியில் விசாரித்த வரையில் அங்கு மேலிடத்தில் உள்ள யாருக்கும் இவரது நடவடிக்கை பற்றி ஒன்றும் தெரியவில்லை. அவரது அரசியல் அரிப்பைச் சொறிந்து கொள்வதற்காக என்னை நீக்கி இருக்கிறார்.



கல்கி : தமிழ்நாட்டில் காங்கிரஸின் செல்வாக்கு பற்றி எல்லோருக்கும் தெரியும். அதுவும் த.மா.கா. பிரிந்து போன பிறகு சுத்தமாக காங்கிரஸ் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் தலைவர்களுக்கிடையே உள்ள மோதலினால் கட்சி ஒன்றுமில்லாமல் போய்விடும் போலிருக்கிறதே!

வாழப்பாடி : த.மா.கா. பிரிந்து சென்றதால் கட்சியின் இரண்டாம் கட்டத் தலைவர்கள் சென்றார்களே தவிர, தொண்டர்கள், அப்படியேதான் இருக்கிறார்கள். ஆனால் சோர்ந்து போயிருக்கிறார்கள். ஆக்ஸிஜன் சிலிண்டரின் துணையோடு படுத்துக் கிடக்கும் நோயாளி போல தமிழ்நாட்டில் காங்கிரஸ் இருந்தது. என்னை நீக்கியதன் மூலம் ஆக்ஸிஜன் குழாயைப் பிடுங்கி விட்ட செயலைச் செய்திருக்கிறார் தங்கபாலு. காங்கிரஸுக்கு சேவை செய்ய யாருடைய அனுமதியும் எனக்குத் தேவையில்லை.

கல்கி : மாவட்டங்களில் உங்கள் ஆதரவாளர்களைக் கூட்டி தனியாகச் செயல்படுவதாகவும், விரைவில் தனிக்கட்சி துவக்க இருப்பதாகவும் உங்கள் மீது குற்றம் சுமத்தியிருக்கிறார்களே!

வாழப்பாடி : ஒட்டுமொத்தமாக காங்கிரஸின் நன்மைக்காகத்தானே செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன். தனிக்கட்சி என்பதெல்லாம் சுத்த கற்பனை. தொடர்ந்து காங்கிரஸில் பணிபுரிவேன்.

கல்கி : மூப்பனாரை மீண்டும் காங்கிரஸில் இணைய அழைத்தால் உங்களுக்கு ஏன் கோபம் வருகிறது?

வாழப்பாடி : மீண்டும் காங்கிரஸில் மூப்பனார் இணைவதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் கிடையாது. ஆனால் மூப்பனார் இணைய மாட்டார். இது கல்லில் எழுதி வைத்துள்ள விஷயம்.

கல்கி : கடந்த பொதுத் தேர்தலின்போது அ.தி.மு.க.வைக் கடுமையாக எதிர்த்த நீங்கள் இப்போது அதே ஊழல் கட்சியுடன் கூட்டு சேர வேண்டும் என்று சொல்வது எந்தவிதத்தில் சரி?


வாழப்பாடி : தமிழ்நாட்டைப் பொறுத்த வரை 67லிருந்து பார்த்தீர்களானால் கூட்டணி என்பது தவிர்க்க முடியாததாகியிருக்கிறது. சென்ற

தேர்தலில் காங்கிரஸ், அ.தி.மு.க.வுடன் கூட்டு சேரக் கூடாது என்று நானும் மூப்பனாரும் சொன்னோம். ஆனால் தங்கபாலு அ.தி.மு.க.வுடன் கூட்டணி என்றார். அதன் காரணமாகத் தமிழ் நாட்டில் காங்கிரஸ் குழி தோண்டிப் புதைக்கப் பட்டது. என்னைப் பொறுத்தவரை ஊழல் அரசியல்வாதிகளுக்கு தண்டனை என்பது தேர்தல் தோல்விதான். மக்கள் அதற்கு மேல் இந்த விஷயத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அப்படிக் கவலைப்பட்டால் புதுக்கோட்டை தேர்தலில் அ.தி.மு.க. டெபாஸிட் கூட வாங்கியிருக்கக் கூடாதே! அது சரி; கருணாநிதி மாறவில்லையா?

கல்கி : அதற்கு பதில் காங்கிரஸ் த.மா.கா. வுடன் கூட்டு சேர்ந்து செயல்படலாமே!

வாழப்பாடி : நாங்களும் த.மா.காவும் சேர்ந்துதான் தமிழகத்தின் ஒட்டுமொத்த காங்கிரஸ். 77 மற்றும் 89-ம் ஆண்டுகளில் தனித்துப் போட்டியிட்டோமே, அப்போது என்ன நடந்தது? அதுதான் மீண்டும் நடக்கும். இப்போதைய நிலையில் த.மா.கா. பெரிய ஜீரோ, காங்கிரஸ் சின்ன ஜீரோ. இரண்டும் சேர்ந்தால் இரண்டு ஜீரோக்கள் தான். இப்போது நான் சவால் விடுகிறேன். இரு சட்டமன்றத் தொகுதிகளில் இடைத்தேர்தல் வர இருக்கிறது. ஏதாவது ஒரு தொகுதியில் த.மா.கா.

வாழப்பாடி ஒரு பிளாக் மெயிலர்!



தனியாக நின்று 20000 ஓட்டுக்கள் வாங்கிக் காண்பிக்கட்டும். நீங்கள் குறிப்பிடும் ஊழல் கட்சியுடன் சேராமல் த.மா.கா.வுடன் உடன்பாடு கொண்டு தைரியமாக வரும் தேர்தலைச் சந்திக்கிறோம். மூப்பனார் செய்து காட்டுவாரா?

கல்கி : சூழ்நிலைக் கைதியாகத் தங்கபாலு இருக்கிறார் என்று சொல்லியிருக்கிறீர்களே?

வாழப்பாடி : அவர் அப்பா பெயரில் நடத்தும் பொறியியல் கல்லூரிக்காகப் புறம்போக்கு நிலங்களை அபகரித்து இருக்கிறார். தவிர கிரானைட் ஊழலிலும் அவருக்குப் பங்கு உண்டு. ஏகப்பட்ட சொத்துக்கள் சேர்த்திருக்கிறார். சி.பி.ஐயிடம் விசாரிக்க மனு கொடுத்திருக்கிறோம். ஆக இந்தக் குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பித்துக் கொள்ள கருணாநிதியையும் மூப்பனாரையும் அண்டி அரசியல் நடத்துவதைத்தான் சூழ்நிலைக் கைதி என்று சொன்னேன்.

வாழப்பாடியின் குற்றச்சாட்டுகளைத் தங்கபாலுவிடம் கொண்டு போனோம். அவர் கூறியவை :

கல்கி : விதிகளின்படி தன் மீது நடவடிக்கை எடுக்க உங்களுக்கு அதிகாரம் இல்லை என்று வாழப்பாடி சொல்கிறாரே!

தங்கபாலு : தொடர்ந்து கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார் வாழப்பாடி. தமிழ்நாடு காங்கிரஸின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரின் கீழ் செயல்பட மாட்டேன் என்று சொல்வது எந்தவிதத்தில் சரி? மாவட்டங்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய சில ஆதரவாளர்களை வைத்துக் கொண்டு தனியாகச் செயல்பட்டு கட்சியில் குழப்பங்களை உண்டுபண்ணி வந்தார். எந்த ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளும் நிற்காமல் தான்தோன்றித்தனமாகச் செயல்படுவதே அவருடைய அரசியல் ஆகிவிட்டது. எங்கள் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள் ஆகியோர் என்னைத் தொடர்ந்து வற்புறுத்தி அவரை நீக்கியே ஆக வேண்டும் என்று முறையிட்டார்கள். ஆறு மாதங்கள் பொறுத்துப் பார்த்து, பின்னர் 'தனிநபரை விட கட்சியின் நலனே முக்கியம்' என்ற அடிப்படையில்தான் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாநில முன்னாள் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்க மேலிட அனுமதி தேவையில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரின் அதிகார வரம்புக்கு உட்பட்டுத்தான் செயல்பட்டுள்ளேன். ஒன்று, தலைமையை ஏற்றுக் கொள்ள வேண்டும்; அல்லது வெளியேறி விட

(தொடர்ச்சி பக். 61)

நீங்கள் கேட்டவை - தராசு

● **சி. மகேஷ், சென்னை - 83.**

? தமிழக பஸ் கட்டண உயர்வு, குறைப்பு, தினசரி அறிக்கைகள்....?

! கட்டணத்தை உயர்த்திவிட்டு பிறகு சற்று குறைப்பது வழக்கமான கண்துடைப்பு. கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டதுமே, 'மக்கள் கோரிக்கைக்கு இணங்க சற்று குறைப்பதாக அறிக்கை வரும் பாருங்க' என்று விண்டு வைத்து ஜெயலலிதா முந்திக் கொண்டார்! அது தான் போகட்டும் என்றால், பிற மாநிலங்களுடன் கட்டணத்தை ஒப்பு நோக்கி அரசு கொடுக்கிற (வரிப்பணம்!) விளம்பரங்கள் பயணிகளின் ஆத்திரத்தை அதிகமாக்குகின்றனவேயன்றி குறைக்கவில்லை. இதற்கு முக்கியக் காரணம், சேவை திருப்திகரமாக இல்லாதது தான்.

● **சி.கொ.தி. முருகேசன், கோபி.**

? சகாரா கோப்பையையாவது இந்தியா கைப்பற்றுமா?

! முதல் இரண்டு ஆட்டங்களில் நம்மவர்கள் பெற்ற வெற்றி நம்மை நிமிர்ந்து உட்காரச் செய்தாலும் மூன்றாவது ஆட்டத்தில் பாக். ஆடிய விதம் சந்தேகத்தையே கிளப்பியது. ஆனாலும் வருண பகவானின் கருணையால் அந்த ஆட்டமே கான்சல் ஆகி, அடுத்த நாள் ஆடியதால் தப்பித்தோம் போங்கள்!

● **மல்லிகை மன்னன், மதுரை - 14.**

? 'பாரதியாரை ஒரு காலத்தில் திராவிடக் கட்சிகள் வெறுத்தன. ஆனால் பிறகு ஏற்றுக் கொண்டுவிட்டன.' என கருணாநிதி திருவாய் மலர்ந்திருக்கிறாரே... இது எப்படி இருக்கு...?

! முன்பு வெறுத்தவர்கள் கூட பிறகு மனம் மாறி ஏற்றுக் கொண்டதுதான் பாரதியின் பெருமை என்று கூறினார் முதல்வர். இதை ஏற்பதில் உங்களுக்கு என்ன தயக்கம்...?

● **தேனி முருகேசன், தேனி.**

? பிளஸ் டூ மாணவர்கள் ஐந்து பேருக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தால்தான் சான்றிதழ் பெற முடியும் என்கிற புதிய திட்டம் பற்றி...?

! யாரேனும் நீதிமன்றம் போனால், திட்டம் அம்பேல் ஆகிவிடும்.

● **சூர்ய நிலா, சேலம் - 2.**

? பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வு வலி இல்லாத அறுவை சிகிச்சையைப் போன்றது என்கிறாரே பெட்ரோலியத் துறை அமைச்சர் ஜானேஸ்வர் மிஷ்ரா?

! அறுவை சிகிச்சையால் என்றுமே டாக்டருக்கு வலி கிடையாது!

● **ந. சிவாயமூர்த்தி, பெருந்துறை.**

? தீபாவளி மலரில் தாங்கள் வெளியிடவிருக்கிற கட்டுரை, கதைகளைச் சொல்லி விளம்பரப்படுத்தாமல், யார் யாரோ பரிசுகள் தருவதைச் சொல்லி விளம்பரப்படுத்தப்படுகிறதே... பத்திரிகைகள் செல்லும் இந்தப் பாதை சரிதானா?

! இப்படி ஒவ்வொரு வாசகரும் சிந்தித்துப் பத்திரிகை வாங்க ஆரம்பித்தால் போதும்; பாதை ஆரோக்கியமானதாகிவிடும்.

● **வீ. முத்துக்குமரன், திருமானூர்.**

? சுப்பிரமணியம் சுவாமியிடமும் சந்திரலேகாவிடமும் பாராட்டு பெற கருணாநிதி என்ன செய்ய வேண்டும்...?

! ஆளுக்கு ஒரு தேர்தல் சீட்! - அப்போதே கொடுத்திருக்க வேண்டும்!

● **அ. ஷண்முகசுந்தரம், சென்னை - 14.**

? 'இனி சுற்றுப் பயணங்களின்போது ஹரிஜனங்களின் இல்லங்களில்தான் மதிய உணவை உண்பேன்' என்று மூப்பனார் அறிவித்திருப்பது பற்றி...?

! பொன்னம்மாள் கூறிய யோசனையை உடனடியாக ஏற்றுக் கொண்ட மூப்பனாருக்குப் பாராட்டு. ஹரிஜனங்களின் உண்மை நிலை தெரிய வேண்டுமானால் முன்னேற்பாடாக இல்லாமல் திடீரென்று போக வேண்டும். அது இன்னும் சிறந்த பலனைக் கொடுக்கும்.

● **கே.வி. சூர்யா, தல்லத்துக்குடி.**

? அன்னை தெராஸாவின் இழப்பை ஈடு செய்ய யாராவது இருக்கிறார்களா?

! ஏன், அன்னை ஜெயலலிதா இல்லையா?

• முந்திக் கொண்டார்




• வெறுப்பும் விருப்பும்



• ஏற்ற....



• ...யோசனை!



• ஆட்டமும் பேச்சும்!



('ஜெயலலிதாவை எதிர்ப்பதுதான் உங்கள் வேலையா?' என்று பிரதி செவ்வாய், வியாழன் தோறும் போன் செய்யும் வில்லிவாக்கம் சாம்ப மூர்த்திக்கு மட்டுமே இந்த பதில் சமர்ப்பணம்).

● *சரண்யா, விருதுநகர்.*

? சமீபத்தில் உங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய செய்தி...?

! மத்திய பிரதேசத்தில் பாலத்திலிருந்து ரயில் சரிந்து 78 பேர் மரணம்; விசாகபட்டணம் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் வளாகத்தில் தீப் பிடிக்க, 35 பேர் சாவு - என துக்க ஞாயிறாக முடிந்த செய்திகள்...

● *ப. சுகுமார், தூத்துக்குடி - 1.*

? தமிழ் உட்பட அனைத்து மாநில மொழிகளையும் மத்தியில் ஆட்சி மொழியாக்கினால் ஆங்கிலத்தை விரட்டி விடலாம் என்கிறார் நமது முதல்வர்... உங்கள் கருத்து?

! ஹிந்தி போலவே எல்லா இந்திய மொழிகளும் தேசிய மொழிகள். ஆங்கிலம்: ஆட்சி மற்றும் தொடர்பு மொழி. தாய்மொழி: ஆரம்பப் பள்ளிகள் அனைத்திலும் பயிற்று மொழி. இந்த மும்மொழித்திட்டம்தான் பயன் தரும். ஒருமைப்பாட்டையும் காக்கும்.

● *தா. ஷேக் உசேன், செஞ்சி* ❑

? த.மா.கா ஆரம்பிக்கப்பட்டபோதே மூப்பனார் தமது எம்.பி. பதவியை ராஜினாமா செய்திருக்கலாமே? அதை இப்போது செய் ததன் காரணம் என்ன?

! மூன்று காரணங்கள் உண்டு: காங்கிரஸ் ஆதரவு பெற்றுத்தான் ஐ.மு. இயங்குகிறது என்பது ஒன்று; காங்கிரஸும் அமைச்சரவையில் இடம் பெற வேண்டும் என்று மூப்பனார் கூறி வருவது இரண்டு. இந்த இரு காரணங்களாலும், தாம் காங்கிரஸ் உறுப்பினராகவே நீடிப்பதை அக்கட்சி ஆட்சேபிக்கப் போவதில்லை என்பது மூன்று. இப்போது சிவசேனை தப்பு கண்டு பிடித்திருக்கிறது. அதனால் மூப்பனாரின் கணிப்பு தப்புக் கணக்காகி விட்டது!

● *எம். அசோக்ராஜா, அறவக்குறிச்சிப்பட்டி.*

? போலீஸ் விசாரணைக்கு அழைத்துப் போனால் எழுத்து மூலம் சான்றிதழ் வழங்க வேண்டும் என்ற டி.ஜி.பியின் உத்தரவை வரவேற்கிறீர்களா?

! அர்த்தமுள்ள, அவசியமான ஆணை. கட்டாயம் வரவேற்கலாம். லாக் அப் மரணத்தைத் தொடர்ந்து காவல் துறையினர் சஸ்பெண்ட் ஆனதையும் சேர்த்து வரவேற்கலாம்.

● *வசந்தாகாந்த், கருப்பம்புலம்.*

? 'சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பொன்விழா நாடாளுமன்றத் தொடரில் கலந்து கொள்ளாமல் சென்னையில் நடனமாடியது எவ்வகையில் சரி' என்று கேட்டபோது, 'அங்கே மட்டும் என்ன பெரிதாக சாதிக்கப்பட்டிருக்கிறது!' என்று வைஜயந்திமாலா பாலி பதில் சொன்னதைக் கவனித்தீர்களா?

! அப்படியானால், மீண்டும் எம்.பி. பதவியை ஏற்காமல் மறுத்து, அரசு வீட்டை மரியாதையாகக் காலி பண்ணி யிருக்கலாமே...! இவரைப் போன்ற எம்.பிக்கள் இருந்தால் என்னத்தை சாதிக்க முடியும்!

● *ஏ.எஸ். இராமசாமி, கோவை - 14.*

? மூப்பனார் உள்பட மூவர் மீண்டும் ராஜ்ய சபாவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட தி.மு.க. உதவுமா?

! உதவி கேட்பது த.மா.கா. உரிமை. கொடுப்பது தி.மு.க. கடமை என்று முதல்வர் சொல்லிவிட்டாலும் எந்த அளவுக்கு என்பதில் சர்ச்சை எழும் வாய்ப்பு உண்டு.



• தவறவிட்டார்!

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
தா. ஷேக் உசேன்,
98, சிங்கவரம் சாலை,
சிறுகடம்பூர், செஞ்சி - 604 202.

மூப்பனார் இப்போது ராஜினாமா செய்தது...?

GURUDEV

சுராணா

ஃபைனான்ஷியல் கார்ப்பரேஷன் (இந்தியா) லிமிடெட்

(முந்தைய பெயர் S.U.S. ஃபைனான்ஷியர்ஸ் (இந்தியா) லிமிடெட்)

Group of Surana

1971 முதல்

இரும்பு போன்ற உறுதி, தங்கம் போன்ற நாணயம் கொண்ட குழுமத்தின் ஒரு அங்கம்.

சுராணா அளிக்கும் முதலீடு திட்டங்கள்

ஆண்டுக்கு வட்டி விகிதம் 15%

CARE மதிப்பீட்டாளர்களால் "போதுமான பாதுகாப்பு" சான்றிதழ் பெற்றது. (BBB+)

சுராணா நிறுவனங்கள் 1971 முதல் இயங்கி வருபவை. 25 ஆண்டு அனுபவம் பெற்றவை.

சுராணா நிறுவனங்கள் இரும்பு உற்பத்தி, இரும்பு வியாபாரம் முதலிய தொழில்களில் ஈடுபட்டுள்ளன. இக்குழுமம் தென்னகத்தில் இரும்பு வியாபாரத்தில் முதலிடம் வகிக்கிறது.

குழுமத்தின் மொத்த விற்பனை அளவு 1996-97-ல் ரூ.175 கோடி.

சுராணா ஃபைனான்ஷியல் கார்ப்பரேஷன் (இந்தியா) லிமிடெட் (SFCIL), ஹயர் பர்ச்சேஸ், லீசிங், பில் டிஸ்கௌண்டிங், ஃபாரின் எக்ஸ்சேஞ், பப்ளிக் டிபாசிட் போன்ற பல வகைப்பட்ட நிதி நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளது.

SCHEME 1 - FIXED DEPOSITS

Period (Months)	Rate of Interest per annum
12 24 36 48 60	15.00% (Monthly) 15.19% (Quarterly)* 15.48% (Half-yearly)*

1. Minimum Amount of Deposit is Rs.3,000/-
2. Minimum Amount of Deposit for Monthly Interest is Rs.10,000/-

* Interest at 15% Compounded at Monthly rests.

SCHEME 2 - GURUDEV CERTIFICATE

(Cumulative Deposit)

Period (Months)	Minimum Amount (Rs.)	Maturity Value (Rs.)	Maturity Value for Rs. 1,000/-	Annual Yield% (Simple Interest)
12	3,000	3,482	1,161	16.06
24	3,000	4,042	1,347	17.36
36	3,000	4,692	1,564	18.80
48	3,000	5,446	1,815	20.38
60	3,000	6,321	2,107	22.14

1. Minimum Amount of Deposit is Rs.3,000/-
2. Addition in Multiples of Rs.1,000/-
3. Interest at 15% Compounded at Monthly rests.

SCHEME 3 - SURYODAY CERTIFICATE

(Cumulative Deposit)

Period (Months)	Principal (Rs.)	Maturity Value (Rs.)	Annual Yield% (Simple Interest)
12	862	1,000	16.01
24	742	1,000	17.38
36	639	1,000	18.83
48	551	1,000	20.37
60	474	1,000	22.19

Interest at 15% Compounded at Monthly rests.

சுராணா ஃபைனான்ஷியல் கார்ப்பரேஷன் (இந்தியா) லிமிடெட்

குரூப் ஆப் சுராணா

நெ. 16, ஒயிட்ஸ் சாலை, இரண்டாவது மாடி,

சென்னை - 600 014.

போன் : 8522595 / 8526581 / 8522753 / 8522684 / 8525396 / 8525694 / 8525596

ஃபாக்ஸ் : (044) - 8520587.

கிளைகள் : திருச்சி: 'TAB காம்ப்ளெக்ஸ்', முதல் தளம், 32-B, வில்லியம்ஸ் ரோடு, கன்டோன்மென்ட், திருச்சி-620 001. போன்: 461821; **கொள்ளிடம்:** 7/157, மெயின் ரோடு, கொள்ளிடம்-609 102. போன்: 77454; **சங்கரன்பந்தல்:** 3/10-A, மெயின் ரோடு, சங்கரன்பந்தல்-609 308. போன்: 85423, 85536; **பெங்களூர்:** 302, 3-வது தளம், ஸ்வீஸ் காம்ப்ளெக்ஸ், 33, ரெஸிடென்ஸ் ரோடு, பெங்களூர்-560 001. போன்: 228143; **எர்ணாகுளம்:** 2-வது தளம், பெப்பர்மின்ட் சதன், நெ-39/4232 எம்.ஜி. ரோடு, ரவிபுரம், எர்ணாகுளம், கொச்சின்-682 016. போன்: 374617; **கோயம்புத்தூர்:** முதல் தளம், ரெட்ரோஸ் டவர்ஸ், 424-A, டி.பி. ரோடு, ஆர்.எஸ். புரம், கோயம்புத்தூர், போன்: 471990 ஆகிய இடங்களில் உள்ளன.

ADWWE/SFC/5420

29.9.96 தேதியிட்ட மக்கள் குரல், Trinity Mirror நாளிதழ்களில் வெளியான சட்டபூர்வமான விளம்பரத்தின் தொடர்ச்சி

மரணம் தருபவர்கள்



• கல்லு (படுத்தபடி), மம்மு.

1942 முதல் குற்றவாளிகளைத் தூக்கிவிடும் தொழிலில் ஈடுபட்டு வருபவர் எண்பத்தி ஐந்து வயதான மீரட்டைச் சேர்ந்த கல்லு. இவர் தூக்கிலிட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பில்லா, ரங்கா மற்றும் பிரதமர் இந்திரா காந்தியின் மரணத்திற்குக் காரணமான சத்வந்த் சிங் மற்றும் கேஹர் சிங்.

கல்லுவின் தாத்தாவும், தந்தையும் இதே தொழிலைத்தான் செய்து கொண்டிருந்தனர். ஆங்கிலேயர் ஆட்சியில் ஒரு தூக்கு தண்டனைக்கு அவர் தாத்தாவுக்குக் கிடைத்த சம்பளம் ஐந்து ரூபாய்! இப்போது கல்லுவின் மகன் மம்முவும் இந்தத் தொழிலைச் செய்து கொண்டிருக்கிறார்.

இதுவரை இவர் தூக்கிலிட்டது இருபது பேர். கல்லுவுக்கு வயதாகி விட்டதால் அவருடைய பெயரில் மகன் மம்முதான் அந்த வேலையைச் செய்கிறார். தன் பெயரிலேயே வேலையை மாற்றம் செய்து கொடுத்து, கூடுதல் சம்பளமும் பென்ஷனும் தர வேண்டும் என்பது தான் இவருடைய கோரிக்கை.

"தூக்கிலிடும்போது உங்கள் மனநிலை...?"

"இதை ஒரு தொழிலாகத்தான் செய்கிறோம். அதனால் வருத்தமோ, குற்ற உணர்வோ எங்களுக்கு இல்லை" என்கின்றனர் இருவரும்.

ஒரு அடி ஒரு அங்குலம் நீளமுள்ள தூக்குக் கயிறு. ஒரு அங்குலம் குறைந்தாலும் தண்டனை பெறும் குற்றவாளி கீழே போய் தத்தளிக்கும்படி நேரிடுமாம்! எல்லா ஏற்பாடுகளும் முதல் நாளே செய்யப்பட்டு விடும் என்று கூறும் மம்மு, "திரைப்படங்களில் வருவது போல் தண்டனை நிறைவேற்றப்படப் போகும் அந்த வினாடியில் ஜனாதிபதியின் கருணை மனுவுடன் வந்து தண்டனையை நிறுத்துவது இதுவரை நடந்ததில்லை" என்கிறார்.

மேலும் தூக்கு தண்டனை குற்றவாளியின் கடைசி ஆசையை நிறைவேற்றுவது என்பதும் கிடையாது என்கிறார். தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு இரண்டு நாட்கள் முன்பு குற்றவாளி யாரையேனும் பார்க்க விரும்புகிறாரா என்று மட்டும் கேட்கப்படுகிறதாம்.

ஒரே ஒரு முறை இரண்டு சோல்ஜர்களைத் தூக்கிலிட அலஹாபாத் போனபோது, அவர்களுடைய அப்பீல் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று கூறினார்களாம்.


மம்முவின் தந்தை கடைசியாகத் தூக்கி விட்டது சத்வந்த் சிங் மற்றும் கேஹர் சிங். தூக்கிலிடப் போன அந்தத் தருணத்தில் சத்வந்த் சிங், கேஹருடன் பேச வேண்டும் என்று விரும்பினான். ஆனால் போலீஸ் அதற்குச் சம்மதிக்கவில்லை. கல்லுவைப் பார்த்து "ஜாக்கிரதையாக செய்" என்று கூறி தைரியமாக இருந்தானாம், சத்வந்த் சிங். ஆனால் கேஹர் மயக்கமாகி விட்டானாம்.

மம்முவிற்கு ஆறு மகன்கள். அவருடைய கடைசி மகன் இந்தத் தொழிலில் விருப்பம் காட்டுகிறானாம். ஆனால் அவனுடைய தாயார் இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை.

— கலா

நன்றி: தி வீக்

✦ ஷேவ் செய்த பிளேடை ஈரம் போகத் துணியால் துடைக்காமல், பவுடர் பஃபால் ஒற்றியெடுப்பது நல்லது. கூடுதலாக ஒரு ஷேவுக்கு வரும்!



நடுங்குகிறது பாலிவுட்!

அவிழாத புதிர்

இப்போதெல்லாம் சினிமாக்காரர்களின் ஆட்டோ கிராஃப் வாங்க, யாரும் அவர்கள் வீடு தேடியோ, ஸ்டுடியோவிலோ அலைந்து திரிய வேண்டாம்; போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்கு முன் நின்றாலே போதும்! ஷாருக்கானிலிருந்து, (பாவம், இவர் கொலையுண்டதாக ஏகப்புரளி) அல்காயக்னிக் வரை, ஒவ்வொருவராக அழைக்கப்பட்டு, குல்ஷன்குமார் கொலை வழக்கில் விசாரிக்கப்படுகிறார்கள். துபாயில் நடந்த நதீம்-ஷ்ரவண் இசை விருந்தில், துடைப்பம் எடுத்துப் பெருக்கியவரைக் கூட விடவில்லை! ஆனால் எல்லோரும், "நதீம் எங்களை அழைத்தார்; சென்றோம்" என்ற ஒரே பாட்டைத்தான், ரிஹர்சல் இல்லாமலேயே பாடி வருகிறார்கள். நதீமோ, 'மனைவிக்கு குறைப் பிரசவம்' என்ற சோக கீதத்தை லண்டனிலிருந்தே இசைத்து வருகிறார். ஸஞ்சய் தத்தின் வக்கீலைத் தனக்கு வழக்காட நியமித்து, 'நான் குற்றமற்றவன்; முஸ்லிம் என்பதால் இம்சிக்கிறார்கள்; தாக்கரே உண்மைகளை வெளிக்கொணர்வார்' என்கிறார். "இவர்கள் பிடித்திருப்பதெல்லாம் சின்ன மீன்களை; மூன்று பெரிய சுறாக்கள், இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டிருக்கின்றனர்" என புதிர் போடுகிறார் தாக்கரே! புதிர் அவிழ்ந்து, சுறாக்கள் சிக்கும்வரை மீன்களுக்குத் திண்டாட்டம்தான்!



நடுக்கம் தந்த ஒடுக்கம்

முன்பெல்லாம், பாலிவுட்டில் யாராவது 'அச்'சென்று தும்மினால், அதை ஒட்டி பார்ட்டி நடக்கும்! மது ஆறு ஓடும்! இரவெல்லாம் கூத்துதான்! ஆனால் இப்போது ஆறடித்தால் எல்லோரும் வீட்டுக்குள் நத்தையாய் சுருண்டு விடுகிறார்கள்! கிளப், பார்ட்டி, வகையறாக்களின் ஸ்பெல்லிங் கூட மறந்து விட்டார்கள்! பலர் புரொடக்ஷன் ஆபீசுக்குக் கூடச் செல்வதில்லை; 'மனைவி பயப்படுகிறார்' என்ற போர்வையில், வீட்டிலிருந்தேதான் எல்லா இயக்கமும்! விளம்பரத்துக்கு ஆலாய்ப் பறந்த நிலை மாறி, பத்திரிகையாளர், பேட்டி என்றாலே ஓட்டமெடுக்கிறார்கள். தப்பித்தவறி தங்கள் பெயர் பிரசுரமாகி, தாங்கள் ஏதோ பெரும் புள்ளி என்று அண்டர்வர்ல்ட்காரர்கள் நினைத்து விட்டால்?... ஏற்கெனவே டெலிஃபோனில் வரும் மிரட்டல்கள் தாளாமல், பலர் தங்கள் தொலைபேசி எண்களை ரகசியமாக மாற்றிக் கொண்டு விட்டனர். அப்படியும் கூட, புதிய எண்கள் விவரம் தாவூத்துக்கு ஒரே வாரத்தில் எட்டிவிடுகிறதாம்! காவல் துறையின் பாதுகாப்பு ஒரு புறம்- தாங்களாகவே நியமித்திருக்கும் செக்யூரிட்டி மறுபுறம்- ஏதோ 'ஹவுஸ் அரெஸ்ட்டில்' இருப்பவர்கள் போல் பாலிவுட்காரர்கள் நடுங்குகிறார்கள். இந்த அழகில், தாவூத்தின் பரம எதிரியான காவ்லியின் அடியாட்கள், 'உங்களுக்கு நாங்கள் பாதுகாப்புத் தரவா?" என பேரம் பேசிக் கொண்டிருக்கிறார்கள்!

காதலுக்கு ஜே!

தாதர்-மாதுங்கா இடையேயுள்ள பார்ஸி காலனியின் "பாஞ்ச்-கார்டன்" பூங்கா, காதலர்களின் சொர்க்கபூமி! இளஞ்சிட்டுக்கள் இங்கே கொஞ்சிக் குலவும் காட்சிகள் சர்வசகஜம்! காங்கிரஸ் கார்ப்பொரேட்டரான பாபுபாய் பவன்ஜி, இந்தக் காதலர்களின் நிஜ வில்லனாய் முளைத்தார். BMCக்காரர்களைக் கூப்பிட்டு, சிட்டுகளை (பெஞ்சுக்குப் பதில் ஸ்டூல்களாக) நிறைய



• ஷாருக்கான்

இடைவெளி விட்டு அமைக்கச் சொன்னார். இப்படிச் செய்வதால், காதலர்கள் நெருங்கி அமர்ந்து தழுவ முடியாது என்பது அவர் எண்ணம்! ஆனால் பொதுமக்கள், இந்த எதிர்ப்பை எதிர்த்து, காதலுக்குப் பச்சைக் கொடி காட்டியுள்ளனர்! "பாவம்; இட நெருக்கடி மிக்க மும்பையில், இளம் ஜோடிகள் சேர்ந்திருக்கத் தோதான இடங்களே மிகக் குறைவு! இருக்கும் ஒன்றிரண்டையும் குலைப்பதாவது?'' என ஆத்திரப்பட்டுள்ளனர். மேலும் பெஞ்சுகளுக்கு பதில் ஸ்டூல்களை அமைத்தால், அருகருகே அமர்ந்தவர்கள், மடி மீதே உட்கார்ந்து விடலாம் என்ற புதிய கவலையையும் கிளப்பி விட்டனர்! பாவம் பாபு பாய்! கப்சிப் ஆகிவிட்டார்!


சின்னம் சின்னாபின்னம்!

''கேட் வே ஆஃப் இந்தியா" மும்பையின் பெருமைகளுள் ஒன்று. தாஜ் மஹால் ஹோட்டல்காரர்கள், இதன் சுற்றுப்புறத்தை அழகுபடுத்தும் வேலையில் ஆர்வத்துடன் ஈடுபட்டிருப்பது வரவேற்கத் தக்கதுதான்! ஆனால் ஆர்வம் சற்று அதிகமாகி – அருகிலேயே ஒரு கழிவறையை, அதே டிஸைனில் கட்டித் தொலைத்திருப்பதுதான் கேலிக்குரிய விஷயமாகிவிட்டது! அசப்பில், மினி கேட்வே போலவே உள்ளது இந்தக் கட்டடம்! Indian National Trust of Arts and Cultural Heritage தலைவர் தஸ்லீன் மேத்தா "உலகத்தார் கண்களில் நம்மை இப்படி நகைப்பிற்குரியவர்களாக்கி விட்டார்களே? நாளை BMCஅருகிலேயே, அதே மாடலில் ஒரு டாய்லெட்டைக் கட்டி வைத்தால், இவர்களில் எத்தனை பேரால் அலுவலகத்துள் தலையை நிமிர்ந்து கொண்டு நுழைய முடியும்?" என்றொரு சூடான கேள்வியை எழுப்பியிருக்கிறார்; நியாயம்தானே? பார்க்கப் போனால், இதுபோன்ற புராதனச் சின்னங்களைச் சுற்றிலும் வெற்றிடமாகவே வைத்திருக்க வேண்டுமென்பதுதானே மரபு?


கோவிந்தன் கருணை

மரணிக்கும் தருவாயிலிருக்கும் இளம் குருத்துகளின் அடிமனத்தில் பொதிந்திருக்கும் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றி வைப்பதற்கென்றே ஆரம்பிக்கப்பட்டது, 'Make - a - wish foundation. அண்மையில், சயான் ஆசுபத்திரியில் லுகேமியாவுடன் போராடிக் கொண்டிருக்கும் சிறுவன் ரமேஷ், மும்பையின் 'ஹீரோ நம்பர்: 1'ஆன கோவிந்தாவுடன், அளவளாவ வேண்டும் என்ற வினோத ஆசையை வெளிப்படுத்தினான். கோவிந்தாவின் வீட்டார், விசிறிகளிலிருந்து, ஆசுபத்திரி நர்ஸ், டாக்டர்கள் வரை எல்லோரும் 'டென்ஷனாகி' விட்டார்கள். காரணம் – பத்து நாட்கள் பறந்தும், பிஸி நடிகரான கோவிந்தாவுக்கு, நேரம் கிடைக்கவில்லை! பையனின் நிலையோ நாளுக்கு நாள் கவலைக்கிடம்! இந்நிலையில், கோவிந்தாவின் மனைவி, ஆஞ்சநேயர் சிலை, அழகிய மலர்கள் சகிதம் ரமேஷைக் காண வந்தார். ஆனாலும் சிறுவன் ரமேஷுக்கு திருப்தியாகவில்லை. கடைசியில் கோவிந்தாவே, சயான் ஆசுபத்திரிக்கு வந்து, ஒருமணி நேரம் செலவழிக்கவேண்டி நேர்ந்தது! அவன் மருத்துவச் செலவுகளை தாம் ஏற்பதாக அறிவித்து, பல ஆண்டுகளுக்கு முன், இதே நிலையில், தன் தங்கையைப் பறிகொடுத்த சோகக் கதையை நினைவு கூர்ந்தார். நெகிழ்ச்சி கலந்த மகிழ்ச்சி – ரமேஷுக்கு மட்டுமல்ல, ஆசுபத்திரியில் அனைவருக்குமே! யார் சொன்னார்கள், நடிகர்கள் இதயமற்றவர்களென்று?

— ஜெயஸ்ரீ ராஜ்



✦ காஸ் அடுப்பை அணைத்தவுடன், சூடு இருக்கும்போதே கை படாமல் துடைப்பதால் ஸ்டவ் பளபளவென்று மின்னும்!



✦ பெரிய காலி பேஸ்ட் அட்டைப் பெட்டியைக் கண்ணாடிக்குப் பக்கத்தில் ஆணி யடித்து மாட்டி சீப்புகளை வைக்கலாம்.

ஆலிஸனையும் பேஜையும் மாறி மாறிப் பார்த்தபடி ஒரு நிமிடம் நின்றிருந்தாள் நர்ஸ். பிறகு போய் விட்டாள். இதுபோல எவ்வளவோ காட்சிகளை அவள் பார்த்தாயிற்று. இருந்தாலும் ஒவ்வொரு முறையும் இது வேதனைதான். அதிலும், மரணப் போராட்டத்தில் இருக்கும் குழந்தையையும், அதைப் பார்த்தபடி பக்கத்திலே உட்கார்ந்திருக்கும் தாயையும் காணுவது – அம்மம்மா! நரக வேதனை!

பேஜ் குனிந்து ஆலியிடம் ரகசியம் பேசுகிற மாதிரி பேசினாள் : "ஆலி... கண்ணம்மா, இதோ பார். நான் உன் பக்கத்திலேதான் உட்கார்ந்திருக்கிறேன். பயப்படாதே. எல்லாம் நல்லபடி ஆகும். நான் இங்கேயேதான் இருப்பேன். உன்னை விட்டு எங்கேயும் போக மாட்டேன். உனக்குத் துணையாய் உன்னோடு கூடவே இருப்பேன்..."

– என்று சொல்லிக் கொண்டிருக்கையில், ஏதாவது புது இடத்துக்குப் போவதென்றால் ஆலிக்குப் பிடிக்காது என்பது ஞாபகம் வந்தது.

இப்போது நீ போகப் போவது முற்ற முழுக்கப் புதிய இடம். உனக்குத் துணை வர என்னால் முடியாது. ஆனால் உடலால் முடியாவிட்டாலும் உள்ளத்தால் உன்னோடு எப்போதும் இருப்பேன்.... நீயும் என்னோடு இருப்பாய்.

"மிஸஸ் பிராட்," என்று மெல்ல அழைத்தபடி அருகில் வந்து நின்றார் டாக்டர் ஹேமர்மேன். "கொஞ்சம் கொஞ்சமாக ஆலிஸனை இழந்து கொண்டிருக்கிறோம்...."

"தெரியும்," என்றாள் பேஜ். கன்னங்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருப்பது அவளுக்கே தெரியவில்லை. புன்னகையுடன் அவரை நிமிர்ந்து பார்த்தபோது, அவளுடைய சோகம் அவர் இதயத்தைக் கிழித்தது.

"எங்களால் முடிந்ததையெல்லாம் செய்து விட்டோம். மூளையில் ஏற்பட்டிருக்கும் சேதம் ரொம்பப் பெரிது. இன்று சாயந்தரம் வரை தாக்குப்பிடித்து விடுவாள் என்று நினைத்திருந்தேன். ஆனால்... ஐ'ம் ஸாரி."

தாய்க்கும் மகளுக்குமிடையே இடைஞ்சலாக இராமல் சற்றுத் தள்ளினாற்போல் நின்று கொண்டு, மானிட்டர்களைப் பார்த்தவாறு இருந்தார் அவர். நடுநடுவில் ஆலிஸனின் கையைத் தொட்டு நாடி பார்த்தார். மானிட்டர்கள் வழங்கிய நாடாக்களை எடுத்துப் பரிசோதித்தார். நர்ஸ்களுடன் தாழ்ந்த குரலில் விவாதித்தார்.

இன்னும் சில நிமிடங்களில் உயிர் பிரிந்து விடும் என்று தோன்றியது. அந்தத் தாயைப் பார்க்க ரொம்பப் பரிதாபமாயிருந்தது. ஒரு பெருமூச்சுடன், "மிஸஸ் பிராட், நாங்கள் செய்யக்கூடியது ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். பாதிரியாரை வரவழைக்கட்டுமா?"

"வேண்டாம்" என்றாள் பேஜ்.

ஆலிஸன் இந்த உலகத்துக்கு வந்த போது, முதல் முறையாக அவளை அணைத்துக் கொண்ட அந்த அற்புத நிமிடம் பரிபூரணமாக ஞாபகம் வந்தது. கொழுகொழுவென்று, என்ன திடமாக, பந்து மாதிரி இருந்தாள்! பளீரென்று சிவந்த முகம். கருகட்டை முடி. பிரசவத்தின்போது பட்ட வேதனை மொத்தத்தையும் மறந்தவளாகச் சிசுவின் சின்ன விரல்களைப் பிடித்துக்கொண்டு சிரித்ததை நினைக்கையில் இப்போதும் ஒரு புன்னகை அரும்பியது.

ஆலிஸனிடம் அந்தக் கதையை ஆயிரம் தடவை சொல்லியிருக்கிறாள். இந்தச் சமயத்திலும் அதை மெதுவாகச் சொன்னாள்.

அறையில் இருந்த இரண்டு நர்ஸ்களும் கண்ணைத் துடைத்துக் கொண்டு அடுத்த நோயாளியைக் கவனிக்க நகர்ந்தார்கள்.

டாக்டர் நீண்ட நேரம் ஆலிஸனைப் பார்த்தபடியே நின்று விட்டு வெளியே சென்றார். ஒரு மணி நேரம் கழித்துத் திரும்பி

25

மூலம் : டேனியல் ஸ்டீல்

'Accident' என்ற ஆங்கில நாவலின் தமிழ் வடிவம்.
© டேனியல் ஸ்டீல்

வந்து பார்த்தபோது நிலைமையில் எந்த மாற்றமும் காணோம். ஆனால் முன்னேற்றம் தென்படாவிட்டாலும் மோசமாகவில்லை.

ஆலிஸனின் உடம்புக்குள்ளே ஏதோ ஒன்று எங்கேயோ இருந்துகொண்டு போராடிக் கொண்டிருக்கிறது!

பேஜ் அவள் கையை விடவில்லை. மெதுவே பிடித்த வண்ணம் பேசிக் கொண்டேயிருந்தாள். அவளைப்

தமிழில் : ரா. கி. ரங்கராஜன்

29


பொறுத்தமட்டில் இதயத்தின் கதவுகளைத் திறந்து, செல்ல மகளைச் சுதந்திரமாக வெளியே போக விட்டாயிற்று.

பிரிந்து செல்லத் துடிக்கிறவளைப் பிடித்து நிறுத்துவதற்கு நமக்கென்ன உரிமை இருக்கிறது? தேவதை மாதிரி இருக்கிறாள் என் கண்மணி. இவள் பக்கத்தில் உட்கார்ந்திருப்பதே சந்தோஷமாயிருக்கிறது. அதுவே போதும்.

"ஐ லவ் யூ கண்ணே," என்றாள். ஆலிஸனின் உயிர் பிரிவதற்கு முன் ஆயிரம் தடவை அதைச் சொல்ல வேண்டும் போல் அவள் மனம் தவித்தது. 'ஐ லவ் யூ, ஆலி' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள். ஆலி திடீரென்று கண்விழித்து, புன்சிரிப்புடன், 'நானும்தான் அம்மா. ஐ லவ் யூ' என்று சொல்ல மாட்டாளா? பேஜின் மனத்தின் இன்னொரு பகுதி அப்படி ஏங்கியது. இல்லை. ஆலி எழுந்திருக்க மாட்டாள். புன்னகை செய்ய மாட்டாள். 'ஐ லவ் யூ' என்று சொல்ல மாட்டாள்....

டாக்டர் ஹேமர்மேன் அடிக்கடி வந்து பார்த்துக் கொண்டிருந்தார். ஆலிஸனின் கையைப் பிடித்து நாடித் துடிப்பைப் பரிசோதித்தார். சுவாசம் வழங்கும் கருவிகளைச் சரிபார்த்தார். பிறகு போய் விட்டார்.





''எப்போது பார்த்தாலும் 'கற்றது கைமண் அளவுனு' சொல்லறாரே. யாருங்க அவர்?''

''பி.எஸ்ஸி. 'ஜியாலஜி' படிச்சவராம்!''

– அ.சு. கிருஷ்ணன்

இட்டத்தட்ட இரண்டு மணி நேரத்துக்கு மேல் ஓடி விட்டது. பேஜ் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். பிராட் வரவில்லையே என்று வருத்தம் ஒருபுறம் வதைத்தது. அவரும் இங்கே ஆலிஸன் அருகே நின்று 'போய் வா கண்ணே' என்று சொல்லிக் குழந்தையை வழியனுப்ப வேண்டாமா?

டாக்டர் ஹேமர்மேன் அவள் காதருகே குனிந்து ஏதோ ரகசியமாகச் சொன்னார். அவர் வந்ததையே அவள் கவனிக்கவில்லை. எனவே அவர் குரலைக் கேட்டதும் தூக்கி வாரிப் போட்டது.

"அந்த மெஷினைக் கவனித்தீர்களா, மிஸஸ் பிராட்?'' என்று அவர் மிகத் தாழ்ந்த குரலில் பரபரப்புடன் கேட்டார். அவர் சுட்டிக்காட்டிய மானிட்டர்களைப் பார்த்தாள்.

"நாடித் துடிப்பு சீராகிக் கொண்டிருக்கிறது. பாருங்கள்! உயிர் திரும்பிக் கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன்...''

பேஜினால் எதுவும் பேச முடியவில்லை.

வழிந்த கண்ணீரினிடையே பைத்தியம் போலச் சிரித்தாள். ''டாக்டர், நிச்சயமாய்த் தான் சொல்கிறீர்களா?''

"ஆமாம், நீங்களே பாருங்கள்."

மானிட்டர்களைப் பார்த்துக் கொண்டே ஆலிஸனுடன் பேசினாள் பேஜ். 'ஆலி, உனக்கு நினைவிருக்கிறதா? ஒருநாள் நீச்சல் குளத்தில் நீ தவறி விழுந்து விட்டாய். கிட்டத்தட்ட முழுகியே போய் விட்டாய். யாரோ சட்டென்று உன்னைத் தூக்கிக் காப்பாற்றினார்கள். அந்தச் சில நிமிடத்துக்குள் எனக்கு உயிரே போய் விட்டது, ஆலி. பிழைத்து வந்த உன்னை களீர் களீரென்று அடித்தேன், எனக்கு அப்படியொரு திகில் ஏற்படுத்தியதற்காக. இப்போது கூட, நீ மட்டும் நல்லபடி இருந்திருந்தால் உன்னை அப்படித்தான் அடித்திருப்பேன். அல்லது உன்னைப் பிடித்து உலுக்குவேன். அல்லது முத்தமிடுவேன். அல்லது உன்னைக் கட்டியே அணைத்துக் கொண்டு அழுவேன், ஆலி...'

அந்தச் சம்பவத்தைச் சொல்லி முடித்த பிறகு இன்னொரு சம்பவம் ஞாபகம் வந்தது. ஆண்டியை வயிற்றில் சுமந்திருந்த சமயம். போக்குவரத்து நெரிசலான பகுதியில் ஆலிஸன் சைக்கிள் விடப் போய், கீழே விழுந்து, காயம் பட்டு...

அதையும் ஆலிஸனிடம் சொல்லி, 'ஐ லவ் யூ... ஐ லவ் யூ' என்று ஜபித்துக் கொண்டேயிருந்தாள்.

ஆஸ்பத்திரிச் சுவர்களை ஆதவனின் கிரணங்கள் தொடத் தொடங்கிய சமயம், ஆலிஸன் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு அமைதியான தூக்கத்தில் ஆழ்வது தெரிந்தது. எங்கோ நெடுந்தூரம் போய் விட்டுத் திரும்பி வந்து களைப்பு மேலிட்டவளாகத் தூங்குவது போலிருந்தாள்.

பேஜுக்கும் கூட, பழைய உலகத்திலிருந்து மீண்டு ஒரு புதிய உலகத்தில் புகுந்து விட்டது போன்ற புத்துணர்ச்சி ஏற்பட்டது. ஆலிஸன் தன்னை விட்டுப் போய்க் கொண்டிருக்கிறாள் என்ற பீதி திடீரென விலகி விட்ட மாதிரி இருந்தது. ஆலி திரும்பி வந்து விட்டாள் – இனிப் போகவே போவதில்லை என்ற தீர்மானத்துடன்.

''இப்படிப்பட்ட அற்புதங்களுக்கு என் தொழிலில் பஞ்சமில்லை'' என்று ஒரு புன்னகையுடன் சொன்னார் டாக்டர் ஹேமர்மேன். "உங்கள் பெண்ணுக்கு மனோதிடம் ஜாஸ்தி. கடைசி வரை விடுவதில்லை என்று போராடுகிறாள். நானும் விட மாட்டேன்...''

நர்ஸ்கள் இவர்களைப் பார்ப்பதும் தங்களுக்குள் பேசிக் கொள்வதுமாக நின்றிருந்தார்கள். ஆலிஸன் ராத்திரிக்கு மேல் உயிருடன் இருக்க மாட்டாள் என்று அவர்கள் நினைத்திருந்தார்கள்.

"தாங்க் யூ டாக்டர்," என்றாள் பேஜ். அவள் உணர்ச்சிகள் கொந்தளித்துக் கொண்டிருந்தன. அன்பு மகளின் விரல் நுனிகளை முத்தமிட்ட போது, இனி உலகத்தில் எதுவுமே தன்னைப் பயப்படுத்தாது என்ற தெம்பு ஏற்பட்டது. இப்படியொரு மன அமைதி ஏற்பட்டு எவ்வளவு வருடங்களாகி விட்டன!

விடிகாலை வெளிச்சத்தில் காரை ஓட்டிக் கொண்டு வீடு திரும்பியபோது, முந்தின இரவு பூரா தெய்வத்தின் 'கரம் தன்னையும் ஆலிஸனையும் தொட்டுக் கொண்

டிருந்தது என்பதை அவள் உணர்ந்தாள்.

அன்று முழுதும் அவள் உள்ளத்தில் மகிழ்ச்சி நிறைந்திருந்தது. உடம்பு லேசாகியிருந்தது. தன்னைச் சூழ்ந்திருக்கும் மற்றத் துன்பங்களெல்லாம் ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை.

ராத்திரி கண் விழித்த களைப்போ அலுப்போ இல்லாமல் அவள் உற்சாகமாகச் சமையல் வேலை செய்வதைக் கண்டு பிராட் கூட ஆச்சரியப்பட்டான்.

தற்சமயத்துக்கு ஆலிஸன் தாக்குப்பிடித்து விட்டாள் என்று பேஜ் தெரிவித்தபோது அவன் முகத்திலும் நிம்மதி பிறந்தது. ராத்திரி சாப்பாட்டுக்கு வருவதாகச் சொல்லிவிட்டு, ஆண்டியைப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துக் கொண்டு போனான்.

ஷவரில் குளித்துவிட்டு, உணவு அருந்திவிட்டு, நிம்மதியாகச் சிறிது நேரம் தூங்கினாள். ஆஸ்பத்திரியில் ஆலிஸனின் அருகிலேயே ஒவ்வொரு நிமிடமும் உட்கார்ந்திருக்க வேண்டும் என்ற தவிப்பு முதன் முறையாக அவளிடமிருந்து நீங்கியிருந்தது.


மாலையில் ஆண்டியை அழைத்து வருவதற்காகப் பள்ளிக்கூடத்துக்குப் போகும் வழியில் ஆஸ்பத்திரிக்குப் போய் ஆலிஸனைப் பார்த்தாள். இப்போது அவளை வேறு அறைக்கு மாற்றியிருந்தார்கள். அவள் கையைப் பிடித்துக் கொண்டு, "ஹலோ! நல்வரவு ஆலி! ராத்திரி ரொம்பப் பயமுறுத்தி விட்டாயே!" என்றபோது, ஆலிஸன் நினைவு திரும்பியவளாக அம்மாவைப் பார்த்துப் புன்னகை செய்கிற மாதிரி ஒரு பிரமை ஏற்பட்டது.

ஆஸ்பத்திரி வெராந்தாவில் தாரென்ஸன் எதிர்ப்பட்டான். அவளிடம் ஏற்பட்டிருந்த

''மாமி! பக்கத்து வீட்டு பரிமளம் பத்தி ஏதாவது கெட்ட விஷயம் இருந்தா எங்கம்மா கடன் வாங்கிட்டு வரச் சொன்னா... சண்டை போடணுமாம், பின்னாடி திருப்பி தரேன்னா!''

– கே. சோமசேகர்





''நீ கணக்குல தொண்ணூறு மார்க் வாங்கினது நான் பாடம் நடத்தினதால தானே?''

''நீங்க எங்க பேப்பரைத் திருத்தக் கொடுத்த பையனுக்கு நான் சாக்லேட் வாங்கித் தந்ததனாலே டீச்சர்!''

– அ.சு. கிருஷ்ணன்

மாறுதல் அவனுக்கும் தெரிந்தது. "அட! என்ன ஆயிற்று உனக்கு?" என்றான்.

"ஒன்றுமில்லை. ராத்திரி ஆலி ஒரு கண்டத்திலிருந்து பிழைத்தாள். அப்புறம் பேசுகிறேன்," என்று கூறிவிட்டுப் பள்ளிக்கூடத்துக்குச் சென்றவள், ஆண்டியை அழைத்துக் கொண்டு விளையாட்டு மைதானத்துக்குப் போனாள். ஆண்டி பேஸ்பால் விளையாடுவதைப் பார்த்தபோதும், அவனுக்கு ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுத்த போதும், காரில் அவனைத் தன் பக்கமாக அணைத்துக் கொண்டு வீடு திரும்பியபோதும், முந்தின சனிக்கிழமையின் சம்பவங்கள் ஞாபகம் வந்தது பேஜுக்கு. அன்று வாழ்க்கை எவ்வளவு நார்மலாக இருந்தது! ஐந்தே நாளில்...!

அன்று இரவு பிராட் வீடு திரும்பவில்லை. 'ஆபீசில் வேலை இருக்கிறது. காலையில் வருகிறேன்' என்றான். அது பொய் என்று பேஜுக்குப் புரிந்தது. ஆனால் இப்போது அவளுக்குக் கோபம் ஏற்படவில்லை. ஆண்டியுடன் வீட்டில் இருப்பதும், புது அபாயம் எதுவும் இல்லாமல் ஆலி ஆஸ்பத்திரியில் பத்திரமாக இருப்பதுமே போதும். வேறு எதைப் பற்றியும் கவலைப்படத் தேவையில்லை....

டெலிபோன் மணி அடித்தது. ஆஸ்பத்திரியாக இருக்குமோ என்ற பயத்துடன் தயங்கியவாறு எடுத்தாள்.

கூப்பிட்டது அவள் தோழி ஜேன்தான்.

"பேஜ், உனக்கு ஒரு விஷயம் சொல்ல வேண்டும்," என்றாள் அவள்.

"என்ன ஜேன்?"

"அந்த லாரா – செனெட்டரின் மனைவி – அவளைப் பற்றி ஒரு தகவல் கிடைத்தது," என்றாள் ஜேன்.

(தொடரும்)

கேசவனிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. கேசவன் என்று வெறுமனே சொல்வதைவிட ஸ்ரீரங்கம் கேசவன் என்றால் சரியாயிருக்கும்.

அவன் பிறந்தது, டிராயர் இல்லாமலும், இருந்தும் அலைந்தது, படித்துக் கொண்டிருப்பது எல்லாமே காவிரி, கொள்ளிடம் நடுவிலுள்ள ஸ்ரீரங்கத்துக்குள்ளேயேதான்.

'நானும், அப்பாவும் அங்கு வருகிறோம்' என்று எழுதி அப்பா சொற்படி கேசவன் என கடிதத்தை முடித்திருந்தான்.

கேசவன் எனது மாமாவின் சீமந்தபுத்திரன். கேசவனை நினைத்தால் உடனே எனக்குக் காவிரியின் நினைப்பும் கூடவே வரும்.

சுழித்து ஓடும் காவிரி என்னுள் சலசலத்தான். வருஷத்துக்கு மூன்று முறை நான் கட்டாயம் ஸ்ரீரங்கம் போய்விடுவேன்.

சித்திரை மாசத்துத் தேர், டிசம்பர் மாசத்து வைகுண்ட ஏகாதசி, முக்கியமாய் ஆடிமாசம்.

ஆடிமாதத்தில் தானே இருகரைகளையும் தொட்டபடி காவிரி ஆறு பெருக்கெடுத்து ஓடும்?

"இப்பத்தான் காலேஜிலே முதல் வருஷம் சேர்ந்திருக்கே. ஆடியாவது, ஆவணியாவது. படிக்கற வேலையைப் பார்."

கடிதம் கண்டதும் அப்பா கறாராய் சொல்லி விட்டார்.

நான் கவலைப்படவில்லை. அம்மா இருக்கும் தைரியம்தான். பிறந்த ஊர் பெருமையை பேசிப் பேசியே அப்பாவை போரடித்து, 'எக்கேடும் கெட்டுப் போங்கள்' என்று விரக்தியின் உச்சத்தில் தள்ளி விடுவாள் அம்மா.

காவிரி!

வேட்டி, சட்டைக்குள் புகுந்து படபடக்கும் காற்று, காவிரிக்கரையில் கால்வைக்கும் போதே நெஞ்சுக்குள் பரவச போதை தொற்றிக் கொள்ளும்.

கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது போல, ஆறு இல்லா ஊரிலும் குடியிருப்பது வேஸ்ட்.

இங்கும் தான் ஓடுகிறது கூவம். பெயரை நினைத்த



துமே மனசு நாறுகிறது. ச்சே!

நான், கேசவன், நரசிம்மன், மாதவன் முக்கியமாய் நாராயணன் என்ற நாணா.

எங்களை விட இரண்டு வயது மூத்தவன் நாணா. அவன் அப்பா கோவிலில் பட்டர்.

நாணா, உடம்பில் நரம்புகள் முறுக்கேறிக் கிடக்கும் பலசாலி. பெருமாளை 'ஏளப் பண்ணும்'போது தோள் மாற்றாமலேயே சித்திரை வீதிகளைச் சுற்றி வரும் சிம்மம்.

"நாணா வந்தால், உங்களைக் காவிரிக்கு அனுப்பறேன்."

என் மாமா, அவனுக்குக் கொடுக்கும் சர்டிபிகேட்.

நாணா என்னுடன் பரிச்சயமானதே தனி சுவாரஸ்யம்.

"பெருமாள் கோவில் அரவணை சாப் பிட்டிருக்கியாடா?"

நாக்கை சப்புக் கொட்டிக் கொண்டு ஒரு நாள் கேசவன் கேட்டான்.

அரவணையாவது, கல்லணையாவது என்று தான் நான் கூட முதலில் அலட்சிய மாய் இருந்தேன்.

"நம்ம நாணாவோட அப்பார்தானே மாதவ பட்டர். கவலைப் படாதே."

காவிரியில் நாணா



அபயமளித்தான் கேசவன். அப்போது இராப் பத்து சமயம்.

ரத்தின அங்கி, வைரக்கிரீடம் என்று பெருமான் ஆயிரங்கால் மண்டபத்தில் ஜொலித்துக் கொண்டிருந்தார்.

இரவு பத்தரைமணிவாக்கில் பெருமாளு டன் சேர்ந்து நான், கேசவன், நாணா மூவரும் ஆயிரங்கால் மண்டபத்திலிருந்து புறப்பட் டோம்.

ஆர்யபடாள் வாசல் வழியே பெருமான் உள்பிரகாரத்தினுள் நுழைந்தார்.

நாணாவின் தயவில் டிக்கெட் ஏதும் இல்லாமல் ஆர்யபடாள் வாசலைத் தாண்டி நாங்களும் உள்ளே புகுந்தோம்.

மொத்தமே முப்பது, நாற்பது பேருக்குள் தான் அங்கு இருப்போம் பெருமாளுடன்.

உலக சப்தம் எட்டாத நிசப்தமான சூழல், கருணை பொங்கும் பெருமாளின் அருட்கடா க்ஷம், நரம்புகளை இனிமையாய் மீட்டும் வீணை ஒலி. ஏகாந்தமான மனநிலையில் பெருமாளுடன் ஒன்றிப் போய்விட்ட நிலை.

மோகனப் புன்முறுவல் கொண்ட பெரு மாளின் முன் மோன நிலையில் நின்றோம்.

கர்ப்பக்கிரகத்தினுள் பெருமாள் சென்ற பிறகுதான் தன்னிலை உணர்ந் தோம்.

அரவணை நினைப்பு உடனே எழுந்தது. ஆஹா! ருசியோ ருசி! மண்சட்டி வாசனையுடன், கையிலெடுத் தால், முழங்கை வரை நெய் ஓடும். அதனை வாயில் போட்டுக் கொண்ட தும், நாமே கரைந்து போகும் ருசி.

நெய் ஒழுகும் வாய், கை, மெய்யுடன் 'நாணா' என்று அன்பொழுக அரவணைத் தேன்.

அன்று முதல் நாணாவின் பின் அலையும் நாய்க்குட்டி ஆனேன்.

கிருஷ்ணா

காவிரியில் எதிர்நீச்சல் அடிப்பதில் நாணா கெட்டிக்காரன்.

எங்கள் கூட்டம் வந்ததென்றாலே காவிரிக் கரை திமிலோகப்படும்.

நாங்கள் குளிக்க அம்மா மண்டபம் போக மாட்டோம். வெளியூர் கூட்டம் நிறைய வரும் அங்கு. அதைவிட முக்கியமாய் 'புதைமணல், ஜாக்கிரதை' எச்சரிக்கை பலகையும், கம்பிகளால் அடைகாத்த படிக்கட்டும் எங்களுக்கு சுத்தமாய்ப் பிடிக்காது.

படிகளுக்கும், கம்பி வேலிக்கும் நடுவில் குளித்தால் ஏதோ பாத்ரூமில் குளிப்பது போலிருக்கும். இதற்கு எதற்கு காவிரிக்கு வர வேண்டும்?

மங்கம்மா நகர் பின்புறமுள்ள படித்துறையே வசதி. கோரைப் புல் புதர்களில் வளைந்து ஓடும் காவிரி அந்த இடத்தில் அடக்கமாய் தென்படும்.

நீச்சல் தெரியாதவர்கள் படிக்கட்டு அருகிலேயே நின்று குளிக்கலாம்.


கொஞ்சம் தெரிந்தவர்கள் உள்ளே இறங்கிச் சென்றால் வேகம் பயமுறுத்தும்.

பவர் லைன் செல்லும் எலெக்ட்ரிக் கம்பங்கள் ஆற்றின் நடுவில் இருக்கும்.

அதைத் தொட்டுவிட்டுத் திரும்பவும் கரை வந்து சேர தனி தில் வேண்டும்.

நாணாவும், கேசவனும் அதில் படுசுட்டி. நான் கூட ஒருமுறை முயற்சி செய்து, பாதி ஆற்றில் 'தம்' அவுட்டாகி, முழி பிதுங்கி, நெஞ்சடைத்து, மூச்சு வாங்கி, கரைக்குத் திரும்புவதற்குள் 'அன்று புதிதாய்ப் பிறந்தேன்' என்றே சொல்ல வேண்டும்.

"வயசுப் பொண்ணை தள்ளி நின்னு பார்த்தாலும் அழகுதான். தனியறைக்குள்ளே பார்த்தாலும் அழகுதான். அது மாதிரித்தான் காவிரியும், கரையிலே நின்னு பார்த்தாலும் வசீகரம். உள்ளே இறங்கி நின்னாலும் வசீகரம்."



"உங்கப் பையனுக்கு ரொம்ப திமிர்ங்க!"

"ஏன், என்னாச்சு?"

"ஹோம்-ஒர்க் பண்ணாததுக்கு பெஞ்ச் மேல் நிற்கச் சொன்னா 'பொது மன்னிப்பு'- கொடுக்கக் கூடாதான்னு கேக்கிறான்!"

– கே. சோமசேகர்

கேசவனின் பக்கத்து வீட்டு மாமா கண்ணைச் சிமிட்டியபடி ஒருமுறை சொன்ன போது, லஜ்ஜையாகவும் இருந்தது. இதுபோல இன்னும் சொல்ல மாட்டாரா என்று இச்சையாகவும் இருந்தது.

"டேய் பசங்களா, என்னடா இது வந்ததும், வராததுமாய் தொபுக்கடீர்ன்னு தண்ணிக்குள்ளே பாயறீங்க. அணு, அணுவாய் ரசிக்கணும்டா."

அதே மாமாதான் இதையும் சொல்லிக் கொடுத்தார்.

"முதல்ல உள்ளங்கால் நனைய கொஞ்ச நேரம் நிக்கணும். அப்புறம் முழங்கால் தண்ணியிலே நின்னு அக்கம்பக்கத்தை அலசணும். அப்புறம் இடுப்பு. பிறகு ஒரே முங்காய் டக்குனு முங்கும் போது கிடைக்கிற சந்தோஷமிருக்கே, அடடா, அனுபவிங்கடா பசங்களா."

கண்ணைச் சிமிட்டினார். அவர் சிமிட்டலின் காரணம் புரிய வெட்கப்பட்டோம். நாங்கள் எல்லோருமே விடலை வயசுப் பசங்கள்.

பாவாடையை மார்பு வரை கட்டிக் கொண்டு குளிக்கும் பெண்களைப் பற்றித்தான் மாமாவின் கண் சிமிட்டல்.

ஓரக் கண்ணால் பெண்களைப் பார்ப்பதற்குள்ளாகவே வேர்த்துப் போகும். 'சீச்சீ தப்பு' என்று தண்ணிக்குள் முங்கு போடுவேன். தண்ணீரிலிருந்து எழும்போதே மனசுக்குள் குரங்காட்டம்.

குரங்கை திசை திருப்ப தம் கட்டும் போட்டி. யார் அதிக நேரம் தண்ணீருக்குள் 'தம்' கட்டுகிறார்களோ, அவன் வேட்டியை எதிராளி தோய்த்துத் தரவேண்டும்.

நாணா முங்க, நான் எண்ணுவேன்.

ஒன்று, இரண்டு, மூன்று... முப்பது... ஐம்பது... நூறு... இருநூறு....

பயந்து போனேன்.

"டேய், நாணாவுக்கு தண்ணிக்குள்ளேயே ஏதும் ஆயிடுச்சா?"

சுற்றி நிற்கும் நண்பர்களைப் பார்த்துப் பதறுவேன்.

"நீ எண்ணிக்கிட்டே இருடா. நாணா இப்ப வருவான் பாரு."

ஐநூறு எண்ணி முடிக்கும்போது நாணா நீருக்குள்ளிருந்து வருவான்.

அதிசயம்! கூடவே நண்பர்களின் முகத்தில் மறைந்து கிடக்கும் கேலிச் சிரிப்பு. ஒருநாள் கையும், களவுமாய் மாட்டிக் கொண்டான்

எனக்கு முன் தண்ணீரில் முங்கி, நைசாய்

இங்கு மட்டுமா?

ஐரோப்பாவில் காவல்துறையில் பணிபுரிபவர்களில் பாதிக்கு மேல் பெண்கள்தான்! அதேபோல் அதிகமாக, குற்றவாளிகளால் சாகடிக்கப்படுபவர்களும் பெண் காவலர்கள்தாம்! படத்தில் காணும் மேரி என்ற இந்தப் பெண்ணின் வயது முப்பத்திரெண்டு. இரு குழந்தைகளுக்குத் தாயான இவள், ஒரு குற்றவாளியின் கோரிக்கையை நிராகரிக்க, அந்தக் குற்றவாளி சிறைவாசம் முடிந்து வெளிவந்தவுடன், நடுரோட்டிலேயே இவளைச் சுட்டுக் கொன்றிருக்கிறான்! நம் நாட்டில் மட்டும்தானா பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை?

– பாரீஸ் பார்த்தசாரதி.



நீந்தி தண்ணிருக்குள்ளேயே சென்று, எனக்குப் பின்புறமாய் எழுந்துவிடுவான். நான் ஐநாறைத் தொடும்போது, மீண்டும் முங்கி, நீந்தி முன்புறம் வந்து, எழுவான்.

அடப்பாவி! எத்தனை நான் இவன் வேட்டியைத் துவைக்க வைத்துவிட்டான் என்னை!

அழுகுணி ஆட்ட நாணா மேல் கோபம் வந்தது. கூடவே நான் ஏமாளியானதை நினைத்து சிரிப்பு வந்தது.

இப்படித்தான்! எந்த டென்ஷனுடன் இங்கு வந்தாலும், மனசு மாறி அமைதி புகுந்துவிடும்.

"பாரு, இவனுங்க கண்ணை. குடிகாரன் கண் மாதிரி சிவந்து கிடக்கு. ஏன்டா, இப்படியா எருமை மாடு மாதிரி ரெண்டு, மூணு மணி நேரம் காவிரியிலே ஊறுவீங்க."

மாமா அதட்டுவார் தினசரி. மாமாவின் அதட்டல் காதிலேயே விழாதபடி, பசி காதை அடைக்கும். மாமியின் கைச்சமையல் ருசியில், அசுரப்பசி தீரும்.

மாமாவும், கேசவனும் வந்து விட்டார்கள்.

"என்னடா ஊர் இது, கசகசன்னு நான் முழுதும் வேத்துக்கிட்டு."

கேசவனை ஓரங்கட்டினேன்.

"டேய் பேப்பரில் படிச்சேன். மேட்டூர் அணை நிரம்பி வழியுதாம். காவிரி எப்படியிருக்கு?"

என் ஏக்கத்தைப் படித்தவனாய் சிரித்தான்.

"கவலையேபடாதே. இந்த முறையும் நம்ம கலக்கல் நிச்சயம். ஆமா, நீ எங்களோட இப்ப ஸ்ரீரங்கம் வருவில்ல?"

சர்வ நிச்சயமாய் தலையாட்டினேன். அம்மாவே சரணம்.

"ஆனா, நாணாதான் இனி நம்மோட ஆட்டம் போட இருக்க மாட்டான்."

"ஏன்டா, வேலை தேடி வெளியூர் போயிட்டானா?

"இல்லை. மேலேயே போயிட்டான்."

கேசவன் சொன்னதும் உறைந்து போனேன் அதிர்ச்சியில்.

"என்னடா சொல்ற?"

"காவிரியிலே விழுந்து தற்கொலை பண்ணிண்டுட்டான்."

மறுபடியும் மடேர் சத்தம் என்னுள். வலியில் துடித்துப் போனேன்.

"ஏன்டா?"

"நம்ம தெரு கோடி வீட்டு மல்லிகா பற்றித் தான் உனக்கே தெரியுமே. ஒரு தலைக் காதல். அவ இட்டிட்டா இவனை. போய் ஆத்துல விழுந்துட்டான்."

மறுபடியும் மளுக்கென்று எனக்குள். வெறித்த பார்வையுடன் அலைந்தேன் அன்று முழுவதும்.

"**எ**ன்னடா, ஸ்ரீரங்கம் போகணுமா மாமாவோட?"

இரவு சாப்பாடானதும் அப்பா கேட்டார்.


"இல்லேப்பா. காலேஜ்லே இப்பத்தான் சேர்ந்திருக்கேன். நிறைய படிக்கணும்" என்றேன்.

என்னை வியப்புடன் பார்த்தாள் அம்மா.

கேசவன் கண்களாலேயே கேள்வி கேட்டான்.

அவனிடம் சொல்லத்தோன்றவில்லை. உங்களிடம் மட்டும் சொல்கிறேன் அந்தக் காரணத்தை.

நாணாவின் இந்த 'மல்லிகைக் காதல்' வளர தூபம் போட்டது நான்தான்!



புளித்த மோர் மீந்து விட்டதா? கருவேப்பிலை செடிக்கு அது நல்ல டானிக்!

ஸ்ரீராம் குழு நிறுவனங்களின் அதிபர் ஏ.வி.எஸ். ராஜா, ஒருமுறை தமது சம்பந்தியுடன் பேசும் போது, "நீங்கள் புகழின் உச்சியில் இருக்கிறீர்கள். உங்கள் மகளுக்கும், மகனுக்கும் நல்ல குரல் வளம் இருக்கிறது. அவர்களைக் கொஞ்சம் கை தூக்கி விடுங்கள். நீங்கள் வாழும் காலத்திலேயே உங்கள் வாரிசுகள் பேரும் புகழும் பெற்றால் உங்களுக்குத்தானே பெருமை?" என்று தூண்டிலைப் போட்டார்.

யோசித்தார் சம்பந்தி. செயல்பட முடிவு செய்தார். தன்னைப் போலவே சினிமா உலகில் இன்னல்கள் பட்டு முன்னேறிய வேறு சில பிரமுகர்களின் வாரிசுகளும் திறமையுடன் பிரகாசிப்பதைப் பார்த்தார். அவர்களை ஒருங்கிணைக்க ஏற்பாடு செய்தார்.

"அடுத்த தலைமுறைக்கான இசை" என்ற அறிமுகத்தோடு இசைக்குழு ஒன்று பிறந்தது. ஏ.வி.எஸ். ராஜாவின் சம்பந்தி யார் தெரியுமா? எஸ்.பி. பாலசுப்பிரமணியம் தான். (எஸ்.பி.பியின் மகள் பல்லவியைக் கரம் பிடித்திருப்பவர் ஏ.வி.எஸ்ஸின் மகன் கிரிதர் ராஜா.)


எஸ்.பி.பியின் மகன் சரண், மகள் பல்லவி, மலேஷியா வாசுதேவன் மகள்கள் பவித்ரா, பிரஸாந்தி, மகன் யுகேந்திரன், கங்கை அமரனின் வாரிசுகள் பிரேம்ஜி, வெங்கட் பிரபு, தவிர 'மகாநதி' ஷோபனா இவர்களுக்கெல்லாம் சினிமா உலகத்தின் மீது காதல் இருந்தாலும், மல்டி மீடியா, கிராபிக்ஸ், அனிமேஷன், நிர்வாக இயல்



• பிரேம்ஜி



• வெங்கட் பிரபு



• சரண்

வாரிசு ~~அரசியல்~~ இசை!

• ஷோபனா



என்று லோக்கல் மற்றும் கடல் கடந்து சென்று படித்துவிட்டு வந்திருப்பவர்கள்.

எல்லோருக்கும் நல்ல குரல் வளம் இருப்பதால், அந்தக் கால செந்தமிழ்த் தேன் மொழியாள்' பாடலிலிருந்து லேட்டஸ்ட் சூரிய வம்சம் படத்திலிருந்து ரோசாப்பூ... ரோசாப்பூ வரை பாடக் கூடியவர்கள். அதிலும் யுகேந்திரனும் வெங்கடேஷ் பிரபுவும், மிருதங்கம் ஸ்பெஷலிஸ்டுகள். யுகேந்திரன் ஒரு தெலுங்கு படத்துக்கு இசையமைத்திருக்கிறார்.

"எங்க வீட்டு மாடியில்தான் பிராக்டீஸ் செய்தார்கள். ஒரே சத்தம். என்னப்பான்னு விசாரிச்சா, 'உங்களுக்கு எங்களோட லேட்டஸ்ட் டேஸ்ட் தெரியாது' என்று நம்மளை ஓரங்கட்டிட்டாங்க" என்றார் கங்கை அமரன்.

"உங்க எல்லோருக்கும் சினிமா உலகத்தில் பிரவேசித்து நிரந்தரமா பிரகாசிக்க ஆசையா? அல்லது சும்மா ஒன்றிரண்டு புரோக்கிராம் நடத்திவிட்டு, படித்ததற்கு ஏற்ப வேறு தொழிலைப் பார்க்கப் போய்விடுவீர்களா?" என்று வாரிசுகளிடம் கேட்டோம்.

"நோ... நோ... எங்கள் தந்தைகளைப் போலவே நாங்களும் திரைப்பட உலகில் செயல்பட விரும்புகிறோம். எங்களுடைய முயற்சி மிகவும் சீரியலானது" என்று கோரஸாகச் சொன்னார்கள் வாரிசுகள்.

அண்ணா நகர் ரோட்டரி கிளப்பின் சார்பில் இந்தப் புதிய வார்ப்புகளின் நிகழ்ச்சி காமராஜ் அரங்கத்தில் சமீபத்தில் நடந்தது. வழக்கமாக இது போன்ற இசை நிகழ்ச்சிகளை காம்பயர் செய்கிறோம் என்ற பேரில் சிலர் (குறிப்பாக கங்கை அமரன் போன்றோர்) ரம்பம் போடுவதுண்டு. ஆனால் ஜூனியர்கள் நடத்திய நிகழ்ச்சியில் ஒரு பாடலுக்கும் மறுபாடலுக்கும் இடைவெளியே கிடையாது. ஒன்று முடிந்தவுடன் அடுத்த பாட்டு தொடர்கிறது.

இந்த இளசுகளுக்கு ஒரே வருத்தம்: இளையராஜாவின் வாரிசுகள் மட்டும் இன்னும் தம்முடன் இணையாததுதான் அது!

— ஸ்ரீநிவாசன்



• யுகேந்திரன்



• பவித்ரா




• பிரசாந்தி

மஹாலயம் (அல்லது மஹாளயம்)




பெரிய இருப்பிடம், கல்யாணாதி சுபங்களுக்கு இருப்பிடம் மஹான்களுக்கு இருப்பிடம் என பல பொருள்கள் உண்டு. அதாவது . மஹான்களான பித்ருக்கள் பூமியில் வந்து 16 நாட்கள் தங்கி, புத்ரன் முதலியவர்களுக்கு சுபத்தைச் செய்யும் காலம் என்று பொருள். ஸூர்யன் கன்யா ராசியில் புகுந்தபோது, ஆஷாடம் முதலான 5 ஆவது அபர பக்ஷத்தில் பித்ருக்கள் பூமிக்குச் செல்ல ஏவப்படுகின்றார்கள். அச்சமயம் நமது பெற்றோர், அவர்களது பெற்றோர்களுடன் கூடி நம்மை நாடி வருகின்றனர். அச்சமயம் மஹாளய அன்னச்ராத்தமாகச் செய்வது உத்தமம். இந்த 16 நாட்களில் செய்ய முடியாதவர் அன்ன ச்ராத்தமானால் அடுத்த பக்ஷத்திலும் செய்யலாம்.

தீபாவளி அமாவாஸ்யைவரை பித்ருக்கள் அன்ன ச்ராத்தத்தை எதிர்பார்க்கிறார்களாம். விதிப்படி ஹோமம் செய்து அன்னம் போட முடியாவிடில் அன்னத்திற்கு ப்ரதிநிதியாக வெள்ளி நாணயத்தை அளித்து (அதாவது ப்ராம்மணர்களை வரித்து, ஆஸனாதிகளையும் தக்ஷிணையும் அளித்து) தர்ப்பணம் செய்வதாம். அதே ஹிரண்ய ச்ராத்தம் எனப்படும். அங்ஙனம் பிரதி தினம் செய்ய முடியாதவர் பித்ரு, மாத்ரு திதி அல்லது மஹாபரணீ, வ்யதீபாதம், மத்யாஷ்டமீ முதலிய புண்யகாலத்தில் ஹிரண்யம் செய்வது பழக்கம். ச்ராத்த ப்ராம்மணர்களைப் போல் அல்லாமல், ஸாதாரண ஸமாராதனை போல் அன்று அன்னமிடுவது வழக்கம். அதுவும் தற்சமயம் பலவிடங்களில் நடப்பதில்லை. தக்ஷிணை அளித்து அனுப்புவதுடன் நிற்கின்றது. வீணான செலவுகளைக் குறைத்துக் கொண்டு மஹாளயத்தை அன்ன ச்ராத்தமாகச் செய்வதே உத்தமம். ஹிரண்யமாகவாவது செய்து அன்னமிட வேண்டும். 16 நாட்களிலும் தர்ப்பணத்தையேனும் விடாமல் செய்து ஒரு நாளாவது ஹிரண்ய ச்ராத்தம் செய்ய வேண்டும். அதனால் ஸகலவிதமான நன்மையும் பெறவேண்டும்.



மஹாளயம் செய்வதால் உண்டாகும் பலன்



1. ப்ரதமையில் ச்ராத்தம் செய்தால் தனலாபமுண்டாகும்.
2. த்விதீயை ச்ராத்தம் ஸந்ததியைத் தரும்.
3. த்ரீதியா ச்ரார்த்தம் நல்ல வரன் அல்லது நல்ல மருமகனைத் தரும். அல்லது கோரிய வரத்தைத் தரும்.
4. சதுர்த்தி ச்ராத்தம் நமது பகைவர்களை அகற்றும்.
5. பஞ்சமீ ஸம்பத்தை உண்டாக்கும்.
6. ஷஷ்டி கர்த்தாவைப் பிறர் பூஜிக்கும்படிச் செய்யும்.
7. ஸப்தமீ பரலோகத்தில் ஒரு தேவ கோஷ்டிக்குத் தலைவனாகச் செய்யும்.
8. அஷ்டமீ உயர்ந்த புத்தியை அளிக்கும்.
9. நவமீ நல்ல மனைவியைத் தரும். துஷ்ட மனைவியை நல்லவளாகச் செய்யும். அடுத்த பிறவியிலும் நல்ல மனைவியைத் தரும்.
10. தசமீ நம் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும்.
11. ஏகாதசீ ஸகல வேத வித்யைகளையும் தரும்.
12. த்வாதசீ ஸ்வர்ணத்தைத் தரும்.
13. த்ரயோதசீ ஸந்ததி, மேதை, பசு, புஷ்டி, ஸம்ருத்தி நீண்ட ஆயுள் முதலியவைகளைத் தரும்.
14. வஸ்த்ரம் அல்லது அக்னி (தற்காலத்தில் தோன்றிய ரயில், மோட்டார் போன்ற விபத்து) இவைகளால் இறந்தவர்களுக்குச் சதுர்த்தசியில்தான் மஹாளய ச்ராத்தம்செய்ய வேண்டும். அதே அவர்களுக்கு இன்பத்தைத் தரும்.
15. அமாவாஸ்யை ச்ராத்தம் ஸகல இஷ்டங்களையுமளிக்கும்.
16. அடுத்த ப்ரதமை தர்ப்பணம் முன் செய்தவைகளில் உள்ள குறைகளை நீக்கிப் பூர்ணமாகச் செய்யும்.


ஆபஸ்தம்ப ஸூத்ர தர்ப்பண விளக்கம்.

25

புருஷ சப்தத்துக்கு ஆசார்யர்கள் எல்லாம் ஒரே மாதிரி பொருள் சொல்லியிருக்கின்ற ஆச்சர்யத்தைக் குறிப்பிட்டேன். இப்படிப்பட்ட புருஷ சப்தத்துக்குப் பொருளாக விளங்கக்கூடியவன் பதினாறு ரிக்குகள் கொண்ட மந்திரங்களால் சொல்லப்படக்கூடிய பகவான் மகா விஷ்ணு.

எட்டும் எட்டும் எட்டுமாய் என்ற பாடலைச் சொன்னேன் அல்லவா...? காயத்ரி மந்திரத்திலே இடையிலே, ஒரு சொல் வருகிறது; 'பர்க:' என்று. ஒளிப்பிழம்பு என்று இதற்கு அர்த்தம். ஒளிப்பிழம்பாய் இருக்கக் கூடியவன் மகாவிஷ்ணு.

சஹஸ்ரநாமத்தில் வருகிற திருநாமங்களில் முதலில் வருபவை, இந்த மகா விஷ்ணுவின் காரியங்களைச் சொல்கின்றன. காரியங்களுக்கான காரணங்களைக் குறிக்கும் நாமாக்கள் பின்னால்தான். விச்வம், விஷ்ணு என்பனவெல்லாம் காரியம். காரணம் யார்...? என்றால், நரசிம்ஹன்தான்! நரசிம்ஹன் என்றால் ஒளிப்பிழம்பு என்று அர்த்தம்... இப்படி திருநாமங்கள் அமைந்துள்ள சஹஸ்ரநாமத்தின் முதல் சுலோகத்தில் 9 திருநாமங்கள்; இரண்டாவது சுலோகத்தில் 8 திருநாமங்கள்; மூன்றாவதில் ஏழு



ன்றுமில்லை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்


திருநாமங்கள். இவற்றின் கூட்டுத்தொகை 24! இந்த 24 நாமாக்களும் 24 அக்ஷரமுடைய காயத்ரி மந்திரத்தை விவரிக்கின்றன. ஆகவே காயத்ரியின் மத்தியிலே ஒளிப்பிழம்பாய் இருப்பவன் பகவான் மஹா விஷ்ணு.

இப்படிப்பட்ட மகாவிஷ்ணுவே புருஷ சப்தத்துக்கு உரியவன். அந்தப் புருஷனைக் கொண்டாடக்கூடிய சூக்தம்தான் புருஷ சூக்தம். சர்வ விதத்திலேயும் ஏற்றமுடையது புருஷ சூக்தம்.

வேதேஷு பௌருஷம் சூக்தம்
புராணேஷு ச வைஷ்ணவம்
பாரதே பகவத் கிதா
தர்ம சாஸ்திரேஷு
மானவம்

என்பது பிரமாண வசனம். புருஷ சூக்தம், விஷ்ணு புராணம், மனு ஸ்ம்ருதி இவையெல்லாம் விசேஷமான பெருமையுடையவை; சமானமான பலனைக் கொடுக்கக் கூடியவை என்று சொல்லப் படுகிறது. ஆகையினால்தான் புருஷ சூக்தத்தைக் கட்டாயம் அத்யயனம் பண்ண வேண்டும். மீறி மந்திரங்கள் தெரியாமல் போனாலும் புருஷ சூக்தத்தை அத்யயனம் பண்ண வேண்டும். இப்படிச் சொல்வதானால் 'ஏதோ புருஷ சூக்தத்தையாவது' தெரிந்து வைத்துக் கொள்ளணும் என்று அர்த்தம பண்ணிக் கொள்ளக் கூடாது. புருஷ சூக்தம் குறைவான பாகம் என்பதால் இப்படிச் சொல்லப்படவில்லை; 'புருஷ சூக்தத்தைத் தெரிந்து வைத்திருந்தால் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டது போலாகும்' என்பதே இதற்கு அர்த்தம்.

வேத சாரம் புருஷ சூக்தம்:



வானில் ஒரு யுத்தம்!

பலரும் உணர்ந்து கொள்ளாமலே அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்குமிடையே 'நீயா நானா' என்ற நேரடிப் போராட்டம் உச்ச கட்டத்தை அடைந்திருக்கிறது - இது வான்வெளிப் போராட்டம்!

அமெரிக்கத் தயாரிப்பான 'போயிங்' விமானம் பற்றி நமக்குத் தெரியும். பறக்கிற ஒரே காரணத்தால் அதை விமானம் என்கிறோமே தவிர மற்றபடி, உள்ளே மாநகரப் பேருந்து மாதிரிதான்! ஆனாலும் போயிங்குக்குத் தொடர்ந்து வரவேற்பு இருந்து வருகிறது. போன வருடம் கூட 180 கோடி டாலர்கள் சம்பாதித்தது இந்த நிறுவனம். உலகின் ''பிரம்மாண்ட ஆகாய விமான'' மார்க்கெட்டில் 66 சதவீதம் போயிங்கிற்குத்தான். போதாக்குறைக்கு இந்தப் பிரிவில் 4% மார்க்கெட்டைப் பிடித்துள்ள மெக்டொனலையும் தன்னுடன் இணைத்துக் கொள்ளவிருக்கிறது போயிங் நிறுவனம்.

''இனி நம்மை யாரும் அசைத்துக் கொள்ள முடியாது'' என்று எண்ணிய போயிங் நிறுவனத்துக்கு ஒரு பெரிய சவால் உருவாகிக் கொண்டிருக்கிறது. ஐரோப்

சமஸ்த மந்த்ரங்களினுடைய சாரம்.

புராணங்களுக்குள்ளே, புராண ரத்னம் விஷ்ணு புராணம்.

-பராசர மகரிஷியால் சொல்லப்பட்டது.

மஹாபாரதத்திலே பகவத்கீதை பகவானுடைய திவ்ய வாக்கு. அவனே சொன்ன விஷயம்.

தர்ம சாஸ்திரத்தை நாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டுமானால் மனு ஸ்ம்ருதியைத்தான் பார்க்க வேண்டும்.

புருஷ சூக்தம் இந்த மூன்றுக்கும் இணையானது. அந்தப் புருஷ சூக்தத்திலே சொல்லப்படுகிறவன் எம்பெருமான் மஹாவிஷ்ணு.

எல்லா மகரிஷிகளும் புருஷ சூக்தத்தைக் கொண்டாடுகிறார்கள். அதிலே போற்றப்படுகிற மஹா விஷ்ணு விராட், ஸ்வராட், ஸ்பராட் என மூன்றுமாக விளங்குகிறான். எங்கும் வியாபித்து எல்லாவற்றிலும் பரவியிருக்கிறான்; அனைத்தையும் பரிபாலனம் பண்ணக் கூடியவனாகவும் இருக்கிறான்.

இந்தப் புருஷ லக்ஷணங்கள் அனைத்தும் பதினாறு ரிக்குகளிலே அடங்கியிருப்பதனாலே புருஷ சூக்தமே ஏற்றமுடையதாகிறது.

இப்படி மந்திரமாக - எங்கும் நிறைந்தவன் பரமாத்மா - என்ற பேருண்மையைச் சொன்னால், நம்மைச் சுற்றிலும் பார்த்து அந்த உண்மையை உணர்ந்து கொள்ளும் ஆற்றல் நமக்கு எங்கே இருக்கிறது! ஆற்றலும் இல்லை; அவகாசமும் இல்லை. அதனால்தான் பகவான் தமது லீலைகள் மூலமே இப்பேருண்மைகளை நமக்கு உணர்த்தினான்.

நமது கண்களுக்கு ஓரளவுதான் பார்வை. திருஷ்டிக்கு எட்டாத எத்தனையோ விஷயங்கள் உள்ளன! நம் செவிப்புலனும் அப்படித்தான். வரையறுக்கப்பட்ட சக்திதான் அதற்கு உண்டு. எங்கோ இருக்கிற சப்தத்தையெல்லாம் அதனால் கிரஹிக்க முடியாது. ஓர் எல்லையைக் கடந்து வர முடியாத நமது அல்பமான இந்திரியங்களைக் கொண்டு, எங்கும் பரவியிருக்கிற பரமாத்மாவை எப்படி உணர்வதாம்?!

அதனால்தான் பரமாத்மா என்ன பண்ணிவிட்டான்,

அவதார காலத்திலே எல்லாவற்றையும் நமக்குக் காட்டிக் கொடுத்து விட்டான். எங்கும் பரவியிருக்கிற வேடிக்கையை கதை ரூபமாக நமக்குக் காட்டிக் கொடுத்தான்.

எங்கும் பரவியிருக்கிறான் பகவான் என்பதை பிருந்தாவனத்திலே (கிருஷ்ணாவதாரத்திலே) நாம் பார்க்கலாம்.

விஷ்ணு சஹஸ்ரநாமத்துக்கு பாஷ்யம் எழுதிய பராசரபட்டர், கூரத்தாழ்வார் என்கிற ராமானுஜரின் சிஷ்யர். கூரத்தாழ்வார் காஞ்சிபுரத்தருகே கூரம் என்கிற இடத்தில் வசித்தார். காஞ்சிபுரத்தில் அந்த தேவராஜ பெருமான் திருக்கோயில் கதவு சாத்தப்படும் ஓசை கேட்ட பிறகுதான் அவர் தம் இல்லத்துக் கதவைத் தாழிடுவாராம்!

'டணால்' என்று ஓசை கேட்குமாம் திருக்கோயிலிலிருந்து - அதாவது காஞ்சிபுரத்தில் சாத்தினால் கூரத்தில் கேட்குமாம்! அதற்குப் பிறகுதான் இவர் தம் வீட்டுக் கதவைச் சாத்துவாராம்!


அப்படியென்றால் என்ன தெரிகிறது? கோயில் வாசல் திறந்திருக்கிற காலத்தில் நம் வீட்டுக் கதவைச் சாத்தக் கூடாது என்பது தெரிகிறது அல்லவா? ஒரு அனுஷ்டானத்தை நாம் தெரிந்து கொள்கிறோம். காஞ்சிபுரத்தில் கதவு சாத்தும் வரை கூரத்தில் ஒருவர் காத்திருந்தார் என்றால் அவருடைய அசஞ்சலமான பக்தி எப்பேர்ப்பட்டது என்று தெரியவில்லையா...?

அப்படிப்பட்ட பக்தியுடையவரான ராமானுஜரின் சிஷ்யர் பராசர பட்டர். கல்வி கேள்விகளில் மிகவும் பிரகாசமாக விளங்கினார். அவர் ரங்கநாதரை ஸ்தோத்திரம் பண்ணும்போது, அந்த இரு திருவடிகளையும் பார்த்து 'மகா வித்வான்' என்று வர்ணிக்கிறார்! மகா பண்டிதர்களாம் பெருமானின் இரு வடிகள்!



• ஏர் பஸ்

பாவைச் சேர்ந்த ஏர் பஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனம் (பிரம்மாண்ட பிரிவில் மீதமுள்ள 30% இதன் வசம்தான்) A3XX என்ற ராட்சத விமானம்



• போயிங்

ஒன்றை உருவாக்கியுள்ளது. டபுள் டக்கர் ஆகாய விமானம்! அறுநூறு பேர் உட்கார்ந்து செல்லலாம்! என்பது கோடி டாலர் செலவழித்து உருவாக்கியுள்ள இந்த ஏர்-பஸ்ஸை விரைவிலேயே களத்தில் இறக்கப் போகிறார்களாம்.

ஐரோப்பாவிலேயே கூட இப்போதைக்கு 70% மார்க்கெட் போயிங்கிற்குத்தான். ஆனால் ஏர்-பஸ்ஸின் புது கண்டுபிடிப்பு பறக்கத் தொடங்கினால் தன் மார்க்கெட் தடுமாறத் தொடங்கி விடுமோ என்ற கவலை போயிங்கிற்கு. போதாக் குறைக்கு அடுத்த ஆண்டு வரை போயிங்கிற்கான ஆர்டர்கள் ஃபுல்லாகிவிட்டன.

''எங்களால் அதற்கு முன்பே டெலிவரி அளிக்க முடியும்'' என்று ஆசை காட்டிக் கொண்டிருக்கிறது ஏர்பஸ் நிறுவனம்.

— ஜி.எஸ்.எஸ்.

பண்டித் என்றால் எதிலாவது பாண்டித்யம் வேண்டாமா? தர்க்கத்திலே வித்வானா? மீமாம்ஸையிலே வித்வானா, வியாகரணத்திலே வித்வானா, வேதத்திலே வித்வானா?

பகவான் திருவடியிரண்டிற்கும் எதிலே பாண்டித்யம்?....

'பிருந்தாவன பண்டிதர்!' என்கிறார் பராசர பட்டர்! அதாவது, பிருந்தாவனத்தில் சஞ்சாரம் பண்ணுவதிலே பெரிய வித்வத் உடையனவாம் அந்தப் பாதங்கள்.

அந்த பிருந்தாவனம் மொத்தமும் சுற்றிச் சுற்றி வந்ததே அந்தப் பாதங்கள்! அப்படி அவன் ஆச்சர்யமாக சஞ்சாரம் பண்ணிய இடங்களிளெல்லாம் நமக்கு இன்றும் இருக்கிறதே என்று கூரத்தாழ்வார் ஒரு ஸ்தோத்திரத்தில் நன்றி சொல்கிறார்; 'பகவானுடைய பாதம் பட்ட இடம், அந்த தூளி இன்றைக்கும் இருக்கிறதே...' என்கிறார் 'அதி மானுஷ ஸத்வம்' என்கிற ஸ்தோத்திரத்தில்.

இப்படி, பிருந்தாவன சஞ்சாரத்தில் உயர்ந்த பாண்டித்யம் பெற்றன அவன் திருவடிகள்.

பாண்டித்யத்தை சம்பாதிக்க வேண்டுமென்றால் ஓர் ஆசார்யர் வேண்டுமல்லவா...? பகவானின் திருவடிகளுக்கு ஆசார்யர் யார்...?

அந்த கோபிகாஸ்த்ரீகளெல்லாம்தான் ஆசார்யர்களாம்! அவர்கள் தயிரை வைத்து மத்தைப் போட்டுக் கடைகிறார்கள் பாருங்கள். 'உர் உர்' என்று அவர்கள் கடையும் சப்தம் வைகுண்டத்திலே போய்க் கேட்கிறதாம்!

இவர்கள் தயிர் கடைகிறபோது குழந்தை போய் நிற்கிறது பக்கத்தில். ''கொஞ்சம் வெண்ணெய் கொடேன்...'' என்று கேட்கிறது.

வெறுமே வெண்ணெய் கொடுத்து விடுவார்களா அந்த கோபஸ்த்ரீகள்...?!

"நீ கூத்தாடு; கொஞ்சம் நாட்டியம் பண்ணு, வெண்ணெய் தருவோம்..." என்கிறார்கள்.

சர்வலோக சரண்யன், ஒரு உருண்டை வெண்ணெய்க்காக கோபஸ்த்ரீகள் எதிரில் நாட்டியம் ஆடுவானாம்!

நாட்டியம் ஆட ஒரு தாளம் வேண்டும் அல்லவா... 'உர் உர்' என்று இவர்கள் கடைகிறார்களே... அந்த ஓசைக்கு ஏற்ப ஆடுமாம் அந்தக் குழந்தை.

அதைப் பார்த்தவுடனே அவர்கள் வெண்ணெயா கொடுத்தார்கள்...? தன்னையே அல்லவா அவனிடம் கொடுத்தார்கள் அந்த கோபஸ்த்ரீகள்!

இப்படி நர்த்தனமாடி, நர்த்தனமாடி, நர்த்தனமாடி சஞ்சாரத்திலே பாண்டித்யத்தை சம்பாதித்துக் கொண்டன பகவானின் திருவடிகள். ஒரு வீட்டில் மட்டுமா நாட்டியம்...? ஒவ்வொரு வீடாக நாட்டியம். ஒவ்வொரு வீட்டிலும் ஓர் உருண்டை வெண்ணெய்! அத்தனையும் போதாதென்று திருடியது வேறு! அவ்வளவு இஷ்டம் வெண்ணெய் பேரில்.

அதற்காக பிருந்தாவனத்தில் சஞ்சாரம் பண்ணிப் பண்ணி, திருவடி சோர்ந்து போய், களைத்து, ஸ்ரீரங்கத்தில் படுத்து விட்டது!

(தொடரும்)



ரயில் பொன் விழா

போட்டிக் கதை – 1

வி.எஸ். நாகராஜன்

புது டில்லி ஸ்டேஷன். சென்னை செல்லும் தமிழ்நாடு எக்ஸ்பிரஸ்.

வழக்கம்போல ரயில் கிளம்ப ஐந்து நிமிஷம் இருக்கும் போது வந்தேன். ரிசர்வேஷன் சார்ட்டில் பெயரைச் சரிபார்த்தேன். பர்த் நம்பர் 31, சைடு பர்த். எதிர் சீட்டுக்காரர் பெயரைப் பார்த்தேன். 'அருமைசாமி'.

கிழவராக இருப்பாரோ... பேசிப் பேசி போரடிப்பாரோ...

நான் யார், என்ன வேலையாக சென்னை போகிறேன் என்பதெல்லாம் வெளியே தெரியக் கூடாது. உங்களுக்கு மாத்திரம் சொல்கிறேன். கிட்டே வாருங்கள். சி.பி.ஐ. ஆள் நான். முக்கியமாக அரசியல் தலைவர்கள் சிலரது நடவடிக்கைகளைக் கவனித்து அவர்களைப் பற்றிய குறிப்புகளை மேலிடத்துக்குக் கொடுக்க வேண்டியது என் வேலை. வேலையின் அந்தஸ்துக்கு முதல் வகுப்பில் பிரயாணம் செய்யலாம். அப்படிப் போனால் சேர்ந்து பயணம் செய்பவர்களிடம் பேச்சுக் கொடுக்க வேண்டிவரும். சக பயணி வி.ஐ.பி.யாக இருந்துவிட்டால் வம்பு வரும். ஆகவே சாதாரணமாக இரண்டாம் வகுப்பு ஸ்லீப்பரில் பயணம்.

என் வேலையைப் பற்றி கோடி காண்பித்தாயிற்று. அது போதும்.

எதிர் சீட் பயணி அருமைசாமி என்று படித்ததும் அப்பா நினைவு வந்தது. அப்பா அருமைசாமி இல்லை. அருமைநாயகம். கிராமத்தில் இருக்கிறார். முன்னாள் காங்கிரஸ்காரர். முன்னாள்தான். 1939ல் ஒரு தடவையும் 42ல் ஒரு தடவையும் தனி நபர் சத்தியாக்கிரஹங்களில் ஈடுபட்டு சிறை தண்டனை அனுபவித்தவர். சிறைவாச அமர்க்களம் எல்லாம் முடிந்தபிறகுதான் நான் பிறந்தேன். நான் சிறுவனாக இருந்தபோது, போராட்ட நினைவுகளைப் பற்றி அப்பா எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறார். எளிமையான வாழ்க்கையையும், காந்தியத் தத்துவங்களையும் படிப்போடு சேர்த்துப் புகட்டியிருக்கிறார். காந்தியக் கொள்கைகளைக் கரைத்துக் குடித்து வளர்ந்த நான் போலீஸ் அதிகாரியானது விசித்திரம்தான். முதலில் மாநில போலீஸ். பிறகு மத்திய போலீஸ். இப்போது போலீஸின் அந்தரங்கத்தையே பரிசோதிக்கும் சி.பி.ஐ.

கிளம்புகிற சமயம்தான் வந்தார் எதிர் சீட்டு அருமைசாமி. பெயரைப் பார்த்து கிருஸ்துவராக இருப்பார் என்று நினைத்திருந்தேன். அசல் சைவம். நெற்றியில் திருநீரும் குங்குமமுமாக நேராகக் கோயிலிலிருந்து வருபவர் மாதிரி தெரிந்தார். எழுபது வயதுப் பக்கம் தோற்றம்.


அவர் என்னைப் பார்க்காத போது நான் அவரையும், அவர் என்னையும் அளவெடுத்துக் கொண்டோம். ரயில் கிளம்பி ஒரு மாதிரியாக செட்டில் ஆனவுடன் அவர் எழுந்து சட்டைப் பையிலிருந்து சின்ன பொட்டலத்தைப் பிரித்து நீட்டினார். எடுத்துக்கறீங்களா? என்னப்பன் சாமிநாத சாமி பிரசாதம். டெல்லிக்கு வந்தா, இந்த சாமிநாத சாமியை தரிசிக்காம போறதில்லே..."

"............"

"மெட்ராஸ்தான் போறீங்களா...?"

"ஆமாம்" என்றேன்.

✦ உப்பு நீராக இருந்தால், குழாயில் கர்ச்சிப் கட்டிப் பிடித்தால், விழும் நீரில் உப்பு குறையும்.



காங்கிரஸ்

"டெல்லியிலே வேலை பார்க்கிறீங்களா?"

"ஆமாம்... கம்பெனியிலே" என்று அடுத்த கேள்விக்கும் சேர்த்து பதில் சொன்னேன்.

"கம்பெனியா? கவர்ன்மெண்ட் இல்லியா? டெல்லி வேலைன்னா, உடனே நமக்கு கவர்ன்மெண்ட் வேலை தான் நினைவுக்கு வருது. என்ன கம்பெனி?"

"கம்ப்யூட்டர்."

"கம்ப்யூட்டரா? அது என்னாங்க, யாரைக் கேட்டாலும் கம்ப்யூட்டர், கம்ப்யூட்டர் என்கிறாங்க. அப்படி என்னதான் கம்ப்யூட்டரிலே இருக்குன்னு தெரியல்லே. நான் கிராமப்புறம். பழைய காலம். புதுசா எதாவது வந்தா, அதைப் புரிஞ்சுக்கவே நாள் ஆகுது."

அப்போதுதான் எனக்கு ஒரு விஷயம் மனசில் பதிந்தது. அவர் அணிந்திருந்த கதர் வேட்டி, சட்டை, துண்டு, எல்லாம்.

"நீங்க அரசியல்லே இருக்கீங்களா?"

அவர் சிரித்தார். "நானா? என்மேலேயிருந்து எதாவது நாத்தம் அடிக்கிற மாதிரி தெரியுதா, என்ன? ஓ...! கதர் கட்டியிருக்கிறதைக் கேட்கிறீங்களா? நான் காங்கிரஸ்காரன்தான். ஆனா இந்த கேசரி காங்கிரசும் இல்லே. மூப்பனார் காங்கிரஸும் இல்லே. வாழப்பாடி, அனந்தன் காங்கிரஸும் இல்லே. ஏன், பிரியங்கா, ராகுல் காங்கிரஸ் கூட இல்லே. வேணும்னா காந்தி காங்கிரஸ்னு சொல்லிக்கலாம். காமராஜர்கூட முழு காங்கிரஸ்கார்னு ஒப்புக்கமாட்டேன். அவர் காலத்திலேயே பெரியார், அப்புறம் சுதந்திரா கட்சி ராஜாஜின்னு காங்கிரஸிலே பல தண்ணியைக் கலக்க வைச்சுட்டாரு."

சிரித்தேன்.

"எந்த ஊர் உங்களுக்கு?"

"ஆண்டார்குப்பம்..."

"ஓ... தெரியுமே....! அந்த ஊரிலே கப்பையான்னு காங்கிரஸ் தியாகி இருந்தாரே..."

"கப்பையாவா...? தெரியாதே. உங்க பேர்மாதிரி அருமை நாயகம்னு ஒருத்



அருள்வாக்கு



சப்த விசேஷத்தோடு அர்த்த கௌரவமும் வேதத்துக்கு அளவிட முடியாததாக இருக்கிறது. வேதக் கருத்துக்களைப் பார்த்துப் பார்த்து இதர மதஸ்தர்களும், வெளிநாட்டு அறிவாளிகளும் கூட ஆச்சரியப்படுகிறார்கள். காவிய ரீதியில் இருக்கிற அழகு, சமூக வாழ்வு முறைகளை நுட்பமாகச் சொல்லியிருக்கிற அழகு, அத்யாத்ம தத்வங்கள், நன்னெறி உபதேசங்கள் (moral instructions), ஸயன்ஸ் கருத்துக்களும் கூட வேதங்களில் கொட்டிக் கிடக்கிறது என்று ஆச்சரியப்படுகிறார்கள்.

சப்த சலனமான மந்திரங்களுக்கெல்லாம் அர்த்தம் இருக்க வேண்டும் என்பதே இல்லை. பிரகிருதத்தில் (நடைமுறை வாழ்க்கையில்) பார்த்தாலும், வார்த்தையோ அர்த்தமோ இல்லாமலே ஒரு ராகத்தை ஆலாபனம் பண்ணிக் கேட்கிறபோது, அதன் வெறும் சப்தம் மட்டுமே நமக்கு ஆனந்தம், துக்கம் முதலான உணர்ச்சிகளைத் தருகிறது. வாத்திய ஸங்கீதத்தினால் ஏற்பட்ட Vibration-களினாலேயே கறிகாய்ச் செடிகளைத் தூண்டி யதேஷ்டமாகக் காய்க்க வைத்திருக்கிறோம் என்று ஸமீபத்தில் கூட ஒரு யுனிவர்சிடியில் பரிசோதனைகள் பண்ணித் தெரிவித்திருக்கிறார்கள். சப்தத்துக்கு சிருஷ்டி சக்தி உண்டு என்பதற்கு இது ஒரு Proof. அது ஒரு பக்கம் இருக்கட்டும். இங்கேயும் வாத்ய ஸங்கீதம் என்பதாலேயே வார்த்தையோ அர்த்தமோ முக்கியமில்லை என்று தெரிகிறது.

வேதத்தில் என்ன விசேஷம் என்றால் அதன் சப்தத்துக்கே தனியாக சக்தி இருப்பது மட்டுமின்றி, வார்த்தைகளாகவும் அதற்கு மிக உயர்ந்த அர்த்தம் இருக்கிறது.

தமிழில் அநேக உத்தமமான ஸ்தோத்திரங்கள் இருக்கின்றன. அவற்றைப் படித்தால் மனஸ் உருகுகிறது. ஆனாலும் குறிப்பிட்ட பிரயோஜனம் வேண்டுமென்றால், அதில் சிலதை மட்டும்தான் உருவேற்றுவது என்று வைத்துக் கொண்டிருக்கிறோம். திருமுருகாற்றுப்படை, வியாதி தீருவதற்கென்று ஒரு திருப்புகழ் ("இரு மலுரோக"), தேவாரத்தில் மழை வேட்டல் பதிகம் என்றிப்படி சிலதை மட்டும் விசேஷமாகப் பல ஆவிருத்தி ஜபிக்கிறோம். இதே நக்கீரரும், அருணகிரிநாதரும், சம்பந்தமூர்த்தி ஸ்வாமிகளும் இவற்றைவிட நெஞ்சை உருக்கும்படியான வேறு ஸ்தோத்திரங்கள் பண்ணியிருக்கக்கூடும். ஆனால் அவற்றை விட்டு இவற்றை மட்டும் ஏன் எடுத்துக் கொள்கிறோம் என்றால் சப்த விசேஷந்தான். இந்தப் பாடல்களில் உள்ள சப்தங்களுக்கு மந்திர சக்தி இருக்கிறது. ஆசார்யாளேதான் "ஸௌந்தர்ய லஹரி", "சிவானந்த லஹரி" இரண்டும் செய்திருக்கிறார். ஆனால் "ஸௌந்தர்ய லஹரி"யில் ஒவ்வொரு சுலோகத்தை ஜபிப்பதற்கும், ஒவ்வொரு விதமான பலன் சொல்லியிருக்கிற மாதிரி, "சிவானந்த லஹரி"க்குச் சொல்லவில்லை. காரணம் என்னவென்றால் சப்தங்களுக்கே உள்ள மந்திர சக்திதான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

தர். எங்க அப்பா. அவர் ஒருத்தர்தான் எனக்குத் தெரிஞ்சு எங்க ஊரிலே காங்கிரஸ்காரர்..."

"அருமைநாயகமா...? ஆண்டார்குப்பம் அருமைநாயகமா? அப்படிச் சேர்த்துச் சொல்லுங்க. அந்தக் காலத்திலே வெங்கிட்டராமையர்னு ஒரு காங்கிரஸ்காரர் இருந்தார். பெயரைச் சொன்னால் சட்டுனு யாருக்கும் தெரியாது. மட்டப்பாறை வெங்கட்டராமையர்னு ஊர் பேரைச் சேர்த்துச் சொன்னால் தான் எல்லாருக்கும் தெரியும். அப்படித்தான் ஆண்டார்குப்பம் அருமைநாயகம். எப்பேர்ப்பட்ட மனுசன்? ஒரு தடவை ஜெயில்லே உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினோம். எல்லாரும் சேர்ந்து மரத்தடி நிழல்லே போய் உட்கார்ந்து அசையமாட்டோம்னோம். போலீஸ், வார்டருங்கன்னு சேர்ந்து லத்தியைச் சுழட்டிகிட்டு வந்து கலைஞ்சு போகச் சொன்னாங்க. பல பேர் அடிக்குப் பயந்து கலைஞ்சு ஓடினோம். ஆண்டார்குப்பம் அசையல்லியே! அவர் உண்மையான சத்தியாகிரஹி. அப்படிப்பட்ட ஒரு உண்மையான காங்கிரஸ்காரரோட பிள்ளையைப் பார்த்ததிலே சந்தோஷம்... அருமைநாயகம் அளவுக்கு இல்லேன்னாலும் நானும் பழைய காலத்து காங்கிரஸ்காரன்தான். இப்போகூட எதுக்கு டெல்லி வந்தேன் தெரியுமா? கேசரி, இன்னும் அந்த நாள் தலைவர்ங்க சில பேரைப் பழக்கம் உண்டு. சொந்த அரசியல் லாபத்துக்கோ, தெரிஞ்சவங்க, தெரியாதவங்க லைசன்ஸ், பிசினஸ் விஷயமாகவோ இங்கே வரல்லே. காங்கிரஸ் கட்சி எப்படி சீரழியுது! போட்டி, பொறாமை... பொய்மை! எங்கே பார்த்தாலும் பொய்... எதுலே பார்த்தாலும் பொய்யா... என்னாங்க இப்படி பண்றீங்களேன்னு கேட்டுட்டுப் போகலாம்னு வந்தேன். எங்களுக்கு தியாகின்னு பட்டம் சூட்டி, எங்கே போகணும்னாலும் ரயிலிலே ஃப்ரீயா போகலாம்னு பாஸ் கொடுத்திருக்

காங்க இல்லையா? அதைக்கூட என் சொந்த காரியத்துக்கு உபயோகப்படுத்தறது இல்லீங்க. இந்த மாதிரி பொது காரியத்துக்காகப் போகணும்னாதான் போறது..."

"முதல் வகுப்பிலே போகலாமே..."

"போகலாம். இன்னைக்கு இடம் இல்லேன்னுட்டான். மத்தியானம் ரயில் பவனுக்குப் போய் ரயில்வே மந்திரியையே பார்த்தேன். 'இன்னைக்கு மெட்ராஸுக்கு முதல் வகுப்பு கேட்காதீங்கன்னுட்டாங்க. காவேரிப் பிரச்னையைத் தீர்க்கிறதுக்காக தமிழ்நாட்டிலிருந்து ரெண்டு மந்திரிங்க வந்துட்டுத் திரும்பறாங்களாம். மந்திரிங்க ப்ளேன்லே போயிட்டாங்க. கூட வந்த அதிகாரிங்க பதினைஞ்சு பேரு, அவங்களுக்கு பி.ஏ.ங்க, அப்புறம் செக்யூரிட்டின்னு முதல் வகுப்பு பர்த் அத்தனையும் காவேரித் தண்ணியா ஓடுது. ஆத்திலேதான் தண்ணி வர வழியா காணும். நல்ல வேளை, நீங்க இந்த மாதிரி கவர்ன்மெண்ட் வம்பிலே மாட்டிக்கலே. கம்பெனியைப் பார்க்கப் போயிட்டீங்க...!"

"உங்களுக்கு அப்பாகிட்டே நிறைய பழக்கம் உண்டா?"

"பழக்கம் உண்டாவா? என்ன அப்படி கேட்டுட்டீங்க? ஊருக்குப் போனதும் கேளுங்க. உங்கப்பா அந்த நாள் தஞ்சாவூர் மிராசுதார். அப்படி வந்து நின்னாலே கம்பீரமாக இருக்கும். ஜெயிலிலே சாப்பிடத் தட்டு கொடுப்பாங்க. என்னா தட்டு? அலுமினியம். உங்க அப்பா வசதியா வாழ்ந்தவரு. வீட்டிலே அந்தக் காலத்திலே வெள்ளித் தட்டிலே சாப்பிட்டுப் பழக்கப்பட்டவரு. அவரு ஜெயிலிலே எத்தனையோ நாளு அலுமினியத் தட்டை வெறிச்சுப் பார்த்துக்கிட்டே இருப்பாரு. எனக்கு, என்னமோ போலிருக்கும். தட்டை இப்படி கொடுங்க, நான் கழுவிக் கொண்டாரேன்னு சுத்தமா கழுவிக் கொடுப்பேன்..."

"அந்த நாள் காங்கிரஸ்காரங்க எல்லாரும் என்னென்னமோ பதவி எல்லாம் அனுபவிச்சிருக்காங்களே. நீங்க ஒரு பதவிக்கும் போகல்லியா? இப்பகூட இந்த தமா.கா. மாநில காங்கிரஸ் கூட்டிலே ஏதாவது கிடைச்சிருக்கும். அட, எம்.எல்.ஏ., எம்.பி.ன்னு வேணாம். யூனியன் தலைவர்ங்கிறமாதிரி ஆகி, ஊருக்கு வழிகாட்டலாமே?"

"பதவியா...? எனக்கா...? தம்பி, பதவி வரும்னு நினைச்சா ஜெயிலுக்குப்போனோம்? பதவி வரும்னு நினைச்சா களி தின்னோம்? பெண்டாட்டி பிள்ளைங்களை மறந்து கட்டாந்தரையிலே படுத்துத் தூங்கினோம்? பதவி, எங்களை மாதிரி உண்மையான காங்கிரஸ்காரங்களுக்கு இல்லே. இப்போ வராங்க பாருங்க, போட்டுக்கிட்டிருந்த சில்க் சட்டையை அவசரம் அவசரமா கழட்டி பீரோவிலே மடிச்சு வைச்சுட்டு ரெடிமேட், கதர் சட்டையை மாட்டிகிட்டு... அவங்களுக்கு வேணும் பதவி. காந்தி என்ன சொன்னார்? சத்தியம்! சத்தியம்னா என்ன? தியாகம்! ஒரு பொய் சொல்லமாட்டேன்னு கடைசிவரை இருந்த அரிச்சந்திரன் கதையை எப்பவோ கேட்ட காந்தி, தன் சுயசரிதத்துக்கு என்ன பெயர் வைச்சாரு? 'சத்திய சோதனை.' சத்தியம்... ஆமாம், சத்தியம்! பொய் நம்ம வாயிலேருந்து வரலாமோ? அப்புறம் வாய் நாறாதோ.... தூ...! இப்போ இருக்கிற காங்கிரஸ்காரங்க கோர்ட்டிலே படி ஏறி, "நான் சொல்றதெல்லாம் சத்தியம், சத்தியத்தைத் தவிர வேறில்லே'ன்னு பிரமாணம் பண்ணிட்டு எத்தனை பொய்யா எடுத்து விடறாங்க?...."

பேசப்பேச அவர் முகம் ஒரு புதுப்பொலிவு பெற்றது. கண்களில் ஒரு தீட்சண்யம் பிரகாசித்து. அவர் உணர்ச்சி வேகம் என்னையும் பற்றிக் கொண்டது. "ஐயா... உங்களைமாதிரி நாலு நல்லவங்க இருக்கிறதினாலேதான் இன்னமும் நாட்டிலே மழை பெய்யுது. அப்பா கூட அப்படித்தான். ஒரு பதவியைத் தேடிப் போனதில்லே..."

"அவர் சத்தியசந்தர். தியாகி, நெருப்பு. புடம் போட்ட தங்கம். நானும் அப்படித்தான் இருக்க முயற்சி பண்றேன்..."

டிக்கட்டுகளைச் சரி பார்க்க டி.டி.இ. வந்தார். என் டிக்கட்டைச் சரி பார்த்ததும், அருமைசாமியின் டிக்கட்டைப் பார்த்தார். டிக்கட்டோடு தியாகிகளுக்கான ஐடண்டிடி கார்டையும் பரிசோதித்தார். "ஐயா... நீங்க முதல் வகுப்பிலே வரலாமே. இடம் இல்லியா?

"பழரசக் கடை பழநிவேலு பெரிய ஆளு தாம்பா!"

"எப்படிச் சொல்றே!"

"மெனு போர்டிலே ஞானப்பழ ஜூஸ் இருபது ரூபான்னு எழுதி வைச்சிருக்கான்!"

– கருப்பம்புலம் சித்ரவேலு





"கட்சிப்பணத்தை முழுங்கி நீங்க ஏப்பம் விட்டுட்டதா பேசுறாங்களே?"

"எப்படி முழுங்குவேன்? எனக்குத் தான் எப்பவுமே ஜீரணக் கோளாறாச்சே! என் டாக்டரை வேணுமின்னாலும் கேட்டுப் பாருங்க!"

– அம்பை தேவா

கிளம்புகிற நேரத்திலே ஏதாவது கான்சல் ஆகியிருக்கும். நான் பார்த்துச் சொல்லட்டுமா?" என்று கேட்டார்.

"வேண்டாம் தம்பி. முதல் வகுப்பிலே போனும்கிறதுக்கா ஜெயிலுக்குப் போனோம்? இது கிடைச்சதே பெரிசு. காந்தியே மூன்றாம் வகுப்பிலேதான் போனாரு. நாம அதற்கும் மேலே ரெண்டாம் வகுப்பிலே போறோம்.."

டி.டி.இ. நகர்ந்ததும் வண்டிக்குள்ளே நடு பர்த்தைப் பிரித்துவிட்டுக் கொண்டு அவரவர்கள் படுக்கையை விரிக்க ஆரம்பித்தார்கள்.

"நான் படுக்கிறேன் தம்பி. பகல் முழுக்க 'ராஷ்டிரபதி பவன், கருவூல பவன், ரயில் பவன்'னு சுத்தனேனா, அசதியா இருக்கு. படுக்கிறேன்" என்று படுக்கையை விரித்தார். "சரிங்க ஐயா... இன்னைக்கு உங்களைச் சந்திச்சதிலே சத்தியத்தின் ஒரு புதிய பரிமாணத்தைத் தெரிஞ்சுக்கிட்டேன். நன்றி. நானும் படுக்கிறேன்..."

நல்ல தூக்கம்.

மறுநாளும் பிரயாணத்தில் நல்ல விஷயங்களைப் பற்றிப் பேசியே பொழுது போயிற்று.

சென்னையை நெருங்குவதற்குமுன் நெல்லூரில் ஒரு நிமிஷம் நின்றது. பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த ஏகப்பட்ட பரிசோதகர்களின் கூட்டம் வண்டிக்கு இரண்டிரண்டு பேராகத் தாவி ஏறியதும் வண்டி நகர்ந்தது.

எங்கள் சீட்டுக்கு அருகில் வந்து டிக்கட்டுகளைப் பரிசோதித்தவர் ஒரு சீனியர் அதிகாரி. என் டிக்கட்டைச் சரி பார்த்துத் திருப்பிக் கொடுத்தவுடன் அருமைசாமியின் டிக்கட்டையும் ஐடண்டிடி கார்டையும் வாங்கிப் பார்த்தார். பிறகு ஐடண்டிடி கார்டையும் தம் கையில் இருந்த ஒரு லிஸ்டையும் கவனமாகப் பார்த்தார். அருமைசாமியைப் பார்த்தார்.

ரயில் பேசின் பிரிட்ஜைத் தாண்டி சென்டிரலுக்குள் நுழைய ஆரம்பித்திருந்தது.

"இந்த ஐடண்டிடி கார்டு... உங்க பேரு என்ன சொன்னீங்க?" என்று அருமைசாமியை விசாரிக்க ஆரம்பித்தார்.

"என் பெயர் அருமைசாமி. இது எனக்கு கவர்ன்மெண்ட் ஆஃப் இந்தியா கொடுத்த ஐடன்டிடி கார்டு. என்ன சந்தேகம் உங்களுக்கு?"

"இல்லே... ஃபர்ஸ்ட் கிளாஸ் ஃப்ரீ பாஸ் கொடுத்திருக்கிற தியாகிகள் லிஸ்ட் இதோ என்கிட்டே இருக்கு. இதிலே உங்க பெயரைக் காணுமே..."

"என் பெயர் இல்லியா...? விட்டுப்போயிருக்கும். டைப் அடிக்கிறவங்க விட்டிருப்பாங்க. இந்தக் காலத்திலே எங்கே ஒழுங்கா வேலை செய்யறாங்க? இந்த லட்சணம்தான்!"

"லிஸ்டிலே தப்பு ஏதும் இல்லே. நீங்க வைச்சிருக்கிறது போலி ஐடண்டிடி கார்டு."

"என்ன சார் இது? அறைகுறையா லிஸ்ட் வைச்சுகிட்டு பயமுறுத்தறீங்களா? டிக்கட் செல்லாதுன்னு சொல்லுங்க. அபராதம் கட்டிட்டுப் போறேன். எவ்வளவு கட்டணும்? அதுக்காக நான் காங்கிரஸ்காரனே இல்லே. பொய் சொல்றேன்னு சொல்லாதீங்க..."

"யார் பொய் சொல்றாங்கங்கிறது பிளாட்பாரத்திலே இறங்கினப்புறம் தீர்மானிசககக லாம். உங்க பெட்டி படுக்கையை கையிலே எடுத்துக்குங்க. இந்தாப்பா ஆர்.பி.எஃப். இந்த ஐயாவை ரெண்டு பேரா பிடிச்சு பிளாட்பாரத்திலே இறக்குங்க. விட்டுறாதீங்க. உம்... இறங்குங்க..."


அவர் கீழே இறங்கினார். என்னிடம் சொல்லிக் கொள்ள மறந்துபோய் விட்டாரா, அவமானத்தினால் வேண்டாம் என்று விட்டுவிட்டாரா என்று தெரியவில்லை.

திடீர் என்று நான் ஒரு சி.பி.ஐ. அதிகாரி என்பது எனக்கு நினைவு வந்தது. நான் பார்க்கிற ஒரு பார்வையிலேயே குற்றவாளியை நடுங்கவைத்து உண்மைகளைக் கக்க வைக்கிறவன். என்னை எப்படி இந்தக் கிழவர் இரண்டு ராத்திரியும் ஒரு பகலும் என்னென்னவோ பேசி என் புத்தியையே வேலை செய்ய விடாமல் செய்து விட்டார்!

ஏதோ ஒரு சக்தி என்னை ஏமாற்றுவதற்கு இவருக்கு வசதியாக இருந்திருக்கிறது. 'காந்தி, காங்கிரஸ்' என்கிற சக்தி!– ஐம்பது வருஷங்களாக இந்த நாட்டின் கோடிக் கணக்கான மக்களை ஏமாற்றி வந்திருக்கிற மாதிரி

கல்கி கன்ஸல்டன்ஸி

✦ புதுப் பச்சரிசி குழைகிறதா? குக்கரில் வைக்கு முன் அரிசியில் அரை ஸ்பூன் நல்லெண்ணெய் சேருங்கள். சாதம் பொல பொல!



விலைவாசி உயர்வுக்கு உரம் போடும் அரசு!



சம்பள கமிஷனின் சிபாரிசுகளை அமுல் படுத்தாவிட்டால் அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வார்கள்; அமுல்படுத்த வேண்டுமென்றாலோ பட்ஜெட்டில் ஒதுக்கிய தொகைக்கு மேலாக ஏழாயிரம் கோடி ரூபாய் தேவைப்படும்...

எப்படிப் பார்த்தாலும் இடிதான். வேலை நிறுத்தத்தையாவது தவிர்க்கலாம் என்று முடிவெடுத்துவிட்டது அரசு. 5000 கோடி ரூபாய்க்கு உடனடியாக வழி செய்திருக்கிறது. எப்படி...?

திட்டச் செலவு, திட்டத்தில் வராத செலவு என இரண்டிலும் தலா ஐந்து ஐந்து சதவிகிதம் வெட்டு விழுந்திருக்கிறது. இதைத் தவிர புதிய வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. விரைவிலேயே ரயில் சரக்குக் கட்டணமும் பயணிகள் கட்டணமும் உயர்த்தப்படும் என்பது பலமான வதந்தி. தபால் கட்டணங்களும் தொலைபேசிக் கட்டணங்களும்கூட உயர்த்தப்பட்டாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை.

கூடுதல் வருமானத்துக்கு வழி செய்து கொண்டாயிற்று; இனி கவலையில்லை என்று அரசு கைகட்டி இருந்து விட முடியாது. மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக எங்கள் சம்பள விகிதங்களையும் மாற்றுங்கள் என மாநில அரசு ஊழியர்கள் கேட்கப் போகிறார்கள். தொடர்ந்து வங்கி ஊழியர்களும் உள்ளாட்சி அமைப்பு ஊழியர்களும் அதே பல்லவியைப் பாடுவார்கள்! அரசும் அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று சம்பள உயர்வு அளித்து ஆசிர்வதிக்கப் போகிறது.

இப்படி, சம்பள உயர்வை எல்லா தரப்பினருக்கும் வாரி வழங்குவதால் ஆண்டொன்றுக்குச் சுமார் ஐம்பதாயிரம் கோடி ரூபாய் பணம் கூடுதலாகப் புழக்கத்துக்கு வரும் என்று எதிர்பார்க்கலாம்.

இதன் விளைவாக என்ன நடக்கும் என்பதையும் நாம் இப்போதே சுலபமாகச் சொல்லிவிடலாம். பணப் புழக்கம் பெருகும் வேகத்தில் உற்பத்தி பெருகாது என்பதால் விலைவாசி பயங்கரமாக ஏறப் போகிறது!

சம்பள கமிஷன் சிபாரிசை நிறைவேற்றும் முகமாக, அரசு இறக்குமதி வரியை மூன்று சதவிகிதம் அதிகரித்துள்ளது. இதனால் தொழில்துறை பாதிக்கப்பட்டு உற்பத்தி குறையவே செய்யும். இதுவும் விலைவாசி உயர்வுக்கு உரம் போடும்!

இதைப் போன்ற கழுத்தை நெரிக்கும் சூழலில் அரசு ஊழியர்களாவது ஓரளவு சமாளித்துக் கொள்வார்கள். அமைப்புச் சாரா பாட்டாளிப் பிரிவினர் பாடுதான் மிகவும் திண்டாட்டமாகப் போய்விடும்.

1970களில் இதே போன்றதொரு நிலைமை உருவான போது நம் நாடு ஒருவாறு சுதாரித்துக் கொண்டு அதிலிருந்து மீண்டது. ஆனால் இம்முறை அவ்வாறு நம்மால் சுதாரித்துக் கொள்ள முடியுமா என்பது பெரிய கேள்விக்குறி. உலக வங்கியிடம் நாம் பட்டிருக்கும் ராக்ஷஸக் கடன்கள் நம்மை நிமிர விடாமல் அழுத்துகின்றன...

அரசு செலவினங்களைப் பெரிய அளவில் குறைத்தாலொழிய விடிவு காலம் பிறக்கப்போவதில்லை.

— வி. கோபாலன்

13



வையவன்

ஆட்டோவிலிருந்து இறங்கி ஆஸ்பத்திரி வராந்தாவில் கொஞ்ச தூரம் நடந்தவுடனே எதிர்ப்பட்டாள் மீனாட்சியின் தாய் அஞ்சலை.

கவலையால் இருண்டு சுருங்கியிருந்த அவள் முகம் நர்மதாவைப் பார்த்ததும் சற்று மலர்ச்சி பெற்றது. வேகமாக எதிர் கொண்டு வந்து நர்மதாவின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டாள்.

"ஜெயிலுக்குப் புடிச்சுக்கினு பூட்டாங்கண்ணு சொன்னாங்களே கொழந்தே!"

எதிர்பாராமல் அவள் கண்களிலிருந்து மளமளவென்று கண்ணீர் வழிந்தது. தன்னை மறைத்துக் கொள்ளத் தெரியாத அன்பின் என்ன எளிய வெளிப்பாடு இது!

நர்மதா நெகிழ்ந்து விட்டாள்.


"ஜாமீன்ல வந்துட்டேம்மா."

"ஜெயில்ல ரொம்ப கஷ்டமா இருந்துச்சா கண்ணு."

நர்மதா பிரியமாகச் சிரித்துத் தலையசைத்தாள். "அதெல்லாம் ஒண்ணுமில்லம்மா! மீனாட்சிக்கு என்ன ஆச்சு? அவ எப்பிடி இருக்கா? அதைச் சொல்லுங்க மொதல்லே" என்று தன் விஷயத்தை ஒத்திப் போட்டாள்.

அஞ்சலைக்கு அந்த ஒரு கணம் மகளை மறந்த கணம். மீண்டும் நினைவூட்டப்படவே அவள் முகம் இருண்டு சுருங்கியது.

"நேத்து விடிகாத்தாலே புடிச்சு வாயாலும் வவுத்தாலயும்



✦ பழைய லாம்ப் ஷேடுகளை தூரப் போடாமல், ஷவர் மேல் மாட்டி விட்டால் குளிக்கும்போது, நீர் சுவர்களில் தெரிக்காது!

போயி பேச்சு மூச்சு இல்லே. ராவு எட்டு மணிக்கு சிவராசு போயி மோகன்ராஜு ஆட்டோவை கூட்டாந்தான்."

வாந்தியும் வயிற்றுப் போக்கும் வந்தவுடனே ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப் போகச் சொல்ல மீனாட்சிக்கு ஏன் தோன்றவில்லை?

"அவ்வளவு நேரம் வரை ஏம்மா லேட் பண்ணீங்க?"

"வூட்ல ஒர்த்தரு கெடையாது கொயந்தே, வூட்டுக்காரும் சிவராசும் மீனு புடிக்கத்தான் டவனேரிக்குப் போனவங்க அங்க எதுவோ தகரால்லே மாட்டிக்கினாங்க. எங்க ஏரியாவிலே ஆரும் இல்லே... அல்லாரும் மாரியாத்தாளுக்கு கூய் ஊத்தறதுக்கு மகமாயிபொரத்துக்குப் பூட்டாங்க. அப்புறம் ஏழரை பஸ்ல வந்து எறங்கறாங்க இவங்க ரெண்டு பேரும்."

அஞ்சலை ஒரு கிராமீய நிராதரவின் சின்னமாக விவரித்துக் கொண்டிருந்தாள். நர்மதா இடைமறித்தாள்.

"எப்படி ஆச்சும்மா திடீர்னு?"

"பாலேரி மீனு துன்னது தான் சாக்கு! நேத்து இவனே வலை போட்டு மீன் புடிச்சு விக்கறதுக்கு எடுத்துனு போனா... வாணாண்டின்னு தலைபாடா அடிச்சக்கிட்டேன்."

கன்னியராகி நிலவினில் ஆடி...

"அப்புறம்?"

"யாவாரம் சரியா நடக்கலே. முக்காவாசி மீனு தேங்கிப்போச்சு... பாவி மக அதைக் குப்பையிலே தூக்கிப் போட்டுட்டு வந்துறக்கூடாது? வர்ற வழிலே பத்து ஊட்டுக்கு எனாமா குடுத்துட்டு வந்தா. அப்பவும் மீந்துது. அதை அறுத்து சமைச்சா. அதுல எதோ புட்டுப் பாய்சனாமே?"

ஃபுட் பாய்சனிங்?"

"ஆங்... அப்படித்தான் டாக்டருங்க சொன்னாங்க. அது ஆய்ப்போச்சாம். நம்ம ஏரியாக்காரங்க பதிமூணு பேரு பெட்ல கிறாங்கம்மா?"

"இப்ப எப்படிம்மா இருக்கா?"

நர்மதாவுக்கு அவள் சொன்ன பதிலைக் கேட்குமளவுக்குக் கூட கால் தறிக்கவில்லை.

"எங்கம்மா இருக்கா?"

இன்டன்ஸிவ் மெடிகல் கேர் யூனிட்டைக் காட்டினாள் அஞ்சலை. நர்மதா அங்கே விரைந்தாள்.

மீனாட்சி சுய நினைவின்றிப் படுத்திருந்தாள். முகம் வெளுத்திருந்தது. கைகால்கள் துணியாகத் துவண்டிருந்தன.

தொங்கும் ஸ்டாண்டிலிருந்து க்ளுகோஸ் டிரிப் ஏறிக் கொண்டிருந்தது.

பேசாமல் பார்த்துக் கொண்டு நிற்பதில் அர்த்தமில்லை என்று தோன்றினாலும் மனசு கேட்கவில்லை.

"மீனாட்சி... மீனாட்சி" என்று இரண்டு தடவை கூப்பிட்டுப் பார்த்தாள் நர்மதா. பதில் இல்லை.

யாருக்கோ ஸிரிஞ்சில் ஊசி மருந்தை நிரப்பிக் கொண்டிருந்த ட்யூட்டி நர்ஸ் திரும்பிப் பார்த்தாள்.



"உண்ணாவிரதத்தை, சீக்கிரமா முடிச்சு வைங்க தலைவரே!"

"ஏன் முடிக்கணும்?"

"அஜீர்ணம்!"

– பர்வதவர்த்தினி



"நம்ம அரசர் மாதிரி ஒரு தொடை நடுங்கிய எங்கேயும் காண முடியாது!"

"எப்படிச் சொல்றே?"

"வைக்கோல் போர்ன்னு சொல்லக் கேட்டால் கூட பயப்படுறார்!"

– உ. ராஜாஜி

"இந்தப் பேட்டியை கொஞ்சம் வித்தியாசமான விஷுவலா எடுக்கணும்னு நான் சொன்னது வாஸ்தவம்தான். அதுக்காக ரெண்டு பேரும் தலைகீழா நின்னுகிட்டு பேசினா எப்படி?"

– ஆர். ஆர். தமன்



அந்த நோயாளிக்கு ஊசி மருந்தை ஏற்றி விட்டு வேகமாக நர்மதாவை நெருங்கினாள்.

"பேஷண்ட் அன்கான்ஷியஸா இருக்கு. பாத்துட்டீங்க இல்லே. போங்க இது ஐ.ஸி.யூ: டோன்ட் டிஸ்டர்ப்" என்று மெல்லிய குரலில் கண்டிப்பாகச் சொன்னாள்.

அவளை ஒருமுறை வெறித்துவிட்டு வெளியே வந்தாள்.

வராந்தாவில் ரவுண்ட்ஸ் போய்த் திரும்பிக் கொண்டிருந்த டாக்டர் யாரோடோ நின்று பேசுவது தெரிந்தது.

மீனாட்சியின் உடல்நிலை குறித்து அறியும் ஆர்வம் மேலிட அவரை நோக்கி விரைந்தாள்.

பின்தொடர்ந்து கிருஷ்ணமாச்சாரியும் அஞ்சலையும் வருகிறார்களா என்று கூடக் கவனிக்கத் தோன்றவில்லை.

டாக்டரை அணுகியதும் அவள் நடை வேகம் மட்டுப்பட்டது.

டாக்டருடன் நின்று பேசிக் கொண்டிருந்தவன் பத்ரி.

இவன் ஏன் இங்கே வந்தான்?

இந்தச் சூழ்நிலையில் அங்கே அவனைச் சந்திக்க வேண்டுமா? அதுவும் மீனாட்சியிடம் அவன் தன் எண்ணத்தை அறிவித்த பின்?

அவள் தயங்கி அவனைத் தவிர்ப்பது உத்தமம் என்று திரும்பினாள்.

"ஹலோ நர்மதா!"

பத்ரி அவளைப் பார்த்து விட்டான். பெயரிட்டு அழைத்தும் விட்டான். இனியும் போவது இங்கிதமில்லை. அவள் நின்று திரும்பினாள்.

டாக்டரும் அவளை நோக்கி முகம் திருப்பினார்.

"இவங்க..." என்று அவளை பத்ரி டாக்டருக்கு அறிமுகம் செய்ய முனைந்தான்

"தெரியுமே! மிஸ் நர்மதா... ஆன்டி டௌலி யூஷன் ஆக்டிவிஸ்ட்."

நர்மதா திகைத்தாள். இவருக்கு எப்படி இவ்வளவு விவரமாகத் தன்னைத் தெரியும்?

அவள் முகத்தில் நிலவிய திகைப்பை பத்ரி கவனித்தான்.

"ஒரு வாரமா யூ ஆர் ஆன் த நியூஸ். ரெண்டு தடவை ஒங்க போட்டோ நியூஸ் பேப்பர்ல எல்லாம் வந்தாச்சு!"

சிறைச் சந்திப்பின்போது பத்ரியின் சுக்கா தரி ஷீலா பிரசாத் நீ பாப்புலர் ஆகணும்னு ஆசையா என்று கேட்டது நினைவில் பளிச்சிட்டது.

ஏனோ சிறைக்குள் அவளுக்கு செயநத் தான் பார்க்கத் தோன்றவில்லை.

டாக்டர் வயதானவர். அவர் முகத்தில ஒரு புன்னகை தேங்கி நின்றது.

"கங்க்ராஜுலேஷன்ஸ் மிஸ் நர்மதா! யூ ஆர் ரெய்ஸிங் எ டைம்லி புரொடெஸ்ட்" என்றார்.

"போகட்டும். இங்க எதுக்கு வந்தீங்க... அந்த ஃபுட் பாய்ஸனிங் கேஸா."

"யெஸ் டாக்டர்."

"இதோ ஸார் கூட அதைத்தான் கேட்டுட்டு இருந்தாரு" என்று பத்ரியைச் சுட்டிக் காட்டிச் சொன்னார்.

ஓ... பத்ரியும் மீனாட்சியைப் பார்க்கத்தான் ஆஸ்பத்திரிக்கு வந்திருக்கிறானா?

"என்ன ஸ்டேஜ் டாக்டர்?" மீண்டும் நர்மதா பத்ரியைத் தவிர்த்தவாறு டாக்டரைக் கேட்டாள்.

"க்ரிடிக்கல் தான்! டூ மச் டீ ஹைட்ரேஷன்... ரெஸ்பிரேட்டரி ஸிஸ்டமும் பாதிக்கப்பட்டிருக்கு... அவங்களுக்கு ஏதாவது மூச்சுத் தொந்தரவு இருந்திருக்கா?"

அடிக்கடி மீனாட்சிக்குச் சளி பிடிக்கும். சுவாசம் சரியாக விட முடியவில்லை என்று கூறுவாள்.

"ஆமாம் டாக்டர்."

"ஐ ஸீ.. வி ஆர் ட்ரையிங் அவர் லெவல் பெஸ்ட்... யெட்..."

நர்மதாவின் முகத்தில் திகில் பரவியது. டாக்டர் அதைக் கவனித்தார்.

"டோண்ட் ஓர்ரி... நைட் பன்னெண்டு மணிக்கெல்லாம் ரெகவர் ஆயிடுவாங்கன்னு ஒரு நம்பிக்கை."

டாக்டர் விடைபெறுவது போல் ஒரு புன்னகையோடு தலையசைத்தார்.

"தாங்க் யூ டாக்டர்!"

"பெஸ்ட் ஆஃப் லக்! ஒங்க போராட்டத்துக்கு அது வெற்றி பெற்றா எதிர்காலத்திலே இந்த மாதிரி கேஸுங்க கொறையும். எங்களுக்கும் எவ்வளவோ வேலை கொறைஞ்சுடும்."

டாக்டர் நகர்ந்தார்.

பத்ரி நின்று கொண்டிருந்தான்.

"ஸாரி நர்மதா!"

அவள் திரும்பி கிருஷ்ணமாச்சாரியும் அஞ்சலையும் தன்னைக் கவனிக்கிறார்களா என்று பார்த்தாள்.

அவர்கள் இருவரும் ஆஸ்பத்திரியில் இதே பிரச்னைக்காக அட்மிட் ஆகியிருந்த திருக்கூடல்வாசிகளைப் பார்க்க வந்தவர்களோடு பேசிக் கொண்டிருந்தனர்.

"ஏதுக்கு?" என்று பத்ரியை ஏறிட்டுப் பார்க்காமல் கேட்டாள்.

"நடந்ததுக்கு."

நிமிர்ந்து பார்த்தாள்.

மூணு நாளைக்கு முன்னாடிதான் நான் மீனாட்சியை மீட் பண்ணேன். "ஷி ஈஸ் எக்ஸ்ட்ரீம்லி ப்ளெய்ன். போல்ட் அண்ட் நைஸ்."

நர்மதாவின் இமைகள் தாழ்ந்தன.

"இப்படி திடீர்னு மீனாட்சி ஆஸ்பத்திரியிலே அட்மிட் ஆவாங்கன்னு நான் எதிர்பார்க்கலே. எ ஸ்ட்ரேஞ்ச் அக்கரன்ஸ்."

எதற்கு இவன் பேச்சை வளர்க்கிறான்?

மணி நாலு. இன்னும் எட்டு மணி நேரம் டாக்டர் கெடு வைத்திருக்கிறார்.

அவள் மனசு தன்னையறியாமல் திருக் கூடலின் பெருமாள் சந்நிதிக்கு ஒருமுறை சென்று திரும்பியது.

'பெருமாளே! நட்பு ஓர் உன்னதமான சக்தி... காப்பாற்று.'

சட்டென்று அவளுக்கு ஒரு யோசனை வந்தது.


"நீங்க ஊருக்கா... இல்லே வேலூர்லயே ஹால்ட்டா" என்று பத்ரியை நோக்கிக் கேட்டாள்.

"ஏன்?"

"இல்லே. நான் இப்பத்தான் பெய்ல்லே வந்தேன். அம்மா எதிர்பார்த்துண்டிருப்பா... பட் ஐ விஷ் டு ஸ்டே ஹியர்." அவன் இழுத்தான்.


"நான் இங்கதான், ஸிஸ்டர் பங்களாவிலே தங்கப் போறேன். என்ன செய்யணும் சொல்லுங்கோ."

"ராத்திரி பன்னெண்டு மணின்னு டாக்டர் கெடு வச்சிருக்கார். நீங்க ஹாஸ்பிடலுக்கு ஐ.எம்.ஸி. யூனிட்டுக்கு ஒரு போன் பண்ணி விசாரிச்சு எனக்கு ஒரு எஸ்.டி.டி. பண்ண முடியுமா?"



✦ உடல் குளிக்க முடியாத அளவு சிறிதாகி விட்ட சோப்புத் துண்டுகளை, டாய்லெட்டில் கால், கை கழுவப் பயன்படுத்தலாம்.

✦ பம்பாய் துடைப்பம் உபயோகமில்லாமல் போனதும் அதன் பிளாஸ்டிக் கைப்பிடியை டீ.வி ஆண்டெனா இரும்புக் குழாயில் பொருத்தி மூடுவதால் அதிகம் துருப்பிடிக்காமல் காக்கலாம்!





"என் மாமியாருக்கு தான் ஒரு ராணுவ அதிகாரியின் மனைவின்னு கர்வம் ஜாஸ்தி!"

"என்ன செஞ்சாங்க?"

"கல்யாணமாகி நான் புருஷன் வீட்டுக்குள்ள நுழைஞ்ச கையோட என்னைப் பார்த்து Line of control வீட்டில எங்கே வைச்சுக்கலாங்கிறாங்க!"

- டோம்பிவில்லி பாலு



"என்னப்பா சர்வர் ரெண்டு இட்லி ஒரு பேப்பர் ரோஸ்ட் பார்சல் கேட்டா இட்லி மட்டும் பார்சல் பண்ணிக் கொண்டு வந்திருக்கியே, பேப்பர் ரோஸ்ட் எங்கே?"

"நல்லாப் பாருங்க சார்... அதுலதான் இட்லியைப் பார்சல் பண்ணிக் கொண்டு வந்திருக்கேன்!"

— மேல்மங்கலம் பத்ரா

முதல் முறையாக பத்ரியிடம் ஓர் உதவி கேட்கும் உள் ஞணர்வு. எனினும் வேறு வழியில்லை.

"இவ்வளவு தானே. ஷ்யூரா பண்றேன். போன் நம்பர் சொல்லுங்கோ" அவன் பாக்கெட்டிலிருந்து ஒரு துண்டுக் காகிதமும் பேனாவும் எடுத்தான்.

நர்மதா வீட்டில் போன் இல்லை. ருக்மிணி மாமி வீட்டுப் போன் நம்பரைச் சொன்னாள்.

அவன் குறித்துக் கொண்டான்.

இரவு பத்து மணி வரை திருக்கூடலில் அம்மாவைச் சமாதானப்படுத்த முயன்று தோற்றுப் போனாள் நர்மதா.

மஹாலக்ஷ்மி தலையைச் சுவர்ப்பக்கமாகத் திருப்பிப் படுத்தவள் உறங்கி விட்டாள்.

கிருஷ்ணமாச்சாரி நேர் எதிரே ஊஞ்சலுக்குப் பக்கத்தில் பாய் விரித்துப் படுத்திருந்தார். அவர் கட்டிலில் படுத்து நர்மதா பார்த்ததில்லை.

அனந்தாச்சாரியும் ஜாமீனை மறுத்துச் சிறையில் இருந்ததால் வீட்டில் ஒரு வெற்றிடம் தெரிந்தது.

என்ன கனமான சூன்யம் இது!

கூடத்துக் கடிகாரம் பத்தரை மணிக்கு ஒரு சப்தம் கொடுத்து நேரத்தை நினைவூட்டியது.

பத்ரி போன் செய்வானா?

ஒருவேளை தான் ஊர் திரும்பியிருக்கக் கூடாதோ!

வேலூரில் ஆஸ்பத்திரி வராந்தாவிலேயே அப்பாவோடு படுத்திருந்து... சே.. அது சாத்தியப்பட்டிருக்காது. வேறு யார் வீட்டிலாவது தங்கி இருந்திருக்கலாமோ!

எங்கே... யார் வீட்டில் தங்கி மட்டும் என்ன புண்ணியம்?

பன்னிரெண்டு மணி இரவில் ஆஸ்பத்திரிக்கு வந்து விசாரிக்க முடிந்திருக்குமா?

யோசித்துக் கொண்டே போகும்போது ருக்மிணி மாமி வந்து இந்த நேரத்தில் கதவைத் தட்டி போன் வந்தால் தெரிவிப்பாளோ என்ற கவலை முளைத்தது.

பதினொன்று. பதினொன்றரை.. பன்னிரெண்டு. கூடத்துக் கடிகாரம் கடமை தவறாமல் ஒலித்து ஒலித்து ஓய்ந்தது.

உறக்கம் வரவில்லை.

இந்நேரம் மீனாட்சி... இந்நேரம் மீனாட்சி என்று ஒரு துடிப்பு மனசில் அடித்துக் கொண்டது.

திடீரென்று காலிங்பெல் ஓசை.

கிருஷ்ணமாச்சாரி சட்டென்று எழுந்தார். அவருக்கு தூக்கம் உடனே கலைந்து விடும்.

"நான் தான் கோதண்டபாணி மாமா... நர்மதாவுக்கு எஸ்.டி.டி." ருக்மிணி மாமி பையன்.

மஹாலக்ஷ்மியிடம் கதவைத் தாள் போடச் சொல்லிவிட்டு இருவரும் வெளியே விரைந்தனர்.

ருக்மிணிமாமி வீட்டில் போனைக் கையில் எடுக்கும் போது நர்மதாவுக்கு லேசாக ஒரு நடுக்கம்.

"ஹலோ நர்மதா..."

"ஆமாம். ஐ ஆம் டெரிப்ளி ஸாரி. மீனாட்சி பாஸ்ட் அவே அட் லெவன் ஃபிப்டி" பத்ரி குரல் நடுங்கச் சொன்னான்.

"என்ன என்ன...மீனாட்சி... அப்பா ஆ..ஆ" என்று கையில் போனோடு கதறிவிட்டாள் நர்மதா.

(தொடரும்)





"நாம் குரங்குகளாக இருப்போம்!"

— அமலா

மொட்டைத்தலை. சந்தன வண்ணம் மிகுதியாக விளங்கி சாமியார்த்தனமாகத் தோற்றமளித்த கரிதார், துப்பட்டா. கழுத்தில், மூக்கில், கையில் மருந்துக்கும் நகையில்லை. ஏதோ துறவறம் பூண்ட மணிமேகலையை நினைவுபடுத்தினார். யார் என்று அறிந்து கொண்டபோது அதிர்ச்சி. ஆயிரக்கணக்கான தமிழ் சினிமா ரசிகர்களின் கனவுக்கன்னியாக (ஒரு காலத்தில்) விளங்கிய அமலாதான்!

'அஸ்ஸான்' (ASSAAN) என்ற அமைப்பின் துவக்க விழாவில் கலந்து கொள்ள வந்திருந்தார். தெருநாய்களின் நலன் காக்கப்படுவதை முக்கிய நோக்கமாகக் கொண்ட இந்த அமைப்பு இன்னொரு கோணத்தில் கூட, திரையுலகின் நிழல் படிந்துள்ளது. இதன் தலைவர் யக்ஞ பிரபா - சௌகார் ஜானகியின் மகள் மற்றும் வைஷ்ணவியின் அம்மா. பிராணிகள் நல அமைப்புகளின் தலைவர்கள், எம்.பி. நிர்மல், செயலாளர் டாக்டர் மாலதி போன்ற பலர் கலந்து கொண்டு பேசினார்கள். என்றாலும் தடம் மாறாமல், சரளமான ஆங்கிலத்தில், உணர்வுபூர்வமாக அமைந்த அமலாவின் பேச்சு மனதைத் தொட்டது. பேச்சின் இடையே நிறைய அபிநயங்கள் (கலாக்ஷேத்ரா குருகுலம்).

"ஐந்து வருடங்களுக்கு முன் மிருக நல அமைப்பு ஒன்றை ஹைதராபாதில் நான் துவங்கியபோது என் நோக்கமே வேறு. வாயில்லா ஜீவன்களுக்கு உதவ வேண்டும், அவற்றிடம் அன்பு செலுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் எழுந்த செயல்பாடு அது. ஆனால் இந்த ஐந்து வருடங்களில் நான் உணர்ந்து கொண்ட விஷயம் இதுதான் - அவை எனக்கு உதவியிருக்கின்றன. என்னைப் புரிந்துகொள்ள, என்னை வெளிப்படுத்த, என்னிடமுள்ள மேன்மையான குணங்களை நானே உணர அவை எனக்கு அற்புதமான வாய்ப்பை அளித்து வருகின்றன. இந்த உணர்தலை விட உண்மையான ஒன்று வேறு ஏதாக இருக்க முடியும்?


"ஜப்பான் தீவுகளில் உள்ள குரங்குகளை ஆராய்ச்சி செய்யச் சென்றிருந்தார்களாம் சில விஞ்ஞானிகள். அங்கே குரங்குகள் பள்ளம் தோண்டி சர்க்கரை வள்ளிக்கிழங்கை எடுத்து சாப்பிடுவதைக் கண்டார்கள். ஒரு விஞ்ஞானி அந்தக் கிழங்கை அருகில் உள்ள ஓடையில் சுத்தம் செய்து ஒரு குரங்கிடம் கொடுத்தார். இந்தக் கிழங்கு, சாப்பிடுவதற்கு அதிக ருசியாக இருப்பதைக் கண்ட அந்தக் குரங்கு, அடுத்த கிழங்கைத் தோண்டியதும் அதை ஓடையில் கழுவிவிட்டு சாப்பிட்டதாம்! இதைக் கண்டு அங்குள்ள நூறு குரங்குகளும் அதே போல செய்யத் தொடங்கின. நாளடைவில் ஜப்பான் பகுதியில் உள்ள எல்லா குரங்குகளுமே இந்தப் பழக்கத்தை மேற்கொண்டது கண்டு அதிசயப்பட்டுப் போனார்களாம் விஞ்ஞானிகள்!

"நாமும் அந்த நூறு குரங்குகளாக இருப்போம். மிருக நலனைப் பற்றிய பிரசாரத்துடன் மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் நடைமுறையில் நாம் கனிவை வெளிப்படுத்துவோம். அது தானாகப் பெருகும். வன்முறைச் சம்பவங்களால் அன்னை பூமி கடும் காயம் அடைந்து வருகிற நேரம் இது. நம் சுயநலத்துக்காக லட்சக்கணக்கான மிருகங்கள் வதைபடுவதை நாம் எந்த உணர்வும் இல்லாமல் பார்த்துக் கொண்டிருப்பதா?" என்று அவர் பேசிய போது அதில் சினிமாத்தனம் தெரியவில்லை.

— குல்லூ

படம் : பிரவீண் குமார்

நைந்து, கிழிந்து போன ஈஸிசேர் கேன்வாஸ் துணியில் உறுதியாக இருக்கும் பகுதியில் பை தைத்துக் கொள்ளலாம்!



✉ வை.கோ.வின் ஆவேசப் பேட்டி, நடராசனின் சூடான பேட்டி என்று ஏகப்பட்ட டென்ஷன்களைக் குறைக்கத்தான் 25 ஜோக்குகள் வெளியீட்டீரா என்ன?

காவேரிப்பட்டணம், கே. சோமசேகர்.

✉ 'வெற்றி தோல்வி' இரண்டையும் பாராமல் இறுதிவரை தனது இலட்சியத்தை எடுத்துச் செல்பவன் பெயரே 'போராளி'. நடந்த தேர்தல்களில் ம.தி.மு.கவிற்கு மக்கள் ஒரு பிரதிநிதித்துவம்கூட கொடுக்கவில்லை என்பதற்காக, 'பொதுவாழ்வில் நேர்மை' என்ற தனது கட்சிக் கொள்கைக்கு முரணாக (ஜெ) அ.தி.மு.கவிடம் கூட்டணி வைத்து தடம் புரண்டு விட்ட வை.கோ. எப்படி 'போராளி' ஆவார்?

திருப்பூர்-1, ப. சங்கர்.

✉ 'டயானா மரணம் - பத்திரிகையாளர்கள் பின் தொடர்ந்தது சரியா?' என்ற கேள்விக்கு லேனா தமிழ்வாணன் சொன்ன கருத்துதான் மிகவும் பொருத்தமானதும் நியாயமானதும் ஆகும்.

சென்னை-4, கே. ராஜன்.

✉ இளவரசி டயானாவின் உயிருக்கு உலை வைக்கும் அளவுக்குச் செய்தி சேகரிக்க விரட்டிக் கொண்டு ஓடிய பத்திரிகைக்காரர்களைப் பாராட்ட முடியாது. 'நேருக்கு நேர்' வீரபாண்டியன், நியூஸ் டுடே ஆசிரியர் ஆகியோரின் கருத்துக்கள் நியாயமானவை.

பொறையாறு, கானா.

✉ நல்லாட்சி நடத்திடத் துணிந்து பல அதிரடி நடவடிக்கைகள் எடுத்து வரும் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு உருப்படியான பல ஆலோசனைகளை இவ்வாரத் தலையங்கம் (கலெக்டர்கள் மாநாடு; கருணாநிதியின் கோபம்!) வாரி வழங்கியிருந்தது. பத்திரிகைகளின் குரலுக்குச் செவி சாய்க்கும் தமிழக முதல்வர், கல்கியின் தலையங்கத்தினை ஒதுக்கி ஓரங்கட்டாமல் செயல்வடிவம் கொடுத்திட வேண்டுகிறேன்.

தோட்டக்குறிச்சி, இரா. வளையாபதி.

✉ அன்னை தெரசாவுக்கு 'மனிதாபிமானம்' கண்ணீர் மல்க மலர் வளையம் வைப்பதாக தீட்டப்பட்டிருந்த கருத்துப்படம் நெஞ்சை கனக்கச் செய்தது.

சூரனூர், என். காளிதாஸ்.

✉ கன்னிமாரா நூலகத்தின் நூற்றாண்டு விழாவும், பொது நூலக இயக்கத்தின் 25-ஆவது ஆண்டு விழாவும் கொண்டாடப்படும் இத் தருணத்தில், 60 ஆண்டுகளுக்கு முன்பு அகிலன் அவர்கள் எழுதிய 'எத்தனும் எழுத்தாளனும்' என்ற சிறுகதையைத் தேடியெடுத்துத் தேர்வு செய்து நீங்கள் வெளியிட்டிருந்தது, மிகப் பொருத்தமாக இருந்தது. அன்று அகிலன் எழுதியது பொது நூலகத் துறையின் இன்றைய நிலையை எடுத்துரைப்பதாகவே இருந்தது.

சிறுமுகை, ஜி. கதிரேசன்.

✉ ஜெயா சேகரின் 'மழை பொழியும் தருணங்களில்' சிறுகதை அழகான நடையுடன் படைக்கப்பட்டிருந்தது. மழையைப் பற்றியும் அதனால் உண்டாகும் ஆனந்த உணர்வுகளும் சிறுகதை முழுக்க இழையோடியிருந்தது.

நெய்வேலி-3, எஸ். இந்துமதி.

காதில் பூ

சுற்றுகிறார் நடராஜன்!

ரூ.20/- பரிசுக் கடிதம்

✉ ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஜெயலலிதா ஊழல் புரிந்துள்ளதாகக் கருணாநிதி சொன்னார். ஆனால் ரூ. 60 கோடிக்குத் தானே வழக்குப் போட்டிருக்கிறார்? இது ஜெயலலிதா மீது ஒரு அபாண்டத்தைக் கருணாநிதி சுமத்துவதைக் காட்டுகிறது" என்கிறார் நடராஜன். அசைக்க முடியாத ஆதாரங்களும் சாட்சியங்களும் கிடைக்கும் ஊழல் தொடர்பாகத் தானே வழக்குப் போட முடியும்? நடராஜனுக்கு இது தெரியும், ஆனாலும் ஊரார் காதில் பூ சுற்றுகிறார்.

நடராஜனைப் பற்றிக் "குமுதம்" மாலன் எழுத முற்பட்ட கட்டுரைத் தொடருக்கு நீதி மன்றத் தடை வாங்கியதேன் என்ற கேள்விக்கு "மாலன் பொய்யை உண்மை போல எழுத முயன்றார். நான் நீதிமன்றத்தில் தடை வாங்கினேன்" என்கிறார். ஆகவே, அவர் கருத்துப்படியே மாலன் கட்டுரையில் உண்மையின் சாயல் இருந்திருக்கிறது. மாலன் பச்சைப் பொய்யை எழுதினார் என்று அவரால் சொல்ல முடியவில்லை. உண்மையிலேயே மாலன் நடராஜனைப் பற்றி அவதூறு எழுதினார் என்றால் அவர் மீது மான நஷ்ட வழக்குப் போடலாமே. அதை விடுத்து, எழுதும் முன்னரே தடை வாங்கியது, நடராஜன் மீது பலத்த சந்தேகத்தையே மக்கள் மனத்தில் ஏற்படுத்தியுள்ளது.

சென்னை-14, பொ. வஜ்ரவேலு.



என்டைஸ் தீபாவளி கலெக்‌ஷன்.
ஒவ்வொன்றும் வண்ணத்தில் நெய்த
வாழ்த்துக் கவிதை. உங்களுக்காக.
உங்கள் குடும்பத்திற்காக.

10% தள்ளுபடி
15.09.97 முதல்
29.10.97 வரை

என்டைஸ் ®


சிறந்த ரகங்கள். சரியான விலை.

நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பொரேஷன்
தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி லிமிடெட்
ஒரு மத்திய அரசு நிறுவனம்

35 B. சோமசுந்தரம் மில்ஸ் ரோடு, கோயமுத்தூர் - 641 009.

SASI/695/97

THUS SPAKE THE PARAMACHARYA



காஞ்சி மாமுனிவர் ஸ்ரீ மஹா ஸ்வாமிகளின் அருளுரைகளை ஆங்கிலத்தில் தொகுத்து 'THUS SPAKE THE PARAMACHARYA' என்ற 1200 பக்கங்களிலான புத்தகம் வெளி வந்துள்ளது. நூலினை காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் வெளியிட்டு சிறப்பித்தார்கள். டால்மியாபுரம் மேல்நிலைப்பள்ளியின் ஓய்வு பெற்ற தலைமையாசிரியரும் ஸ்ரீமடத்தின் சார்பில் "வித்யா சேவா ரத்னா" விருது பெற்றவருமான திரு. A. கணபதிராமன் தொகுத்துள்ள இந்நூலில் ஸ்ரீ மஹா ஸ்வாமிகளின் அருளுரைகள், அரிய புகைப்படங்கள், வெளிநாட்டு அறிஞர்கள் சந்தித்த வினோத அனுபவங்கள் உட்பட பல்வேறு சிறப்பம்சங்கள் இடம் பெற்றுள்ளன. நூலின் விலை ரூ.400/- நூல் பெற விரும்புவோர் எஸ். பாலசுப்பிரமணியன், 4,மேலத்தெரு, கோபாலசமுத்திரம், நெல்லைமாவட்டம் 627 451. என்ற முகவரிக்கு ரூ.400/- M.O. அல்லது D.D. மூலம் அனுப்ப கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நூல் Regd. Post ல் அனுப்பி வைக்கப்படும்.

ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர

நவக்கிரஹ நாயகர்களுக்கு விசேஷ அர்ச்சனை

வாழ்க்கையில் நம் ஒவ்வொருவருக்கும் இன்பமும், துன்பமும் மாறிமாறி வருகின்றன இதற்கு காரணம் நவக்கிரஹங்களின் செயல்பாடுகளே ஆகும். நாம் ஒன்று நினைக்க ஏதோ ஒன்று நடக்கிறது. என் மகளின் திருமணம் தள்ளிக் கொண்டே போகிறது. உடல், மனசு சரியில்லை. சனிபகவான் என்னை படாதபாடு படுத்துகிறார் என்று பல பேர் முணுமுணுக்கிறார்கள்.

இவைகளில் இருந்து விடுபட்டு வாழ்க்கையில் மகிழ்ச்சி பெற தமிழ்நாட்டில் புகழ் பெற்ற நவக்கிரஹ ஸ்தலத்திலும், சனீஸ்வரர் கோவிலிலும் விசேஷ ஏகதின அர்ச்சனைக்கு நவம்பர் முதல் வாரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அர்ச்சனையில் பங்குபெற விரும்புபவர்கள் ரூ.160/- பதிவுக் கட்டணமாக செலுத்தவேண்டும். ஒவ்வொருவருக்கும் ஐம்பொன்னாலான நவக்கிரஹம் மற்றும் ஸ்ரீ சக்கரம் முன் பின் பொறிக்கப்பட்ட பூஜையில் வைக்கக் கூடிய பெரிய அளவிலான டாலரும் மற்றொரு அஷ்ட லெட்சுமி டாலரும் வழங்கப்படும். இதில் பங்கு பெற விரும்புகிறவர்கள் தங்கள் பெயர், ராசி, கோத்ரம், நட்சத்திரம் அர்ச்சனையின் நோக்கம் ஆகிய விபரங்களைக் குறிப்பிட்டு உடன் எஸ். பாலசுப்பிரமணியன், 4, மேலத்தெரு கோபாலசமுத்திரம், நெல்லை மாவட்டம் 627 451 என்ற முகவரிக்கு ரூ.160/- M.O. அல்லது D.D. மூலம் அனுப்பக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அர்ச்சனை முடிந்தவுடன் 2 டாலர்களும் பிரசாதமும் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

(21-ம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டும். அதை விட்டு விட்டு, உள்ளேயே இருந்து கொண்டு, ஏச்சுக்களையும், இழிவான செயல்களையும் தொடர்ந்து செய்து கொண்டிருந்தால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? ஏதோ காங்கிரஸ் என்றாலே தமிழ்நாட்டில் 'நான்தான்' என்று குதிக்கிறார். கட்சிக்குள் பேச வேண்டிய பேச்சுக்களை வெளியே பேசுவது, கட்சிக்குக் கெட்ட பெயரை உண்டாக்குவது போலச் செயல்படுவது; போட்டி அமைப்புகளை உருவாக்குவது, ஆகியவைகளே அவரின் வாடிக்கை. தமிழகத்தில் கொஞ்சம் தாழ்ந்த நிலையில் இருந்த கட்சி, சற்று பிரதான எதிர்க்கட்சியாக வளர்ந்து வரும் நிலையில், பெயரைக் கெடுக்கும் இவரைப் போன்றவர்களை எப்படிக் கட்சியில் வைத்துக் கொள்ள முடியும்?

கல்கி : உங்களை, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் என்பதையே ஒப்புக் கொள்ள மறுக்கிறாரே!

தங்கபாலு : அவரை யார் தலைவர் தேர்தலில் நிற்க வேண்டாம் என்று சொன்னது? நின்றால் தோற்று விடுவோமே என்ற பயத்தில் கோழையாகப் பின்வாங்கி விட்டார். இப்போது ஏதோ பிதற்றிக் கொண்டிருக்கிறார். உண்மையிலேயே கட்சி நலனில் அவருக்கு அக்கறை இருக்குமானால், தலைமையை ஏற்று, கட்சிப் பணி ஆற்றலாமே! அந்த மனப்பக்குவம் இல்லாத மனிதர் அவர். இப்போது இவரை நீக்கியதற்காகத் தமிழகம் முழுவதும் இருந்து பாராட்டுத் தந்திகள் வந்து கொண்டே இருக்கின்றன.

கல்கி : நீங்கள் கருணாநிதியையும், மூப்பனாரையும் அண்டி அரசியல் நடத்துவதாகவும் அதன் காரணமாக, சூழ்நிலைக் கைதியாக உள்ளதாகவும் வாழப்பாடி சொல்கிறாரே?

தங்கபாலு : மார்ச் 8-ம் தேதி அன்று நான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாள் முதல், இன்று வரை ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவராகச் செயல்பட்டு வருகிறேன். நான் யார் தயவிலும் இல்லை; யாரையும் நான் நாடிப் போனதுமில்லை. என்னையும் யாரும் பயன்படுத்தவில்லை.

கல்கி : நீங்கள் நடத்தும் பொறியியல் கல்லூரிக்காக புறம்போக்கு நிலங்களை வளைத்துப் போட்டிருக்கிறீர்கள். அதனால்தான் தி.மு.க. ஆட்சியைத் தீவிரமாக எதிர்க்கத் தயங்குகிறீர்கள் என்று சொல்கிறாரே வாழப்பாடி?

தங்கபாலு : இன்று கூட (18.9.97) பஸ் கட்டண உயர்வை எதிர்த்து நாங்கள் மறியல் நடத்தினோம். உண்மையாகவே கட்சியின் விதிகளுக்கு உட்பட்டுச் செயல்பட அவருக்கு விருப்பம் இருந்தால் எங்களுடன் வந்து மறியல் நடத்தியிருக்கலாமே! அதை விட்டு விட்டு, தனியாக ஏதோ போராட்டம் நடத்தியிருக்கிறார். தான்தோன்றித்தனமாய் செயல்படுவதில் அவருக்கு நிகர் அவர்தான். அதிலும் திருப்தி காண மாட்டார். மற்றவர்களை ஒப்புக் கொள்ளும் சகிப்புத்தன்மை கிடையாது. 'மூப்பனாரை எதிர்க்கிறேன்' என்று சொல்லியே ஜெயலலிதாவை அண்டிப் பிழைத்தவர்தான் இவர். என் மீது கூறப்படும் குற்றச்சாட்டுக்களுக்காக, பதில் லாவணி பாடி நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. பல்லவா அறக்கட்டளை வழக்கில் இவர் குற்றம் செய்திருக்கிறார் என்று ஐகோர்ட் சொன்னது. 1989-ல் தி.மு.க. அரசு நடவடிக்கை எடுத்தது. ஆனால் ஜெ. ஆட்சிக்கு வந்தபோது பிரச்னையை சரிசெய்து கொண்டார் வாழப்பாடி. என் மீது அவரும், அவரது துதிபாடிகளும் பொய்யான குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது அவரது ரத்தத்தில் ஊறியது. பொய்யான குற்றம்சாட்டுவது, கேஸ் போடுவது என்பதெல்லாம் அவரது தொழில். அதன் மூலம் பிளாக் மெயில் செய்வது அவரது பழக்கம். ஆம்! அவர் ஒரு பிளாக் மெயிலர்!

கல்கி : அ.தி.மு.க. வுடன் கூட்டு வைக்க வேண்டும் என்கிறாரே வாழப்பாடி?



தங்கபாலு : கூட்டு பற்றிச் சொல்ல இவர் யார்? இவருக்கு ஏதாவது நிலையான கொள்கை உண்டா? நேரத்துக்கு ஏற்றபடி மாறி, மாறிப் பேசுவார். என்னைப் பொறுத்தவரை அன்றும் சரி, இன்றும் சரி, கூட்டு என்பது மேலிடத்தால் முடிவு செய்யப்படுவதுதான். அதை ஏற்றுச் செயல்படுவது என்பது ஒவ்வொரு காங்கிரஸ் தொண்டனின் கடமை ஆகும்.

கல்கி : இப்படி தலைவர்கள் இணைந்து செயல்படாவிட்டால் தமிழகத்தில் காங்கிரஸ் வளர்வதெப்படி?

தங்கபாலு : தமிழ்நாட்டில் காங்கிரஸ் தொண்டர்கள் சிலிண்டர் ஆக்ஸிஜன் தேவையில்லாமல் எழுச்சியுடன்தான் இருக்கிறார்கள். வாழப்பாடி போன்ற சுயநலவாதிகளால்தான் கட்சிக்கு அவ்வப்போது நோய் உண்டாகிறது. இவரைத் தற்காலிகமாக வெளியேற்றியதன் மூலம், அந்த நோய்க்கு மருந்துவம் கண்டிருக்கிறோம். 2001ல் தமிழ்நாட்டில் காங்கிரஸை ஒரு பலமுள்ள கட்சியாக மாற்றிக் காட்டுவோம். இப்போது எங்கள் பிரயாணமும் அந்த லட்சியத்தை நோக்கியே!

பேட்டி : **ப்ரியன்**

நடித்துக் கொண்டே படித்தேன்!

"ஆரம்பத்தில் நான் கொஞ்சம் பயந்து கொண்டிருந்தேன். ஆனால் அப்புறம்தான் நடிப்பது ஒன்றும் கஷ்டமே இல்லை; ரொம்ப சுலபம் தான் என்று புரிந்தது" என்றார் அட்டையில் தோன்றும் வாகினி.

வாகினியைத் தெரியாதா! அப்படியென்றால்



உங்கள் வீட்டுக்கு கேபிள் டி.வி. கனெக்ஷன் இல்லை என்று அர்த்தம்.

இப்போது சன் டி.வி.யில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கும் ரமணி Vs ரமணி, தர்மயுத்தம், நிம்மதி உங்கள் சாய்ஸ் போன்ற முக்கியமான தொடர்களில் நடித்துக் கொண்டிருப்பவர் வாகினி.

"வாகினி! நீங்கள் சின்னத் திரைக்கு பிரவேசிக்கக் காரணமானவர் யார்?"

"என் தங்கை துர்காதான். அவள் மாடலிங் செய்வாள். ரேவதி-சுரேஷ்மேனன் தயாரித்த 'பாசமலர்கள்' படத்தில் நடித்திருக்கிறாள். அவளை ஒரு ஸ்கிரீன் டெஸ்டுக்கு நான் அழைத்துக் கொண்டு போனேன். எதிர்பாராவிதமாக என்னைப் பார்த்துவிட்டு 'நடிக்கிறாயா?' என்றார்கள். தயக்கத்துடன் சம்மதித்தேன்.

"மேல் மாடி காலி' தொடரில் நான் விவேக்கிற்கு ஜோடி. அப்புறம் மர்ம தேசம் தொடரில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. அதைத் தொடர்ந்து ரமணி Vs ரமணி. அதைப் பார்த்துவிட்டுத்தான் எஸ்.பி. முத்துராமன் சார் ஏவி.எம். தயாரிப்பான நிம்மதி உங்கள் சாய்ஸில் நடிக்கக் கூப்பிட்டார்."

வாகினி அடுத்து ஒப்புக் கொண்டுள்ள டி.வி. சீரியல் பாலகுமாரனின் பச்சை வயல் மனசு.

பிளஸ் டூ முடித்துள்ள வாகினி, இப்போது தபால் மூலம் பி.ஏ. (சைகாலஜி) படிக்கிறார். "முறைப்படி பரதம் கற்றுக் கொண்டிருக்கும் நான், பல நடனப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றிருக்கிறேன்" என்கிறார்.

"அடுத்த ஸ்டெப் சினிமாதானே?"

"அப்படியெல்லாம் இல்லை. டெலிவிஷன் தொடர்களில் நடிக்கப் பிடித்திருக்கிறது. சினிமா மீது அதிக நாட்டமும் இல்லை, வெறுப்பும் இல்லை. சினிமாவானாலும், டி.வி.யானாலும் கண்டிப்பாய் நோ கிளாமர்! மாடர்ன் உடைகளை அணிந்து நடிப்பேன். ஆனால் நோ எக்ஸ்போஸிங்! அது மட்டும் நிச்சயம்!"


எல்லோரும் சொல்வதுதானே!

"போகட்டும். ஷூட்டிங்கில் மறக்க முடியாத அனுபவம் ஏதாவது உண்டா வாகினி?"

"மேல் மாடி காலி ஷூட்டிங்கின்போது எனக்குப் பத்தாம் வகுப்பு இறுதிப் பரீட்சை. காலை ஒன்பது முதல் பனிரெண்டு வரை பரீட்சை. தேர்வு ஹாலுக்கே புரொடக்ஷன் கார் வந்து விடும். நேரே ஷூட்டிங். அதிகாலை வரை நடித்துவிட்டு, வீட்டுக்கு வந்து தூக்கம். மறுபடி காலையில் பரீட்சை. ஆனாலும், முன்னதாகவே பரீட்சைக்கு நன்றாகப் படித்து விட்டதால் 80% மார்க் வாங்கினேன். பிளஸ் ஒன், டூ படிக்கும்போதும் நடித்துக் கொண்டு தான் இருந்தேன்!"

— **கௌதம்**

அட்டை வண்ணப்படம், படம்: **யோகா**



✦ **வீட்டில் பயன்படுத்தி, மீதியான மாத்திரைகளை உடனுக்குடன் ஒன்றாகச் சேர்த்து வைத்து, ரெட் கிராஸ் போன்ற சமூக அமைப்புகளுக்கு அனுப்பி விடலாம்!**

துணுக்குகள்: ஆர்.பி. சாரதி; தோரணம்: மகேஷ்



என்ன பாக்கறீங்க?
என் மீசையை விட
கல்கி தீபாவளி மலரோட
அடர்த்தி ஜாஸ்தி! அற்புதமான
கதைகளென்ன, அமர்க்களமான
கட்டுரைகளென்ன, சூப்பர் கவிதைக
ளென்ன, ஏ கிளாஸ் கலர் ஃபோட்டோஸ்
என்ன... விழுந்து விழுந்து சிரிக்க முட்டை
முட்டையா ஜோக்ஸ் என்ன... இப்பவே
புக் பண்ணிட்டீங்கன்னா பின்னால
ஏமாற்றத்தைத் தவிர்க்கலாம்,
சொல்லிட்டேன்!

விலை
ரூ. **50/-**

மேலும் விவரங்களுக்கு உடனே உள்ளூர் கல்கி
ஏஜெண்டிடம் தொடர்பு கொள்ளுங்கள். அல்லது மேனேஜர்,
கல்கி, சென்னை - 97 என்ற முகவரிக்கு எழுதுங்கள்.



● உத்திரப்பிரதேசத்தின் அரசியல் குழப்பநிலை முடிவுக்கு வந்துவிட்டது. சபாநாயகரை மாற்ற வேண்டும் என்ற பி.எஸ்.பி. பிடிவாதத்தை விட்டுக் கொடுத்ததால் மாயாவதி பதவி விலகுவார், கல்யாண்சிங் பதவி ஏற்பார். பி.எஸ்.பி.யின் சட்டமன்ற உறுப்பினர்களைக் கட்சி மாற்றும் நடவடிக்கையில் பி.ஜே.பி. இறங்காது என்று உறுதியளித்ததுதான் காரணமாம்! (தன் கட்சி உறுப்பினர்கள் மீது அவ்வளவு நம்பிக்கை!) இந்த இரண்டு கட்சிகளுக்கும் பொது எதிரியான முலாயம்சிங் யாதவ் என்ன செய்வாரோ என்ற அச்சம்தான் உண்மைக் காரணம். ''அரசியலில் எங்களுக்கு எதிரிகளும் இல்லை, நண்பர்களும் இல்லை; எங்களுடைய நோக்கம் ஆட்சியைப் பிடிப்பதே" என்று பகிரங்கமாகவே கூறுபவர் கன்ஷிராம். அதே காரணம்தான் கடந்த சில ஆண்டுகளில் பலமுறை சேர்ந்து பிரிந்த இரு துருவங்களையும் இணைத்திருக்கிறது. ஆனாலும் இந்தக் கூட்டு அடுத்த ஆறு மாதங்களுக்குமேல் நீடிக்காது என்றே நம்பப்படுகிறது.



● நாடாளுமன்றத்தில் வாக்களித்தது குறித்து எந்த நீதிமன்றத்திலும் விசாரிக்க முடியாது என்று வாதிட்ட நரசிம்மராவ் அண்ட் கோ.வுக்கு தில்லி உயர் நீதி மன்றம் பதிலடி கொடுத்து விட்டது. நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் தயக்கமின்றிப் பேசுவதற்கு வழி செய்யத்தான் அரசியலமைப் பின் 105 ஆவது பிரிவு இருக்கிறது என்று கூறிய நீதிமன்றம், சி.பி.ஐ. அமைப்பையும் கண்டித்திருக்கிறது. ஜே.எம்.எம். எம்.பிக்களுக்கு லஞ்சம் தரப்பட்டது என்று அப்ரூவராக மாறியவரின் வாக்குமூலத்தைச் சுட்டிக்காட்டி, சீதாராம் கேசரியின் (அன்றைய காங்கிரஸ் பொருளாளர்) மீது ஏன் குற்றம் சாட்டப்படவில்லை என்று சி.பி.ஐயைக் கேட்டிருக்கிறது நீதிமன்றம். கேசரி மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டால் ஐக்கிய முன்னணி அரசுக்குத் தலைவலி துவங்கும்.

● ஐக்கிய முன்னணிக்கு உள்ளுக்குள்ளேயே அத்தனை பிரச்னைகள். பெட்ரோலியப் பொருட்கள் விலை உயர்வில் இடதுசாரிகளுக்கு வருத்தம்; அரசு ஊழியர்களுக்கான சம்பள உயர்வில் சிதம்பரத்துக்குக் கோபம்; தி.மு.க.வுக்கு மாறன்தான் முக்கியம்; லாலுபிரசாத்தின் கட்சியினர் மந்திரிசபையில் தொடர்வதில் சரத்யாதவுக்கு கோபம். இப்போது தேவேகவுடா! கேசரியின் மீது கோபத்தால் குமைந்து கொண்டிருக்கும் தேவே கவுடா யாத்திரை கிளம்பப் போகிறாராம். தாம் பதவி விலக நேர்ந்ததற்காக மக்களிடம் நியாயம் கேட்பதுதான் யாத்திரையின் முக்கிய நோக்கமாக இருக்கும். இதில் கேசரிக்குக் கோபம் வருகிறாற்போல ஏதாவது

பதினெட்டாம் நூற்றாண்டில் பாரதியார்!

செய்துவிட்டாரோ - தலைவலியோடு திருகு வலியும் சேரப்போகிறது ஐக்கிய முன்னணிக்கு!

● தில்லியில் நடக்கும் பத்திரிகையாளர் கூட்டங்களில் சில நேரங்களில் பத்திரிகையாளர் அல்லாதவரும் கூட்டத்தில் நுழைந்து விடுவது உண்டு. அப்படி ஒரு சம்பவம்: ஆசிய பசிபிக் பிராந்திய நாடுகளின் மனித உரிமைப் பாதுகாப்பு அமைப்புகளின் மாநாடு தில்லியில் மூன்று நாட்கள் நடைபெற்றது. ஐந்து நட்சத்திர அசோகா ஓட்டலில் இறுதி நாளன்று தேசிய மனித உரிமைக் கமிஷனின் தலைவர் பத்திரிகையாளர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தார். அப்போது முன்னாள் ராணுவ அதிகாரி ஒருவர் தன் மகன் ராணுவ மருத்துவமனையில் (மகனும் ஒரு அதிகாரி) முறையான சிகிச்சை தரப்படாமல் இறந்ததாகவும், அதற்காக மனித உரிமைக் கமிஷனிடம் நீதி கோரி அனுப்பிய மனு கேட்பாரற்றுப் போனது என்றும் முறையிட, சரியான பலன் கிடைத்தது. மறுநாள் அலுவலகத்துக்கு வந்து தன்னைச் சந்திக்குமாறு கூறினார் நீதிபதி வெங்கடாச்சலய்யா. தொலைக்காட்சி காமிராக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு விவரங்களைக் கேட்டனர். தனிநபர் பிரச்னைகளுக்காகத் தங்களுடைய நேரத்தைக் கெடுத்து விட்டதாக பத்திரிகையாளர் யாரும் கருதவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

என்.வி.என். சோமு



● அமைச்சர்கள் முறைதவறி நடந்து விடக்கூடாது என்பதில் குறியாக இருக்கிறார் பிரதமர். இதில் ஓரளவுக்கு வெற்றியும் பெற்று விடுவார் என்று தோன்றுகிறது. சமீபத்திய உதாரணம்: பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் என்.வி.என் சோமுவுக்கு விழுந்த குட்டு. பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான பல இடங்கள் நாடுமுழுதும் உள்ளன. இவற்றில் சிலவற்றை நீண்டகால வாடகைக்கு தனியார் வசம் ஒப்படைப்பதும் உண்டு. திருச்சியில் 166 ஏக்கர் நிலத்தை தனியார் மருத்துவக் கல்லூரிக்கு வாடகைக்குவிட என்.வி.என் சோமு வலியுறுத்தியிருக்கிறார். அமைச்சர்களுக்கெதிரான தகவலை எப்போதடா வெளியிடலாம் என்று காத்திருந்த அதிகாரிகள் இதை பத்திரிகைக்குத் தெரிவித்து விட, பிரதமர் விழித்துக் கொண்டார். பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான எந்த இடத்தையும் அமைச்சரவை ஒப்புதல் இன்றி இனி வாடகைக்கு விடக்கூடாது என்று பிரதமர் அலுவலகம் உத்தரவிட்டு விட்டது. இது மட்டுமல்ல. முந்தைய ஆட்சிகளில் அரசியல் நிர்ப்பந்தங்களால் வாடகைக்கு விடப்பட்ட இடங்களைத் திரும்பப் பெறும் நடவடிக்கையில் இறங்கியிருக்கிறது பாதுகாப்புத்துறை.

● அம்மா பேச ஆரம்பிச்சுட்டாங்க! அட தமிழ்நாட்டு அம்மாவச் சொல்லலீங்க. பீஹார் அம்மா. பத்து நிமிடங்களில் எண்ணி எண்ணிப் பத்து வார்த்தைகள் பேசிய பீஹார் முதல்வர் ராப்ரி தேவி, தில்லி வந்து போனார். குடியரசுத் தலைவர், பிரதமர் ஆகியோரைச் சந்தித்தார். பீஹாருக்கு நிதி ஒதுக்கீடு பற்றிப் பேச(!) திட்டக் கமிஷனுக்கும் சென்று வந்தார். அதற்கப்புறம் அரை மணி நேரம் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பதிலளித்தார் என்பதுதான் சிறப்பு. "நான் தினமும் சிறையில் இருக்கும் கணவரைச் சந்திக்கச் செல்கிறேன். ஒரு முதல்வராக அல்ல. மனைவியாக" என்றார் அவர்.

● பாரதியாரின் காலம் எது? பதினெட்டாம் நூற்றாண்டு. யாரும் அதிர்ச்சியடைய வேண்டாம். தமிழ் தெரியாத யாரோ ஒருவர் கூறியதல்ல. தமிழக நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் பேசியபோது கூறினார். ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே என்று சுதந்தரம் அடைவதற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னரே எங்கள் பாரதி பாடி விட்டான். அது மட்டு மல்ல. தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்று பாரதி பாடியதை யும்(!) கூறி உரையை முடித்தார் அதே எம்.பி. யார் என்று கேட்கிறீர்களா? அவர் ஒரு த.மா.கா. எம்.பின்னு நான் சொல்லப்போக ஆவேசத்தோடு அவதாரம் எடுத்து விட்டால்? தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பைப் பார்த்தவர்களிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.

தில்லியிலிருந்து:
— புதியவன்



சிகைக்காயில், உலர்ந்த எலுமிச்சைத் தோல், காய்ந்த செம்பருத்திப்பூ, மருதாணி, தவனம், வெந்தயம், பயறு சேர்த்து அரைப்பது தலை முடிக்கு நல்லது.

வெறும் நிஜம்

சித்ரன்



என்ன இருந்தாலும் பாலுவை அப்படி அறைந்திருக்கக் கூடாதென்று இப்போது தோன்றுகிறது. அந்த நிமிடத்தில் கொதித்த கோபத்தில் அவனை அறைவதைத் தவிர வேறெதுவும் செய்திருக்கவும் முடியாதென்றும் தோன்றியது. வாசலில் அத்தனை பேருக்கு முன்னால்தான் அது நடந்தது. அப்பாவை அவன் மோசமான வார்த்தைகளால் திட்டும் போது பின்னே பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியுமா?

திட்டினவன் வேறு யாராவதாக இருந்திருந்தால் நிச்சயம் கைகால் எல்லாம் எடுத்திருப்பேன். பாலு என் அண்ணன்காரன் என்பதால் வெறும் அறையோடு தப்பித்தான். ராஸ்கல். மேலும் அவன் நிதானத்திலா இருந்தான்? ரோட்டில் கூடியிருந்த கும்பலுக்கு நடுவே அவன் வாயும் காலும் நிலையில்லாமல் தடுமாறிக் கொண்டிருந்தன. சாயங்காலமே ஊற்றி விட்டு வந்துவிட்டான் போல.

வழக்கமாய் தண்ணி போட்டுவிட்டு அவன் பண்ணுகிற ரகளைகள் எல்லோருக்கும் பழகி விட்டதுதான். அது போலத்தான் இன்றும். மத்தியானம் டீசன்டாய்த்தான் வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினான். திரும்பி வரும்போது நடந்து வந்தான். உடை, தலை எல்லாம் கலைந்திருந்தது. வண்டி இல்லை. வந்தவன் வீட்டுக்குள் வராமல் நடுரோட்டில் சம்மணம் போட்டு உட்கார்ந்தான். அவன் நிதானத்திலில்லை என்று புரிந்து விட்டாலும் ரோட்டில் உட்கார்ந்தது வழக்கத்துக்கு மாறாய் இருந்தது. சைக்கிளில் ஒருவன் அவனைத் தவிர்த்து வளைத்து விலகிக் கடந்து போனான். எதிர் வீட்டில் யமுனாவின் அம்மா பார்வையில் கேள்விகளோடு எட்டிப் பார்த்தான்.

நான் எழுந்து வாசலுக்குப் போனேன். அவனை அப்படியே மிதித்து கூழாக்கி விட்டால் என்ன என்று ஆத்திரம் வந்தது. டி.வி. பார்த்துக் கொண்டிருந்த அப்பா எழுந்து வெளியே வந்தார். பின்னால் அம்மாவும் அண்ணியும். என்றைக்கும் இல்லாத கலவரம் இன்று அண்ணியின் முகத்தில் இருப்பதாய்ப்பட்டது.

"தெருவுல ரகள பண்ணாதே... உள்ள வா!" என்றார் அப்பா.

பாலு சிவப்பேறிய கண்களோடு உர்ரென்று நிமிர்ந்து பார்த்தான்.

"பண்ணுவேன். இன்னும் பண்ணுவேன். எவனுக்குய்யா எம்மேல அக்கற இருக்கு? என்ன கவனிச்சுக்கறதுக்கு எவன் இருக்கான்?"

லேசாய் கூட்டம் கூடியதில் அவன் குரல் இன்னும் உயர்ந்தது.

"நான் செத்தாப் போதும் நிம்மதின்னு தான எல்லாரும் இருக்கீங்க?" மெதுவாய் எழுந்தான். கால்கள் பின்னியது.

அப்பா அவனை முறைத்துப் பார்த்தார். கோபத்தில் காதருகில் தாடை அசைந்தது.

"இன்னா மொறைக்கிற. அப்பங்காரா..." என்றான். பிற்சேர்க்கையாய் காது கூசும் வார்த்தையொன்று.

குபீரென்று எனக்குள் உயர்ந்த ஆத்திரத்தில் அவனை நோக்கிப் பாய்ந்தேன். அவன் சட்டையைக் கொத்தாய்ப் பிடித்துத் தூக்கி வேகமாய் ஒரு அறை விட்டேன்.

என்ன ஒரு அறை அது. யாரும் தடுக்காமலிருந்திருந்தால் இன்று அவன் கிழிந்திருப்பான். விளக்குக் கம்



பத்தினருகே போய் விழுந்த அவனை யாரோ தூக்கி விட்டார்கள். மறுபடி அடிக்க ஓங்கின என் கையையும் யாரோ வளைத்துப் பிடித்தார்கள். 'விட்டுடுப்பா...' என்றார் மூன்றாவது வீட்டு சண்முகண்ணா.

"டாய்ய்ய்" என்று குமுறலாய்க் கத்தினான் பாலு. குரலில் மிக இயலாமை இருந்தது. நான் பேசாமல் திரும்பி வாசற்படி ஏறும் போது அண்ணி கண்களைத் துடைத்தபடி சமையலறைக்குள் போவதைப் பார்த்தேன். லேசாய் பகீரென்றது. அடக் கடவுளே... அண்ணிக்கு எதிரிலேயே அவனை அடித்திருக்கிறேன். அத்தனை பேருக்கு முன்னால். ச்சே... கொஞ்சம் பொறுமையாய் இருந்திருக்கலாம்.

அப்பா எதுவுமே பேசாமல் உள்ளே போய் எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்துவிட்டு கட்டிலில் படுத்து விட்டார். அம்மா, "எல்லாம் நம்ம தலையெழுத்து..." என்று ஆரம்பித்து புலம்பல்களோடேயே சமைய லறைக்குள் புகுந்தாள்.

வ ா ச லி ன்

★ பால் பாயிண்ட் பேனா, ரீஃபில் காலியானால், பஞ்சை முனையில் வைத்து, திரித்து இயர் பட்ஸாக உபயோகப்படுத்தலாம்!



கும்பல் கலையும் அரவத்தைத் தொடர்ந்து பாலுவின் கத்தல் சுருதி குறைந்து அடங்கியது. மீண்டும் கெட்டவார்த்தைகள் கேட்டன. பிறகு மிக அமைதியாகி விட்டது. இதோ கடந்த இரண்டு மணி நேரமாக இதே மயான அமைதி. இப்படியே முன்னறையிலேயே சிலை மாதிரி உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்.

வீதி இருட்டின பிறகும் பாலு வீட்டுக்குள் வரக்காணோம். யாரும் போய்ப் பார்க்கவில்லை. சண்முகம் மட்டும் உள்ளே வந்து அப்பாவைப் பார்த்துப் போனார். அக்கம் பக்கத்தவர்கள் வீட்டுக்கு வருவது நின்றுபோய் இவரின் வரவு மட்டுமே இப்போதைக்கு மீதமிருக்கிறது.

சண்முகண்ணா திரும்பிப் போகும்போது, "அவன் எங்கயோ ஆடிட்டே போனான். நைட்டு வீட்டுக்கு வரமாட்டான்னு நினைக்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனார். பாலுவைப் பற்றித்தான் சொல்கிறார். பாலுவின் நடவடிக்கைகள் பற்றித் துல்லியமாகத் தீர்மானித்து விட முடிகிறது எல்லோராலும். கடந்த இரண்டு மூன்று வருடங்களாக அப்படித்தானே இருக்கிறான் அவனும்?

இப்போதெல்லாம் எது நடந்தாலும் அவ்வளவாய் அலட்டிக் கொள்ளாத மனோபாவம் எல்லோருக்கும் வந்து விட்டது. வருத்தங்கள் இல்லாமலில்லை. ஆனால் மரத்து விட்டது. நிறைய பார்த்தாயிற்று. நிறைய கேட்டாயிற்று. பாலுவால் பட்ட அவமானங்கள், சங்கடங்கள் எல்லாம் இப்போது பழகி விட்டது. அவனைத் திருத்த முடியாதென்று மொத்தமாய் முடிவு கட்டி வெகு நாளாயிற்று.

ஆனால் அண்ணிக்கு எப்படியிருக்கும் என்று தெரியவில்லை. வெறும் மௌனம் தவிர எதுவும் கிடையாது அண்ணியிடம். பேசுவதும் சிரிப்பதும் ரொம்பக் குறைவு. பாலுவைப் புருஷனாய் அடைந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. கல்யாணமானாலாவது திருந்துவான் என்று முடிவு பண்ணித்தான் செய்தார்கள். அத்தைப் பெண்தான். நினைத்தபடி ஆறு மாதங்கள் ஒழுங்காய்த்தான் இருந்தான். அண்ணி சந்தோஷமாய் இருந்தது அந்த ஆறு மாதங்கள் மட்டுமாகத்தான் இருக்கும்.

நானும் நிறைய யோசித்துப் பார்த்து விட்டேன். அவனுக்கு என்ன குறையென்று தெரியவில்லை. சொல்லப் போனால் எதுவும் கிடையாது. திமிர் மட்டும்தான். எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் அவன் இருப்பை ஸ்தாபிக்க அவன் கையாள்கிற வழிமுறைகள் கீழ்த்தரமாய் இருக்கிறது. உயர்ந்த குரலில் பேசுவது, முரட்டுத்தனம், அடுத்தவர் உணர்வை மதிக்கத் தெரியாத ஜடம். இவன் எதற்கு தனக்கு அண்ணன்காரனாய் வாய்த்தான் என்று எத்தனையோ முறை நொந்ததுண்டு. இன்று நொந்ததைப் போலவே.

போன வாரம் பாலு வேலை செய்கிற கம்பெனியின் மேனேஜர் வந்து போனார். சும்மா வரவில்லை. சில புகார்களையும் சுமந்து கொண்டுதான். அவன் ஒழுங்காய் வேலைக்கு வருவதில்லையாம். வேலை செய்கிற இடத்தில் ஒருவனை அடித்திருக்கிறான். அநாவசியப் பிரச்னைதான் அதுவும். "வாரக் கணக்குல அவரு வேலைக்கு வர்றதில்ல. உங்கள எனக்குப் பர்சனலாத் தெரியுங்கறதுனாலதான் நானே நேர்ல வந்தேன். அவரை ஒழுங்கா வரச் சொல்லுங்க. அட்வைஸ் பண்ணுங்க. அவரை பர்மனெண்டா கூட ஆக்கிடறோம்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

தனது மகன் பற்றி யார் அபிப்பிராயப்பட்டாலும் அப்பா பேசாமல் கேட்டுக் கொண்டுதானிருக்கிறார். பாலு செய்கிற செயல்கள் எல்லாம் அவரின் கட்டுப்பாட்டுக்குள் வருகிறவைகளாய் இல்லை. ரொம்ப கவலைப்பட்டு சமீப நாட்களாய் வாட்டம் அதிகமான முகபாவத்துடன்தான் வளைய வந்து கொண்டிருக்கிறார்.

அவனுக்கு அதைப் பற்றித் துளியும் கவலைகள் இல்லாமலிருந்தது. தினம் காலையில் எழுந்து எங்கே புறப்பட்டுப் போகிறான் என்று புலப்படவில்லை. சண்முகண்ணாதான் "அவன் பஸ் ஸ்டாண்ட்ல லாட்டரிக் கடைல பழிகிடக்கிறான். சகவாசம் ஒண்ணும் சரியில்லை. அதவிட்டா அப்புறம் ப்ரெட்டி

''அப்போ, நான் சொன்ன அந்த மதுரைக்காரங்களைப் பொண்ணு பார்க்க வரச் சொல்லட்டுங்களா?''

''அந்த இடம் நமக்கு சரிப்பட்டு வராதுப்பா. பொண்ணு பார்க்கற நிகழ்ச்சிக்கே வீடியோ எடுக்கணும்னு சொல்றவங்க, நாளைக்கு வேற எதைத்தான் கேக்கமாட்டாங்க!''

— டி.என். பாலகிருஷ்ணன்



ஒயின்ஸ் பக்கம் பாக்கலாம் அவனை...'' என்றார் ஒருநாள்.

எந்தப் பொறுப்புகளிலும் கட்டிவைக்க முடியாத பேர்வழியாகத்தான் இருக்கிறான் அவனும். அண்ணியின் நகைகளை விற்று யமஹா வாங்கினான். அதன் பிறகு அவன் ஆட்டம் ரொம்பவே அதிகமாகி விட்டது. குடித்துவிட்டு வண்டி ஓட்டி இரண்டு தடவைகள் காலை உடைத்துக் கொண்டான். காலில் பெரிதாய் ப்ளாஸ்திரி போட்டுக் கிடந்த அந்த ஒரு மாதம் அவனைப் போல் நல்ல பிள்ளை யாருமே கிடையாது என்கிற படிதான் இருந்தான். அவன் மேல் லேசாக எல்லோருக்கும் நம்பிக்கை கூட வந்தது. பேண்டேஜ் பிரித்தபோது கூடவே அந்த நம்பிக்கையையும் அக்குவேறாய்ப் பிரித்துப் போட்டான்.

அவன் காலை நிரந்தரமாய் உடைத்துப் போட்டால்தான் திருந்துவான் என்று தோன்றியது.



''இதப்பாரு, நீ பெரிய நடிகை ஆயிட்டே; டைவோர்ஸ் கேட்குறே, கொடுத்திடறேன். அதுக்காக, 'விவாகரத்துகள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன'ன்னு பிளேட்டை மாத்தாதே! நல்லால்லே!''

– சீர்காழி வி. ரேவதி

அம்மாவும் அண்ணியும் சமையலறைக்குள்தான் இருக்கிறார்களா என்று சந்தேகமாய் இருந்தது. வெளியே வரக் காணோம். சின்னச் சின்னப் பாத்திரச் சப்தங்கள் சந்தேகத்தைத் தீர்த்தது.

ஃபோன் அடித்தது. எடுத்தேன். மறுமுனையில் பாலுவின் ஃப்ரெண்ட் ப்ரஸன்னா பேசினான்.

"சொல்லுங்க" என்றேன் வெறுப்பாய்.

"உங்க பைக் இங்க பரமு கடைல இருக்குது. சுமதின்னு ஸ்டிக்கர் ஒட்டிருக்குமே அதானே. பாலு நிறுத்திட்டுப் போயிருக்கான். முன்னாடி ஹெட்லைட் உடைஞ்சிருக்கு. பெட்ரோல் டேங்க் ஒடுங்கியிருக்கு. அப்புறம் சின்னச் சின்ன டேமேஜ். ஏதோ ஆக்ஸிடெண்ட் ஆயிருக்கும் போல. சாவி பரமுகிட்ட இருக்கு. வந்து எடுத்துட்டுப் போயிரு..." என்றான்.

கேட்பதற்குக் கடுப்பாய் இருந்தது.

"பாலு வந்தானா?" என்றேன்.

"தெரியலை. நான் பாக்கல..." என்றான்.

அவன் எங்கே போய் தொலைந்திருந்தாலென்ன என்று தோன்றியது. போனை வைத்து விட்டு யோசித்தேன்.

தண்ணீர் குடிக்க வேண்டும் போல் இருந்தது. சமையலறைப் பக்கம் போகத் தயக்கமாயிருந்தது. அண்ணி முகத்தில் எப்படி முழிப்பது என்று தெரியவில்லை. பாலுவை அறைவதை அண்ணி பார்த்துக் கொண்டிருந்தது என்கிற விஷயத்தின் உறுத்தல். அண்ணிக்கு எப்படி இருந்திருக்கும். தன் முகத்தில் அறை விழுந்த மாதிரியா? அண்ணி கண்டிப்பாக அழுதிருக்கும் என்பது மட்டும் புரிந்தது. அழுகையைத் தவிர வேறென்ன இந்த இரண்டு வருடங்களாய் இருந்தது அண்ணிக்கு.

உள்ளறைக்குப் போய் அப்பாவை எழுப்பினேன். மிகக் களைத்துப் படுத்திருந்தார். மனத்தின் களைப்பு.

"பரமு கடைல வண்டி நிக்குதாம். போய் எடுத்துட்டு வர்றேன்" என்றேன். அப்பா தலையை மட்டும் ஆட்டினார்.

மெதுவாய் நகர்ந்து சமையலறையில் எட்டிப் பார்த்தேன். அண்ணி மட்டும் இருந்தது. அம்மா பின்பக்கம் இருக்கலாம். என்னைப் பார்த்ததும் அண்ணி மெதுவாய் சிரித்தது. எல்லா வேதனைகளையும் மறைத்து மூடி போட்ட சிரிப்பா அது? கண்கள் லேசாய் சிவந்திருந்தன.

தம்ளரை எடுத்து ஃபில்டரிலிருந்து தண்ணீர் பிடித்துக் குடித்தேன்.

"அம்மா எங்க?" என்றேன். எதையாவது பேச வேண்டும் போல் இருந்தது.

"பின்னாடி இருக்காங்க..."

ஒருசில விநாடிகள் கழிந்து மிகத் தயக்கமாய்ச் சொன்னேன்.

"இன்னிக்கு அண்ணன் நடந்துகிட்டது கொஞ்சம் அதிகம்தான் அண்ணி! ரொம்ப ஆத்திரம் வந்திடுச்சு. அதான்... கை வெச்சுட்டேன்... 'ஸாரி...'" என்றேன்.

ஒரு மௌன இடைவெளிக்குப் பிறகு அண்ணி மெதுவாய் சொன்னது:

"எதிர்பார்த்ததுதான்..."

சொல்லும்போது குரல் மிக உடைந்திருந்தது.



இளமையான தோற்றத்திற்கு முக்கிய ஆதரவு கொடுப்பது ஹேர் ஸ்டைல் தான்! என்னதான் குறைவான வயது; அழகான முகம் என்றாலும் முடி அலைகள் பின்னுக்குச் சென்றவாறு இருந்தால் சில வருடங்களாவது ஒருவரது வயதை அது கூட்டியே காண்பிக்கும்.

ஒரு மனிதத் தலையில் சராசரியாக ஒரு லட்சம் மயிரிழைகள் இருக்கின்றன. இவற்றில் பதிமூன்று சதவீதம் மாறி மாறி ஓய்வு நிலையில் இருக்கின்றன. மிச்சம் உள்ளவைதான் சுறுசுறுப்பாகச் செயல்படுகின்றன – அதாவது வளர்கின்றன அல்லது வீழ்கின்றன. ஒரு நாளைக்கு சுமார் நூறு மயிரிழைகள்


என்றும் இளமையாய் இருப்பது எப்படி?

என்கிற வீதத்தில் கூட முதுமைக் காலத்தில் (அல்லது நமக்குப் போதாத காலத்தில்) இழக்கும்படி நேரிடலாம்.

முடி வளர்ச்சியின் முக்கிய எதிரி பொடுகு. இதில் இரண்டு வகைகள் உண்டு. சும்மா தலைமுடியை தட்டிவிட்டுக் கொண்டாலே, சின்னச் சின்ன வெண்மையான தூள்கள் சிலருக்கு அனாயாசமாக உதிரும். இது சாதாரண வகைப் பொடுகு. மண்டையோட்டின் வெளிப்புறத்தில் காய்ந்து போன பகுதிதான் இந்தப் பொடுகு. இது ஏற்பட என்ன காரணம்? இன்னமும் இது சரியாகக் கண்டு பிடிக்கப்படவில்லை!

மிகச் சிறியதாக, பாட்டில் வடிவத்தில் உள்ள 'பிடெய்ரோஸ்போரம் ஓவிலே' என்ற கிருமிகள் தான் பொடுகுக்குக் காரணம் என்று பல வருடங்களாக நம்பினார்கள் விஞ்ஞானிகள். ஆனால் பொடுகு இல்லாத தலைகளிலும் கூட இந்தக் கிருமிகள் இருப்பது உறுதி செய்யப்பட, குற்றவாளிப் பட்டியலிலிருந்து அதை நீக்கி விட்டார்கள்!

நாம் மிகவும் கவனத்துடன் இருக்க வேண்டிய இரண்டாவது வகை தீவிரவாதிப் பொடுகும் உண்டு. மயிர்க்காலில் உள்ள செபேஷியஸ் சுரப்பிகள். இவை பாதிக்கப்பட்டால் அழுக்குகள் வெளியேறும். அந்த அழுக்குகள் மண்டையோட்டின் மீது தங்கினால் அரிப்பும் வலியும் ஏற்படும். நாளடைவில் தலையில் வழுக்கைத் தீவுகள் உண்டாகும். இந்த வகைப் பொடுகினால் ஏற்படும் நோய்க்கு 'ஸெபாரியா டெல்மடிடிஸ்' என்று



✦ எரிவது விளக்கல்ல (வயிறு!) சுற்றுவது விசிறியல்ல (தலை!) என்று

பெயர் சூட்டி மகிழ்கிறார்கள் மருத்துவர்கள்.

வாரம் ஒருமுறையோ அல்லது இருமுறையோ தலையில் தேங்காய் அல்லது நல்லெண்ணெயைத் தேய்த்துக் கொண்டு கால் மணி நேரம் ஊறி விட்டு சீயக்காய் மூலம் குளியலில் அந்த எண்ணெயை நீக்கிக் கொள்வதில், தலைமுடி, உடல் இரண்டுக்கும் ஆரோக்கியம் என்பதில் பிடிவாதமாக இருக்கிறார்கள் மரபு வழிக்காரர்கள். "இது வேஸ்ட்" என்று எண்ணெய்க் குளியலை புறம் ஒதுக்கும் நவீனவாதிகள் கூட இதனால் தீமை உண்டு என்று கூறுவதில்லை.

'முடி'யும் இளமையாக இருக்க!

என்றாலும், ஷாம்பூ இன்று பல வீடுகளில் அத்தியாவசியப் பொருளாகி விட்டது. வாரத்திற்கொருமுறை இதை தேய்த்துக் கொண்டால் போதும். பொடுகுத் தொல்லை என்றால் வாரம் இருமுறை. அடிக்கடி ஷாம்பூவை மாற்றிக் கொண்டிருப்பது நல்லதல்ல. ஷாம்பூவில் உள்ள ஏ.ஓ.எஸ். என்ற ரசாயனப் பொருள்தான் தலைமயிரைச் சுத்தம் செய்வதில் முக்கியப் பங்குவகிக்கிறது.

மயிர்க்காலை ஊடுருவிச் சென்று அங்குள்ள கிருமிகளை தங்கள் தயாரிப்பு கொன்றுவிடும் என்றெல்லாம் சில ஷாம்பூ தயாரிப்பு நிறுவனங்கள் கூறுவது மிகவும் மிகைப்படுத்தப்பட்டவை. ஆனால் பொடுகுகளின் படிமங்களைக் கரைக்க ஷாம்பூ உதவுகிறது என்பது உண்மையே.

"கண்டிஷனரோடு கூடியது" என்று சில வகை ஷாம்பூகளில் குறிப்பிட்டிருப்பார்கள். நமது மயிர்க்கால்களில் ஸ்டாடிக் மின்சக்தி உண்டு. இதனால் ஷாம்பூ குளியலுக்குப் பிறகு மயிர்கள் குத்திட்டு நிற்கும். இந்த மின்சக்தியை நீக்கி தலையைப் படிய வைக்க உதவுவதுதான் கண்டிஷனரின் வேலை.

அழகான, ஆரோக்கியமான தலைமுடிக்கு ஷாம்பூவை விட நாம் அதிகம் நம்பவேண்டிய ஒன்று உண்டு. அதுதான் சரியான, சீரான உணவுப் பழக்கம். போதிய இரும்புச் சத்து, மற்ற ஊட்டச் சத்துக்கள், அமினோ ஆஸிட் சத்து ஆகியவை நம் உணவில் இருக்க வேண்டும். இல்லையானால் தலைமுடி உதிரும்; இருக்கும் தலைமுடியும் பொலிவிழந்து போய் தோற்றமளிக்கும்.

இளமைப் போட்டி – 7

'**ம**யிர்நீத்தால் உயிர்நீக்கும்' படத்தில் சிவாஜி நடித்திருக்கிறார். அதில் அவருக்கு ஹீரோயின் யார்?

பன்னிரண்டாவது வார முடிவில் கூப்பன் வரும். பன்னிரண்டு விடைகளையும் அதில் எழுதி அனுப்புங்கள்.

பரிசு?

அது இல்லாமலா?


வீட்டில் ஆளுக்கொரு டூத் பிரஷ் இருக்கிறதல்லவா? அதுபோல் ஆளுக்கொரு சீப்பு வைத்திருப்பது நல்லது. பொடுகு மற்றும் பேன் ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவாமலிருக்க இது உதவும்.

முடி உதிர்ந்தாலே உயிரை விடும் கவரிமான் ஜாதியாக நாம் இருக்க வேண்டும் என்பதில்லை. அதே சமயம் "தலைமயிர்தானே? போனாப் போகுது" என்று அலட்சியமாக இருக்க வேண்டாம். காரணம் உங்களிடமிருந்து நீங்குவது மயிரிழைகள் மட்டும் அல்ல; இளமைத் தோற்றமும் தான்!

- அருண்சரண்யா

ஸ்விட்ச் போர்ட் அருகே எழுதி வைக்கலாம். தமாஷாகவும் இருக்கும். உபயோகமாகவும் இருக்கும்!

✦ சாம்பாரில் உப்பு அதிகமாகி விட்டதா? வேக வைத்த உருளைக் கிழங்கு ஒன்றிரண்டை அதில் போடுங்கள். கூடுதல் உப்பு போயே போச்!



கொல்லம் என்கிற ஊர்ல இருந்தப்பதான் நான் ஊருக்குப் போக வேண்டிய அவசியம் வந்தது. எங்க அண்ணனுக்கு உடம்பு சரியில்லைன்னு லெட்டர் வந்து, அதை கம்பெனிதான் எங்கிட்ட கொடுத்து 'போயிட்டு வா'ன்னு சொன்னாங்க. அந்த லெட்டர் ஒரு வாரத்துக்கு முன்னாடியே கம்பெனிக்கு வந்தாச்சு. ஆனா எங்கிட்ட லேட்டாதான் குடுத்தாங்க. கேட்டா, 'அய்யப்பன் டிராமா முடிஞ்சப்புறம் ஊருக்கு அனுப்பலாம்னுதான் அப்பவே குடுக்கல்லே'ன்னு சொன்னாங்க.

கம்பெனி மேல எனக்குக் கொஞ்சம் கோபம், வருத்தமெல்லாம் இருந்தது.

ஒண்ணுமில்ல, வீட்டில கொஞ்சம் பணம் கேட்டிருந்தாங்க. நான் முன்னூறு ரூபா கடனா கேட்டேன். சரின்னு தந்தாங்க. ஆனா, கூடவே ஒரு காகிதத்தை நீட்டி 'இதில ஒரு கையெழுத்து போடு'ன்னாங்க.

என்னன்னு பார்த்தா, 'மூணு வருஷம் கண்டிப்பா கம்பெனியில இருப்பேன்'னு அக்ரிமெண்ட்.

'நான் பத்து வருஷமா கம்பெனியில இருக்கேன்யா. இதுவரைக்கும் இப்படியெல்லாம் கேட்டதில்லியே... இப்ப என்ன திடீர்னு பழக்கம்?'னு நான் கேட்டேன்.

''அதெல்லாம் தெரியாது. வாத்தியார்தான் கையெழுத்து வாங்கச் சொன்னாரு.'' வேற வழியில்ல. கையெழுத்துப் போட்டேன்.

அப்போ சக்தி கிருஷ்ணசாமி எங்க கம்பெனியில மானேஜரா இருந்தார். நாங்கள்லாம் அவரை 'தங்கவேல் அண்ணன்'னு கூப்பிடுவோம்.

நாடகம் முடிஞ்சதும் எல்லாரும் ஒண்ணா சேர்ந்துதான் வீட்டுக்குப் போவணும். அவனவன் ரோல் முடிஞ்சதும் தனித்தனியா போயிட முடியாது. இதில எங்க கம்பெனி ரொம்ப ஸ்ட்ரிக்ட். தங்கவேல் அண்ணன் தியேட்டர்லியே தங்கியிருந்தாரு. ஆகவே, நான் என் ரோல் முடிஞ்சதும் அவரு ரூமுக்கு வந்து பேசிக்கிட்டிருப்பேன்.

இதில என்ன விஷயம்னா, அவரும் இன்னும் சில பேரும் கம்பெனிய விட்டு வெளியே போயி தனியா ஒரு கம்பெனி ஆரம்பிச்சு நடத்த பிளான் போட்டிருந்தாங்க போல, ஆனா சத்தியமா இந்த விஷயம் எனக்குத் தெரியாது. நான்பாட்டுக்கு அவரு ரூமுக்கு வருவேன். பேசிகிட்டிருப்பேன். டிராமா முடிஞ்சி எல்லாரும் வந்ததும் அவங்க கூட நாங்க தங்கியிருந்த இடத்துக்குப் போயிடுவேன்.

அதே போல ஆர்ட்டிஸ்ட் மாதவன் சீன் எழுதறப்போ, செட்டுக்குப் படங்கள் வரையறப்போ ஒரு ஆர்வத்தில அவருகிட்ட நின்னு பாத்துகிட்டிருப்பேன். சக்தி கிருஷ்ணனும் கூட மாதவனும் வெளியே போறதா இருந்த விஷயமும் எனக்குத் தெரியாது.

இதுக்கு நடுவில நான் ஊருக்குப் பணம் அனுப்பறதை நிறுத்திட்டேன். எங்க மாமா மிலிடரியிலிருந்து பணம் அனுப்ப ஆரம்பிச்

நான் வில்லன் இல்லை!

எம். என். நம்பியார் 7

சாரு. நான் நிறுத்திட்டேன். மாசா மாசம் சம்பளத்தை வாங்கி என் கையில சேர்த்து வச்சிருந்தேன்.

கணக்குப் பிள்ளைகிட்டே ஒரு நாள் போய், 'அண்ணே! நான் இன்னும் எவ்வளவு பாக்கி'ன்னு கேட்டேன்.

"நூத்திப் பத்து ரூபா தரணும்."

"சரி. இந்தாங்கன்னு அந்தப் பணத்தைக் குடுத்து ரசீது கொடுங்க"ன்னு கேட்டப்ப, "அதெல்லாம் முடியாதுப்பா. உன் கணக்கில வரவு வச்சிக்கிறோம்'னு சொன்னாரு. அது வரைக்கும் எனக்குத் தெரிஞ்சி அதிகப் பத்து வாங்கின எவரும் தானே முன்வந்து பணத்தைக் குடுத்ததா சரித்திரமில்லை.

ஆக, சக்தி கிருஷ்ணசாமி ரூம்ல தினமும் பேசிக்கிட்டிருந்தது, மாதவன் கூட சாப்பிட்டது, வாங்கின கடனை திருப்பிக் கொடுத்தது – இந்த மூன்று மடத்தனங்களால. 'ஓஹோ... இவனும் அவங்க கூட சேர்ந்து கம்பெனியை விட்டுப் போகப் போறான் போலிருக்கு'ன்னு சந்தேகப்பட வச்சிருக்கணும். அதனாலதான் வீட்டில இருந்து லெட்டர் ஒரு வாரத்துக்கு முன்னாடியே வந்திருந்தும் நாடகம் முடிஞ்ச பிறகுதான் என்னை ஊருக்கு அனுப்பினாங்க.

இந்தப் பின்னணியில நான் அண்ணனைப் பார்க்க ஊருக்குக் கிளம்பினேன். நான் உண்டியில பன்னிரண்டு ரூபா சேர்த்து வச்சிருந்தேன். கம்பெனியை விட்டுப் போற ஐடியா இருந்திருந்தா நான் அந்த உண்டியையுமில்ல எடுத்துக்கிட்டுப் போயிருப்பேன். அதைக் கம்பெனியிலேயே வச்சிட்டு, நல்ல டிரஸ்களையும் அங்கேயே வச்சுட்டுதான் கிளம்பினேன்.



பஸ்ஸில ஏறும் போது ரத்தினம்னு ஒருத்தர் – பின்னாடி தேவி நாடக சபை முதலாளியானாரு – அவர் ரகசியமா என்கிட்ட ஒரு லெட்டர் குடுத்தார். அது ரத்தினத்துக்கு தங்கவேலு அண்ணன் (சக்தி கிருஷ்ணசாமி) எழுதிய லெட்டர். அதில் 'நம்பியாரை நம்பித்தான் நான் புது கம்பெனி ஆரம்பிச்சிருக்கேன். அதனால நீ எப்படியாவது நம்பியாரை புதுக்கோட்டைக்கு அனுப்பு"ன்னு எழுதியிருந்தாரு.

நான் ரத்தினம் அண்ணன்கிட்ட சொன்னேன் : "எனக்கு இன்னும் இரண்டரை வருஷம் காண்ட்ராக்ட் பாக்கியிருக்கு. அது முடிஞ்ச பிறகுதான் பாக்கணும்."

"இல்லேப்பா... நீ அந்தக் கம்பெனிக்கு போகப் போறேன்னு எல்லாருக்கும் தெரியும். உன்னை நோட் பண்ணியிருக்காங்க" – அப்படின்னு ரத்தினம் சொன்னாரு.

"ஐயையோ... இப்ப நீங்க சொல்லித்தான் எனக்கே இப்படின்னு தெரியும். என்னண்ணே இது"ன்னு ஆச்சரியப்பட்டேன்.

இது மாதிரி பல தடவை நான் மாட்டிக்கிட்டிருக்கேன். ஒருதரம் எம்.ஜி.ஆருக்குக் கூட என் மேல அவநம்பிக்கை ஏற்பட்டுது. அதைப் பத்தி பின்னால சொல்றேன்.

ஊருக்குப் போய்ச் சேர்ந்தேன். மனசுக்குள்ளார போராட்டம். திரும்பவும் கம்பெனிக்கே போறதா, இல்லே சக்தி நாடக சபைக்குப் போறதான்னு குழப்பம்.

சக்தி கிருஷ்ணசாமி லெட்டர் எழுதினாரு. 'நீ புதுக்கோட்டைக்கு வரணும்'னு. 'காண்ட்ராக்ட் பாக்கியிருக்கண்ணே'ன்னு நான் பதில் எழுதினேன். அப்புறம் இன்னொரு லெட்டர் வந்தது. 'சரி... நீ கம்பெனிக்குத் திரும்பிப் போற வழியில புதுக்கோட்டைக்கு வந்துட்டுப் போ'. இது எனக்கு நியாயமாப் பட்டது. பஸ் செலவுக்கு ஐம்பது ரூபாவும் அனுப்பியிருந்தாரு.

அதே போல வாத்தியாரும் லெட்டர் எழுதினாரு. 'ஏன் லேட்? சீக்கிரம் வந்து சேர்.'

'உடம்பு சரியில்லே'ன்னு நான் பதில் போட்டேன்.

'உடம்பை பாத்துகிட்டு சீக்கிரம் வா'ன்னு அவரும் ஒரு அம்பது ரூபா அனுப்பிச்சாரு.

ரெண்டு அம்பது ரூபாவையும் வாங்கி வச்சிகிட்டேன்.

எத்தனி நாளைக்குதான் ஊர்லேயே இருக்க முடியும்?

திருவனந்தபுரத்துக்குப் போற வழியில



''நீங்க எதுக்காக மூணு தடவை கல்யாணம் பண்ணிக் கிட்டீங்க?''

''என் ஜாதகப்படி மூன்றாவது கணவர்தான் என்கூட கடைசி வரை இருப்பார்னு ஜோஸியர் சொன்னாரே!''

— ஏ.ஜி. வல்லபதாஸ்



அந்த சலூன் கடைக் காரருக்கு ஞாபக மறதி ஜாஸ்தி!''

''எப்படிச் சொல்றீங்க?''

''என்னோட தலைக்கு ஷேவிங்கும், தாடிக்கு கட்டிங்கும் பண்ணி அனுப்பிட்டார்!''

— கொங்கணாபுரம் வே. செந்தில்

புதுக்கோட்டைக்கு வந்தேன். அங்க பார்த்தா பழைய பண்டாரங்க கோஷ்டியே இருந்தது. என்னைப் பார்த்ததும், 'நம்பியார்... இங்கேயே தங்கிடுப்பா'ன்னு ஒரே கோரஸ். எல்லாரும் எங்கூட நடிச்சவங்க.

'இந்தக் கம்பெனி ரொம்ப நல்ல கம்பெனிப்பா. ஒரு ரூபா வந்தா மூணு அணா மேனேஜிங் டைரக்டருக்கு. ரெண்டணா ஆர்ட்டிஸ்டுகளுக்கு, மூணு அணா ஃபைனான்ஸ் பண்றவங்களுக்கு. மீதி எட்டு அணா நமக்கு. அதாவது தொழிலாளர்களுக்கு' அப்படீன்னாங்க. எனக்கு ஒரே ஆச்சரியம். ஒரு ரூபாய்ல பாதி தொழிலாளர்களுக்குன்னா கம்யூனிஸம் உள்ளாரயே இருக்கே. பரவாயில்லையே'ன்னு மனசு அலைபாய ஆரம்பிச்சது.

சரின்னு நான் புதுக்கோட்டையிலேயே தங்கினேன். ராஜமாணிக்கம் பிள்ளை கம்பெனி என் வாழ்க்கையில முதல் அத்தியாயம்னா சக்தி நாடக சபை ரெண்டாம் அத்தியாயம்.

புதுக்கோட்டையில நாடகம் தயார் பண்றது சுலபமா இருந்தது. ஏன்னா நாங்க நாடகக்காரங்க இருந்தது யாருக்கும் தெரியாது. அக்ரஹாரம் கடைசியில ஒரு ஏரி பக்கத்தில இருந்தோம். சீன் எழுதறது, செட் தயார் பண்றதுல்லாம் யாருடைய தொந்தரவும் இல்லாம நிம்மதியா செய்ய முடிஞ்சது. கவியின் கனவு, விதின்னு இரண்டு நாடகங்கள் தயார் பண்ணி நாகப்பட்டினத்தில தான் முதன் முதல்ல அரங்கேத்தினோம்.

அங்கே சக்தி நாடக சபா ஒரு புதுமை பண்ணாங்க. பொதுவா டிராமா ஸ்டேஜ் 26 அடிதான் இருக்கும். ஆனா இவங்க அறுபது அடியில ஸ்டேஜ் பண்ணி அதில நாலு பில்லர். ஒரு பில்லரை நகத்தினா அங்கே ஒரு சீன் நடக்கும். அப்புறம் இந்த மூலையில் ஒரு பில்லர் நகத்தினா அங்கே ஒரு சீன். இப்படி அப்ப வரைக்கும் யாருமே செய்யாத புதுமையை மேடையில பண்ணாங்க.

நாகப்பட்டினத்தில ஒரு வேடிக்கை என்னன்னு கேட்டா நாடகத்துக்கு வர உள்ளூர் ஜனங்க கம்மி. தஞ்சாவூர்ல ஒரு ட்ரெயின் கிளம்பி நாகப்பட்டினத்துக்கு பத்தே முக்கால் மணிக்கு வரும். அப்பதான் நாங்க ஃபர்ஸ்ட் பெல் அடிப்போம். டிரெயினை விட்டு அவங்க இறங்கி வந்து டிக்கெட் வாங்கறப்போ செகண்டு பெல். உள்ள வந்து உட்கார்ந்ததும் தேர்ட் பெல். இப்படி ரசிகர்கள் வசதியைப் பாத்து டிராமா போட்டோம். கடைசியில அந்த டிரெயினுக்குப் பேரே 'கவியின் கனவு ட்ரெயின்'னு ஆயிடுத்து.

'கவியின் கனவு' டிராமா போட்ட சமயம் ஒருநாள் எனக்குக் கடுமையா வயித்து வலி வந்துடுச்சி. அது என்ன வலின்னு இன்னிக்கு வரைக்கும் தெரியல்ல. வலியைப் பொறுத்துக்கிட்டே ரெண்டு நாள் ஆக்ட் பண்ணேன். ஒருநாள் - அன்னிக்கு புதன்கிழமை - வலி தாங்க முடியாம ஒரு ஆஸ்பத்திரிக்குப் போனேன் - அது மூடியிருந்ததால பெரிய ஆஸ்பத்திரிக்குப் போனேன். அந்த டாக்டருங்க 'கவியின் கனவு' நாடகம் பாத்துட்டு மயங்கிப் போயிருந்த காலம் அது.

என்னைப் பார்த்ததும் அந்த சர்ஜனுக்கு ரொம்ப

சந்தோஷம். அவரு பேரு கே. கே. நம்பியார். ஆர்மியில இருந்து வந்தவர்.

அவரு என்னை சோதிக்கப் பார்த்தார்.

'இது அப்பெண்டிசிடிஸ்' அப்படீன்னார்.

'என்ன நகரங்க பேரையெல்லாம் சொல் றீங்க?'ன்னு நான் கேட்க, அவர் சிரிச்சிட்டாரு.

'ஆபரேஷன் பண்ணிடலாம்'ன்னார்.

'ஐய்யோ... இன்னிக்கு நாடகம் இருக்கு ஸார். முதல் சீன் என்னோடையது.'

'நத்திங் டூயிங்... கூப்பிடு உங்க முத லாளியை.'

'அவரு ஊர்ல இல்ல ஸார்... தஞ்சாவூர் போயிருக்கார்..' அவரே முதலாளிக்கு ஒரு தந்தி யைக் குடுத்திட்டு என்னை ஆபரேஷனுக்கு அழைச்சிட்டுப் போனாரு. அப்பல்லாம் ஆபரே ஷன்னா எழுந்து நடக்க பத்து நாள் ஆயிடும்.

நான் பதினோறாவது நாள் எழுந்து நின் னப்போ ஏதோ ஆகாசத்தில பறக்கிற மாதிரி இருந்தது. கால் தரையில பாவல்ல. அப்படி ஆயிடுச்சி.

நான் அப்ப ஆஸ்பத்திரியில இருந்தப்ப தின மும் ஒருத்தர் என் பக்கத்திலேயே உட்கார்ந் திருப்பாரு. 'என்னை உங்களுக்குத் தெரியாது. ஆனா உங்களை எனக்குத் தெரியும்'னு சொன்னாரு. அவரு ஒரு நாடகப் பைத்தியம். என்னை அவருக்கு ரொம்பப் பிடிச்சுப் போயிருக்கனும்.

வீட்டுக்குப் போவாரு. சாப்பிடுவாரு. வந்து என் பக்கத்தில உட்கார்ந்துப்பார்.

"உங்க தகுதிக்கும் புகழுக்கும் ஏத்த மாதிரி உங்களை உங்க கம்பெனியில கவனிக்கலீங்க" அப்படீன்னு சொல்வாரு.

"அடடே... அப்படி இல்லீங்க.. நல்லாதான் கவனிக்கிறாங்க"ன்னு நான் சொல்வேன்.

"உங்களுக்கு என்ன வேணும்னு சொல் லுங்க?"

"நான் பேப்பர் பைத்தியம். நியூஸ் படிக் கனும். ஏதாவது பேப்பர் கிடைச்சா தேவலை"ன்னதும் மறுநாள்ல இருந்து என்னென்ன பேப்பர் வந்துதோ அவ்வளவும் என் பெட்ல இருந்தது.

நாடகமெல்லாம் முடிஞ்ச பிறகு ஒருநாள் அவர் எங்க கம்பெனிக்கு ஒரு பிரமாதமான விருந்து வச்சார்.

அப்ப எனக்கு அஞ்சு பவுன்ல ஒரு செயின் பண்ணி பரிசா கொடுத்தார்.

நாடகக் கம்பெனியைப் பொறுத்தவரைக் கும் அது ரொம்பத் தப்பான ஒரு விஷயம்.

ஏன்னா யார் பரிசு கொடுத்தாலும் அதைக் கம்பெனிக்குத்தான் செய்யனுமே தவிர தனிப் பட்ட ஒரு நடிகனுக்குச் செய்யக் கூடாதுன்னு ஒரு வழக்கம். ஏன்னா மத்தவங்களுக்குக் கஷ்டமா இருக்கும் இல்லியா?

ஆனா நான் எல்லாருக்கும் வேண்டியவனா இருந்ததால எனக்கு செயின் போட்டது பத்தி யாரும் ஏதும் ஆட்சேபணை சொல்லலே.

ருத்ராபதி பிள்ளைன்னு அவருக்குப் பேரு. மீனவ சமுதாயத்தில பெரிய ஆளு. அவரை என்னால என்னிக்கும் மறக்க முடியாது.

என்னோட நண்பன் - எனக்கு ராஜ மாணிக்கம் கம்பெனியிலேயே சீனியர் - முத்து கிருஷ்ணன்னு பேர் - அவரைப் பத்தி இங்கே கொஞ்சம் சொல்லனும். அவர் ஒரு நல்ல வில்லன்.

(தொடரும்)

படம் : **யோகா**

யாருக்கு சுதந்தரம்?

சுதந்திர தின பொன் விழா கொண்டாடும் இத் தருணத்தில் அரசியல் ரீதியாக நாம் எவ்வளவு தாழ்ந்து விட்டோம் என்று பாருங்கள்.



கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட 13,952 வேட்பாளர்களில் சுமார் 1500 பேர் மீது கொலை, கொள்ளை, கற்பழிப்பு வழக்குகள் உள்ளன! இதில் உ.பி. மாநிலத்தவர் 520 பேர். அடுத்து பீகார் மாநிலத் தில் 350 பேர்!

தற்போதைய மக்களவை உறுப்பினர்களில் சுமார் 40 பேர் கிரிமினல்கள்! இந்தியா முழுவதுமுள்ள 4072 எம்.எல்.ஏ.க்களில் சுமார் 700 எம்.எல்.ஏ.க்கள் மீது கிரிமினல் வழக்குகள் நடந்து கொண்டிருக்கின்றன!

சுதந்தரம் இந்திய மக்களுக்கா? கிரிமினல் களுக்கா?

ஆதாரம்: ஹிந்து.

— சம்பத்குமாரி.



மேஷம் :

கொடைக்கானல் மலைப்பாதை மாதிரி இந்த வாரம் உங்க லைஃ புல சில திருப்பங்கள் வரப் போவுது. ஆனா அங்க நடக்கறாப்பல விபரீத விபத்து ஒண்ணும் இல்லை. இது நல்ல திருப்பமா இருக்கும். இதுநாள் வரைக்கும் லேசா உரசிட்டிருந்த புருஷன் - பொண் ஜாதி உறவுக்கு கிரீஸ் கிடைக்கும். திடீர்னு பக்தி மார்க்கத்துல மனசு போகும். வீட்டுல சந்தோஷம் தாண்டவமாடும். பொண்ணுங்களுக்கு மட்டும் கொஞ்சம் உடம்பு சரியில்லாமல் போவலாம். பார்த்துக்கங்க.

ரிஷபம் :



ரஜினிகாந்த் படம் மாதிரி உங்க வெற்றியும் கேரண்டியான விஷயம் சார்! இந்த வாரம் நீங்க எதிர்பார்க்கற எல்லாமே எதிர்பார்த்தபடி நடந்துரும். அப்புறம் ஜாலிக்கு என்னா குறைச்சல்! பணப்பற்றாக்குறை இருக்காதுன்னாலும் முதல் மூணுநாள் மட்டும் ஆபீஸ், மத்த புழங்கற இடங்கள்ள கொஞ்சம் கவனமா இருக்கணும். கடன் கேட்டு நச்சரிப்பாங்க. இல்லாட்டி பிள்ளையார் கோவில் நன்கொடை, பூப்புனித நீராட்டுவிழா மொய் அப்படி இப்படின்னு கொஞ்சம் கரையலாம். சம்சாரத்தோட சிறு ஊடல் வரும். சரியாப் போயிடும்.

மிதுனம் :



இந்த வாரம் கொஞ்சம் பணப் பிரச்னை இருக்கும். கடன் பாக்கி இருந்தா, இழுத்தடிக்கும். ஆனா மத்த விஷயங்கள் நல்லாவே இருக்குது. மேலதிகாரிகள் சப்போர்ட் இருக்கும். சில பயணங்களும் இருக்கலாம். எப்பவும் நிதானம் தவறாம இருக்க வேண்டியது முக்கியம். சும்மா தேவையில்லாத விஷயத்துக்கெல்லாம் மனசைப் போட்டுக் குழப்பிக்காதீங்க.

கடகம் :



ஜாலியான வாரம் தான். வீட்டுலயும் சரி, வெளியிலயும் சரி - சிக்கலில்லாத சமயம் இது. நைசா, யாரால என்ன காரியம் ஆவணுமோ, இப்பவே கேட்டு முடிச்சிக்கங்க. சில பேருக்கு உத்தியோக ரீதில இட மாறுதல் இருக்கலாம். குறிப்பா இந்த ராசிக்கார அரசியல்வாதிங்களுக்கு இப்ப ஊர் ஊரா ரவுண்ட் அடிக்கற டயம்.

சிம்மம் :




உங்க முக வசீகரம் இருக்கே, அதாங்க உங்க பிளஸ் பாயிண்ட். இந்த வாரம் உங்க மூஞ்சியப் பார்த்து மயங்கி(!)யே எல்லாரும் நீங்க சொல்றதக் கேப்பாங்க. நாய்க்குட்டி மாதிரி உங்களை சுத்தி சுத்திவர ஒரு கூட்டம் தயாரா இருக்கும்! ஆனா, சொந்தத் தொழில் பண்றவங்க மட்டும் கொஞ்சம் சாக்கிரதையா இருக்கணும். அசந்தா கவுக்கவும் ஒரு கூட்டம் காத்துட்டிருக்குது. வீட்டுல, அம்மாவுக்கு கொஞ்சம் உடம்பு படுத்தும், ஒழுங்கு மரியாதையா ஆசுபத்திரிக்குக் கூட்டிட்டுப் போய் செக் பண்ணுங்க. பணம் அவ்வளவா கையில நிக்காது, ஜாக்கிரதை!

நடத்துமென்பார், நடத்தும்!




விருச்சிக ராசிக்காரரான பிலிம் நியூஸ் ஆனந்தனுக்கு இந்த வாரம் அலைச்சல் அதிகம். பிள்ளையால் எதாச்சும் சந்தோஷ சமாசாரம் நடக்கலாம்! என்ன பண்ணப் போறீங்க, டயமண்ட் பாபு?

கன்னி :



இந்த வாய்ச்சாலம்னு வாங்களே, உங்க சொத்தே அதான்! எல்லாரையும் மயக்கறாப்பல பேசிப் பேசி வேலையை முடிச்சிக்குவீங்க. ரைட்டா? இந்த வாரம் அரசாங்கத்தால ஏதோ நன்மை நடக்கப் போவுது. வீட்டுல விசேஷம் வேற! திரவப் பொருள்களால ஆதாயம் இருக்குது. (ராமர் பிள்ளை என்ன ராசிங்க?) பெண்கள் மட்டும் கொஞ்சம் உஷாரா இருக்கணும். வாயைக் கொடுத்து வம்பு விலைக்கு வாங்கிப் பீங்க!

துலாம் :



இந்த ராசிக்கார விவசாயிங்களுக்கு இப்ப டயம் நல்லா இருக்குது. விளைச்சல் அமோகமா இருக்கும். அதே போல கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக் தொழில்ல இருக்கறவங்களும். வீட்டுல, அண்ணன் தம்பிங்களுக்குள்ளார எதாச்சும் மனஸ்தாபம் பரவலாம். பொதுவா எதிலும் அவசரப்படாம செயல்பட்டீங்கன்னா ஜெயிக்கலாம். ஷேர் கீர் வாங்காதீங்க. ஊத்திக்கும்!

விருச்சிகம் :




கிரக நிலைமை ஒண்ணும் சரியில்லை. வீண் அலைச்சல், பண விரயம்னு செமை மோசமா இருக்குது. தூக்கம் இல்லாம சிரமப்படுவீங்க. தொழிலதிபர்களுக்குக் கொஞ்சம் கூடுதல் பிரச்னைகள் வரலாம்! எதிரிங்க எந்தப் பக்கத்துலேருந்து வருவாங்கன்னே சொல்ல முடியாது. ஜாக்கிரதை! ஒரே ஆறுதல் - பிள்ளைகள் மூலம் எதாச்சும் மகிழ்ச்சியான சம்பவங்கள் நடக்கலாம்.

தனுசு :



வேலை இல்லாம திண்ணையத் தேச்சிட்டிருக்கற இந்த ராசி இளைஞர்களுக்கு இந்த வாரம் வேலை வாய்ப்பு பிரகாசமா தெரியுது. புதுசா தொழில் தொடங்கினாலும் ஒர்க் அவுட் ஆகும். பெண்களுக்குப் புதிய நகை வாங்கற சான்ஸ் இருக்குது. நீண்ட நாளா குழந்தை இல்லாதவங்க இப்ப அந்த பாக்கியம் பெறலாம்! நல்ல காரியத்துக்காக யாராச்சும் பண உதவி கேட்டா, மறுக்காம செய்ங்க. பலன் டபுளா கிடைக்கும்! அதுவும் உடனே.

மகரம் :



பயணங்கள் முடிவதில்லை - இந்த வாரம் உங்களுக்கு! ஊர் சுத்தற ராசி. ஜாலியா சுத்திட்டு வாங்க. வீட்டுல சில நல்ல காரியங்களெல்லாம் நடக்கப் போவுது. நீங்க எதிர்பார்த்துட்டிருந்த ஃபாரின் சான்ஸ் கிடைக்கப் போவுது. ஆனா அப்பா உடல் நலன் கொஞ்சம் சரியா இருக்காது. பக்கத்துல இருந்து கவனிச்சிக்கங்க. ஷேர்மார்க்கெட் பக்கம் மட்டும் இப்ப போக வேணாம். போணியாவாது. மத்தபடி பக்தி மார்க்கத்துல கொஞ்சம் மனசு லயிக்கும். அது நல்லதுக்குத்தான்!

கும்பம் :



பெண்களுக்கு இப்ப போறாத காலம். உடம்பு ரொம்பப் படுத்துமே! அடுத்த வாரம் சரியாயிடும் பாருங்க. நீங்க எதுலயும் நிதானம் கடைபிடிக்கறது ரொம்ப நல்லது! இந்த வாரம் மொத மூணுநாள் கொஞ்சம் இழுபறியாவே இருக்கும். என்னடா இது, நேரம் இப்படிப் படுத்துதேன்னு கவலைப் படுவீங்க. ஞாயித்துக் கிழமைலேருந்து நிலைமை சரியாயிடும். அப்புறம் ஓஹோ!

மீனம் :



சில பேருக்கு ஃபுட் பாய்ஸன் ஆகி, வாந்தி, பேதின்னு தேக நலன் பாதிக்கப்படும், இந்த வாரம். அதே மாதிரி கரண்ட், நெருப்பு விஷயத்திலும் ஜாக்கிரதையா இருக்கணும். மத்தபடி நல்ல வாரம்தான். உத்தியோகஸ்தர்களுக்கு சீரான வாழ்க்கையா இருக்கும். பிசினஸ்காரங்களுக்கும் பரவாயில்லை. பேச்சைக் குறைச்சி, செயல்ல காட்டினீங்கன்னா, ஜெயிப்பீங்க! ரொம்ப விவாதம் வளர்றாப்பல எதாச்சும் சூழ்நிலை உருவானா, சைலன்ட்டா எழுந்து போயிடுங்க. உங்களோட முதல் எதிரி இந்த வாரம் உங்க வாய்தான்!



காதல் ரசாயனம்

- உன்்னை எனக்காக வாங்கியபோது
  என்னை
  உன்னிடம் விற்றுவிட்டேனே!
- இல்லற ஆலமரக் கிளைபரப்பி
  நிழலில் உன்னை
  அமர்த்த நினைத்தேன்;
  நானே உன் நிழலாகிப் போனேனே!
- காதல் சூரிய கதகதப்பில்
  உன்னை வைத்திருக்க விரும்பினேன்;
  தண்ணென்ற உன் வெண்ணிலாப் பொழிவில்
  குளிர்ந்து கிடக்கிறேனே!
- சுமை தாங்கிக் கல்லாய்
  நான் மாறி
  நீ கிளைப்பாறும் இடமாய் இருக்க
  ஆசைப்பட்டேன்;
  நானே உன் கையணைப்பில்
  ஓய்வெடுக்கிறேனே!
- பொங்கும் காவிரியாய்
  நான் உருவெடுத்து
  நீ நீந்திக் களிக்க மனம் கொண்டேன்;
  உன் முக அல்லியில்
  பனித் துளியாய் என்னை
  ஜ்வலிக்க வைத்து விட்டாயே!
- எனது கிரீடத்தின் மணிவைரமாய்
  உன்னைப் பதிக்கத் துடித்தேன்;
  உனது காற்சலங்கையின் சரமணியாய்
  நானே மாறி விட்டேனே!
  அகத்தியக் குறுமுனி வாமன அவதாரம் எடுத்ததுபோல்
  விசுவ ரூபம் எடுத்தவளே!
  காதல் ரசாயனம் பொல்லாததுதான்!

— **ஜெ. கமலநாதன்**

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Annual Subscription : India Rs. 208/-; Overseas Rs. 1200/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 104/-; Overseas Rs. 600/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registere
post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 161 * Regis
Licensed to
ka

இந்தியாவின் மிகப் பெரிய கடைகள்

சரவணா ஸ்டோர்ஸ்

தங்கநகைகள் ✧ பட்டு ஜவுளிகள் ✧ பாத்திரங்கள்

ரெங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை-17.

தங்க, வெள்ளி நகைகளுக்கு செய்கூலி இல்லை

பழைய பொன் நகைகளை கொடுத்து புன்னகையோடு புதிய பொன் நகை பெறவும்.

22 ct. தங்கம்
1 கிராம் ரூ.411
(விலை மாற்றம் உண்டு)



நாங்கள் விற்கும் தங்க நகைகள் மற்ற எந்த கடைகளையும் விட உயர்வான தரம் என்று சவால் விட்டு உறுதி கூறுகிறோம்.

பட்டு
புடவைகளுக்கு
10% தள்ளுபடி

ஜவுளிகள்,
ரெடிமேட் ஆடைகள்,
பாத்திரங்கள், டி.வி.
ரேடியோ, ஃபிரிஜ், ஃபேன்

WE ACCEPT VISA,
MASTER
CARDS ONLY

ஞாயிறு விற்பனை உண்டு

L.R.SWAN